# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 495 | 1999 ஏப்பிரல் | ரூபா 8.00

JAFFNA

உள்ளே

- இனவாத யுத்தச் செலவு ஒரு இலட்சம் கோடியைத் தாண்டுகின்றது ....... 2
- அரசாங்கத்தையும் நிர்வாகத்தையும் நீதிமன்றத்தையும் அம்பலமாக்குகின்றது ..... 3
- அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி அலைகளின் முரண்பாடுகளின் அர்த்தம் என்ன? . 4
- பொது மக்களுக்கு எதிரான தாக்குதலை உக்கிரமாக்கும் துரும்பு ........................ 6-7
- பூகோளமயமாக்கமும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கமும் ........................ 8
- சமசமாஜ கட்சியும் வடமேல் மாகாண காடைத்தனங்களும் ........................ 12
- இனவாத யுத்தத்தில் சிக்கித் தவிக்கும் வடக்கு மக்கள் வாழ்வு 10–12 பக்கம்

# அமெரிக்காவின் அடுத்த குண்டுத் தாக்குதல் யாருக்கு?

அமெரிக்காவின் தலைமையில் யூகோசலாவியா மீது இடம்பெற்றுள்ள குண்டுத் தாக்குதல் அமெரிக்கா உலகளாவிய ரீதியில் நடாத்திவந்த இராணுவத் தாக்குதலில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்துள்ளது. இந்தக் குண்டுத்தாக்குதலை நியாயப்படுத்த அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனாலும் மற்றும் அமெரிக்க அதிகாரிகளாலும் வழங்கப்பட்ட காரணங்களில் யூகோசலாவியாவின் தேசிய இறைமை புறக்கணிக்கப்பட்டுள்ளது.

கொசோவா நீண்ட காலமாகவே யூகோசலாவியாவின் ஒரு பகுதியாக விளங்கியது என்பதை அங்கீகரிக்கச் செய்ய எவரும் சேர்பியன் சர்வாதிகாரியும் யூகோசலாவியா ஜனாதிபதியுமான சுலோபோடன் மிலோசோவிக்கின் ஆதரவாளராக விளங்க வேண்டியதில்லை. இன்றைய யுத்தம் ஒரு புதிய முன்மாதிரியை ஸ்தாபிதம் செய்துள்ளது. அதாவது: மிகவும் சக்திவாய்ந்த முதலாளித்துவ வல்லரசுகள் எல்லாவற்றுக்கும் மேலாக அமெரிக்கா தனது சொந்த எல்லைக்குள் கடைப்பிடிக்கும் கொள்கைகளின் பேரில் ஒரு நாட்டை இராணுவ ரீதியில் தாக்குதவதை ஸ்தாபிதம் செய்துள்ளது.

இந்தப் புதிய கோட்பாடுகள், ஈடாட்டம் கண்டதும் கடைகெட்டதுமான விளைவுகளைக் கொண்டது. ஒரு தசாப்தம் கழிவதற்கு முன்னர் வாஷிங்டன் ஈராக்குக்கு எதிராக நடாத்திய தனது ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த பாக்தாத் குவைத்துக்கு எதிரான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதே காரணம் என்ற வாதத்தை முன்வைத்தது. மேலும் ஜோர்ஜ் புஷ் நிர்வாகம் வளைகுடா யுத்தத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரம் என்ற முடுதிரை அவசியம் எனவும் கண்டது. இன்று அத்தகைய ஒரு அனைத்துலகச் சட்ட விதிகள் கடைப்பிடிக்கப்படுவதாக இல்லை.

அப்படியானால் வாஷிங்டன் இன்றைய யுத்தத்தைத் தொடுத்ததற்கான முக்கிய அடிப்படைக் காரணம் என்ன? மார்ச் 24ம் திகதி இரவு கிளின்டன் வெள்ளை மாளிகையில் நிகழ்த்திய உரையில் கொசோவா மாகாணத்தில் அல்பேனியன் இனக்குழுவுக்கு எதிரான பெல்கிரேட்டின் அடக்குமுறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க நேட்டோ (NATO) தலையீடு அவசியமாகியுள்ளது என்ற பாணியில் குண்டுவீச்சுப் பிரச்சாரத்தை நியாயப்படுத்தினார்.

பால்கன் மோதுதல்கள் தொடர்பான கிளின்டனின் வெறிபிடித்த வரலாறானது இந்தப் பிராந்தியத்தில் முரட்டுத்தனமான உள்நாட்டு யுத்தத்தைத் தொடரும் அமெரிக்காவினதும் ஜேர்மனியினதும் மற்றும் மேற்கத்தைய நாடுகளதும் நச்சுத்தனமான பாத்திரத்தையும் போசோவின் இரக்கமின்மைக்கு எதுவிதத்திலும் குறையாத விதத்தில் இனக்குழுச் சுத்திகரிப்புக் கொள்கையைக் கடைப்பிடித்த குரோஷியன் பிரான்ஜோ ருட்ஜ்மன் போன்ற கொடுங்கோல் ஆட்சியாளர்களுக்குத் தமது தொடர்ச்சியான ஆதரவையும் புறக்கணித்துவிட்டன.

ஆனால் ஒருவர் கிளின்டனின்

19ம் பக்கம் பார்க்க

### மாகாண சபைகளின் தேர்தல் மோசடியின் கீழ்

# பிற்போக்காளர்கள் அணிதிரள்கின்றனர்

## ஆசிரியர் குழு அறிக்கை

ஏப்பிரல் மாதம் 6ம் திகதி இடம்பெற உள்ள மாகாண சபைத் தேர்தலை ஜனநாயக ரீதியில் நடாத்துவதற்கான முறையையும் விதிமுறைகளையும் பற்றி பொதுஜன முன்னணி, யூ.என்.பி., ஜே.வீ.பி., நவசமசமாஜக் கட்சி தலைமையிலான புதிய இடதுசாரி முன்னணியும் இன்னும் பல கட்சிகளும் காதடைக்க வைக்கும் கூச்சல்களில் ஈடுபட்டுள்ளன. இந்தக் கருத்தைத் தலைமேல் வைத்துக் கொண்டாடுவதற்காக இக்கட்சிகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் கூட்டப்பட்டு, அவரின் தலைமையில் நடாத்தப்பட்ட "சர்வ கட்சி தேர்தல் கமிட்டி"யையும் அமைத்துக் கொண்டுள்ளன.

மாகாண சபை தேர்தல் தொடர்பான தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் நிலைப்பாடு என்ன? இதை அதன் வரலாற்றை ஆய்வு செய்வதன் மூலம் மட்டுமே நாம் எடுக்க முடியும்.

### மாகாண சபைகளின் வரலாறு

மாகாண சபைகள் முறையின் மூலம் ஜனநாயகத்தைக் காப்பதும் மாகாண சபைகள் தேர்தலை ஜனநாயக ரீதியில் நடாத்துவது பற்றிய கோஷங்களும் தலை முதல் அடிவரை படு மோசடியானவை. 1987 இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் மாகாண சபைகள் ஸ்தாபிதம் செய்யப்பட்டது. வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் தேசிய இனத்தினருக்கு "அதிகாரத்தை பங்கிட்டு" தேசிய இனப்பிரச்சினைக்கு ஜனநாயகத் தீர்வு வழங்குவதாகக் கூறும் அப்பட்டமான பொய்யின் அடிப்படையிலாகும். அந்தப் பச்சைப் பொய் தவிடுபொடியாகும் விதத்தில் இந்திய இராணுவத்தின் உதவியோடு அமைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபை இரண்டு வருட காலத்துக்குள்ளேயே அதாவது 1989ல் கலைக்கப்பட்டது. அன்றில் இருந்து இன்று வரை அங்கு தேர்தலும் கிடையாது. மாகாண சபையும் கிடையாது. இம்முறை ஏனைய மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறுவது, வடக்கு கிழக்கு மாகாணங்களை மீண்டும் இரண்டு தனித் தனி மாகாணங்களாகப் பிரித்து, இராணுவ ஆதிக்கத்தின் கீழ் விஷேட ஆணையாளர்களின் நிர்வாகத்தின் கீழ் அவற்றைக் கொணர்வதற்கான திட்டம் பற்றி அரசாங்கம் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டுள்ளதாகக் கூறும் செய்திகள் வெளிவந்துள்ள ஒரு நிலையிலாகும். அவ்வாறே முதலாளித்துவ ஒற்றையாட்சி முறையைக் காக்கும் பொருட்டு இடம்பெறும் இனவாத யுத்தம், பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் மேலும் விஸ்தரிக்கப்பட்டு, வன்னியில் 17 கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த 10000 தமிழ் மக்கள் புதிய 'ரணகோசா' யுத்தத்தினால் அகதிகளாக்கப்பட்டுள்ள ஒரு நிலையிலேயே இந்த மாகாண சபைத் தேர்தல் நடைபெறுகின்றது.



முதலாளித்துவ, முதலாளித்துவச் சார்பு கட்சிகளின் பிற்போக்கு கூட்டு வளர்ச்சி காணும் இலட்சணம்: எப்பிரல் 6 மாகாணசபைத் தேர்தலின் முதல் அமைச்சர் வேட்பாளர்கள் கைகோர்த்து நிற்கின்றனர். (இ-வலம்) பொ.ஜ.மு.யின் சுசில் பிரேம ஜயந்த, எம்.ஈ.பி. பந்துல குணவர்தன, யூ.என்.பி.கரு ஜயசூரிய, லிபரல் கட்சியின் எச்.பீரிஸ், புதிய இடதுசாரி முன்னணியின் விக்கிரமபாகு கருணாரத்ன, ஜே.வீ.பி. விமல் வீரவங்ச சமாதான தேர்தலுக்கு சபதம் செய்து, கைகோர்த்து கொண்ட விதம்

1987ல் இந்திய இலங்கை உடன்படிக்கை ஜயவர்தன ராஜீவ் காந்தி அரசாங்கங்களிடையே கைச்சாத்தான போது அது தமிழ், சிங்கள தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான பரந்த எதிர்ப்புரட்சி மூலோபாயத்தின் ஒரு பாகமாகும் எனச் சுட்டிக்காட்டியது, சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமேயாகும். இந்தியப் பிரதமரான ராஜீவ் காந்தி இலங்கையின் ஜனாதிபதி ஜயவர்தனவையும் சேர்த்துக் கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பையும் அணிதிரட்டிக் கொண்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பை நடாத்தவே இந்த உடன்படிக்கையை திணித்தார் என்பது இன்று வரலாற்றில் இடம்பெற்றுவிட்டது. இந்த ஆக்கிரமிப்புக்கு சோவியத் யூனியனின் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினதும் அமெரிக்க அரசாங்கத்தினதும் அங்கீகாரம் கிடைத்தது. இந்த ஆக்கிரமிப்பின் இலக்காக இருந்தது, தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் எதிர்ப்பினாலும் வர்க்கப் போராட்டத்தின் அபிவிருத்தியினாலும் ஈடாட்டம் கண்டுபோய்க் கிடந்த இலங்கை முதலாளி வர்க்க ஆட்சியைக் காப்பதேயாகும். இந்தப் பிற்போக்குத் திட்டங்களில் ஒரு பாகமாக தமிழ், சிங்களத் தேசிய இனங்களுக்கு இடையே மோதுதல்களை மேலும் உக்கிரமாக்கவும் மற்றும் மக்கள் பகுதியினரிடையே பிரிவினைவாதத்தை போஷித்து வளர்க்கவும் மாகாண சபைகள் திணிக்கப்பட்டன. இந்தப் பிற்போக்கு வேலைத்திட்டங்கள், வடக்கு கிழக்கு மாகாணங்களில் சுமார் 20000 தமிழ் மக்களை இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தினைக் கொண்டும் தென் மாகாணங்களின்

17ம் பக்கம் பார்க்க

**இனவாத யுத்தம் வேண்டாம்!**

**சிங்கள– தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர் பாதை

ஆசிரியர்: கே. ரத்னாயக்க
துணை ஆசிரியர்: எஸ். இராசேந்திரன்
பதிப்பாளர்: தீபால் ஜயசேகர
சோசலிச சமத்துவக் கட்சியின்
பொதுச் செயலாளர்: விஜே டயஸ்
அலுவலகம்:
90, 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை
கொழும்பு - 10.
தொலைபேசி: 682220

# இனவாத யுத்தச் செலவு ஒரு இலட்சம் கோடியைத் தாண்டுகின்றது

இனவாத யுத்தத்தை நடாத்தும் பொருட்டு யூ.என்.பி. பொதுசன முன்னணி அரசாங்கங்கள் இரண்டும் 1996ன் இறுதியில் இந்நாட்டின் 18மாதகால மொத்த தேசிய உற்பத்திக்குச் சமமான பிரமாண்டமான தொகையை பாழடித்துள்ளன. 1996ல் இலங்கை மொத்த தேசிய உற்பத்தியின் மதிப்பு ரூபா.789.9பில்லியன்களாக விளங்கியது. இத்துடன் மேலும் ஆறு மாதங்களுக்கான மொத்த தேசிய உற்பத்தியின் பெறுமதியையும் சேர்த்தால் இந்த இனவாத அரசாங்கங்கள் இரண்டும் 1996ன் இறுதியில் 1153 பில்லியன் ரூபாக்களை அதாவது, 1,15,300 கோடி ரூபாக்களை யுத்தத்துக்காக செலவிட்டுள்ளது.

இலங்கைப் பொருளியலாளர் சங்கத்தினால் சமீபத்தில் நடாத்தப்பட்ட கருத்தரங்கொன்றில், கொள்கை ஆய்வுகள் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கலாநிதி.சமன் கெலேகம இத்தகவல்களை வெளியிட்டுள்ளார்.

"யுத்தத்துக்கான மொத்தச் செலவு 1996ன் மொத்தத் தேசிய உற்பத்தியின் பெறுமதியின் நூற்றுக்கு 160வீதமாகும். இதன் அர்த்தம் என்ன? ஒரு ஆண்டினதும் மற்றொரு அரை ஆண்டினதும் தேசிய உற்பத்தி எமக்கு இல்லாது போயுள்ளது." எனக் கலாநிதி. கெலேகம குறிப்பிட்டுள்ளார்.

## யுத்தச் செலவு

யுத்தச் செலவினங்கள் 1983 தொடக்கம் 1996 வரையிலான காலப்பகுதிக்கு இந்த விதத்தில் கணக்கிடப்பட்டுள்ளது. கொள்கை ஆய்வு நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்களின்படி இது கணக்கிடக் கூடியதாக இருந்த செலவாகும். உண்மையில் இத்துடன் இன்னமும் சேர்க்கப்பட வேண்டியதும் ஆனால் கணிப்பது கஷ்டமானதுமான பல துறைகள் இருந்து கொண்டுள்ளன. 1997ம் 1998ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டங்கள் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளையும் குறைநிரப்பு மீதிப்பீடுகள் மூலம் பெற்றுக் கொண்ட நிதிகளையும் யுத்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகளையும் சேர்க்கும் போது 1998ம் ஆண்டின் இறுதியில் யுத்தத்துக்காக நாசமாக்கப்பட்ட பணம் இன்னும் பல நூறு பில்லியன்களால் அதிகரிக்கும்.

"யுத்தச் செலவினங்கள் இல்லாது இருந்திருக்குமானால் பெரிதும் பயனுடைய முதலீடுகளிலும் நுகர்வுகளிலும் இந்த நிதியைப் பயன்படுத்த வாய்ப்பு இருந்தது" என கலாநிதி. கெலேகம குறிப்பிடுகின்றார். யுத்தச் செலவினங்களில் மேலும் சேர்க்கப்பட வேண்டியவற்றுள் 750000 அகதிகளைப் பராமரிக்கச் செலவிடப்படும் செலவும் பொது அலுவலகங்களுக்கு ஏற்பட்ட சேதங்களும் அடங்கும் என அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

யுத்தத்தினால் வருமானம் இழப்பது பற்றி மேலும் பேசும் கலாநிதி.கெலேகம 1982ல் இலங்கை உல்லாசப் பயணத்துறையில் கென்யா, மாலைதீவு, மொரீசியஸ் தீவுகளுக்கு முன்னணியில் நின்று கொண்டிருந்ததாகவும் இன்று அவை இலங்கையைத் தாண்டிச் சென்றுவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். "அவை இழந்த வருமானங்கள் தவறிப் போன வாய்ப்புக்களுக்கான உதாரணமாகும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். மூலதன வெளியேற்றம், புத்திஜீவிகள் வெளியேற்றம் போன்ற மறைக்கப்பட்ட இழப்புக்களும் இருந்து கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். [illegible] அரசாங்கம் "பரந்த [illegible]" பணமதிப்பிறக்கத்துக்கு செல்லாததற்கு பாதுகாப்புச் செலவினங்கள் மேலும் அதிகரிக்கும் என்ற அச்சமே காரணமாகும். "எமது பல யுத்தத் தளபாடங்கள் இறக்குமதி செய்யப்படும் நிலைமையினுள் பணமதிப்பிறக்கம் செய்தால் பாதுகாப்புச் செலவினங்கள் அதிகரிக்க இடமிருந்தது. அது உயர்ந்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக் குறையின் மூலமும் அதன் விளைவாக ஏற்படும் வட்டி வீதாசாரத்தின் அதிகரிப்பினாலும் வெளிப்பாடாக இருந்தது."

இலங்கை முதலாளி வர்க்கம் பெறக்கூடியதாக இருந்த பொருளாதார அபிவிருத்தி பற்றி சிங்கப்பூர் மாஜி பிரதமர் லீ குவான் யூ 1982ல் வெளியிட்ட கருத்தை கலாநிதி. கெலேகம மேற்கோளாகக் காட்டுகின்றார்.1990ல் இலங்கையின் தலா வருமானம் 1979ன் சிங்கப்பூர் தலா வருமானத்திற்குச் சமமானதாக 4000அமெரிக்க டாலர் மட்டத்திற்கு உயருமெனக் கூறினார். ஆனால் 1979ல் 400 அமெரிக்க டாலர்களாக விளங்கிய இலங்கையின் தலா வருமானம் 1996 வரையிலும் கூட 760 டாலர்கள் வரை மட்டுமே அதிகரித்திருந்ததாக கலாநிதி.கெலேகம சுட்டிக்காட்டுகின்றார்.

இந்த கொள்கை ஆய்வு நிறுவனத்தின் ஆராய்ச்சிகள் பற்றி 'சண்டே டைம்ஸ்' பத்திரிகைக்கு கட்டுரை வரைந்துள்ள ஒரு கட்டுரையாளர், 1998 ஜனவரி மாதத்தில் மார்கா நிறுவனம் (Marga Institute)யுத்தச் செலவினங்கள் பற்றிச் செய்துள்ள ஒரு மதிப்பீட்டையும் குறிப்பிடுகின்றார்.மார்கா நிறுவனத்தின் அந்த ஆய்வின்படி 1983 96 காலப்பகுதியினுள் யுத்தத்தினால் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பு 2260பில்லியன் ரூபாக்களாகும். இந்தக் கணிப்பின் போது அரசாங்கம், விடுதலைப் புலிகள் என்ற இரண்டும் செலவிட்ட தொகையும் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியினுள் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் பொதுவாக நூற்றுக்கு 4.3வீதமாக விளங்கியுள்ளது. யுத்தத்திற்கு செலவிட்ட தொகையை பொருளாதாரத்திற்குச் செலவிட்டிருந்தால் இந்த அபிவிருத்தி வீதம் நூற்றுக்கு 7வீதமாக அதிகரிக்க இடமிருந்ததாகவும், வேலையின்மை வீதமான நூற்றுக்கு 12 வீதத்தை நூற்றுக்கு 4வீதமாக வீழ்ச்சி காணச் செய்ய இடமிருந்ததாகவும் மார்கா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இனவாத யுத்தச் செலவினங்கள் பற்றிய இந்தப் புள்ளிவிபரங்கள் யூ.என்.பி. பொதுஜன முன்னணி அரசாங்கங்கள் முன்னெடுக்கும் இந்த இனவாத யுத்தங்கள் எந்தளவு பாரிய பொருளாதார நாசங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளன என்பதை அம்பலப்படுத்துவதாக உள்ளது. விடயம் அத்துடன் நின்றுவிடவில்லை. யுத்தத்தினால் கொன்று தள்ளப்பட்ட மக்களின் தொகை 60000க்கும் அதிகமாகும்.இதில் பெரும்பான்மையினர் தமிழ் மக்கள். அகதிகளாக்கப்பட்ட இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் தொற்றுநோய்களாலும் பட்டினியாலும், போஷாக்கின்மையாலும் பாதிக்கப்பட்டு பெரும் நாசத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர். யுத்தத்தினால் நாசத்துக்குள் தள்ளப்பட்டுள்ள சிறார்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்திற்கும் அதிகம் என 'யூனிசெப்' நிறுவனத்தின் 1998ம் ஆண்டுக்கான அறிக்கை குறிப்பிட்டிருந்தது. யுத்தத்தினால் சுமார் 50000 சிறுவர்கள் பலியாகினர்.

## யுத்தத்தின் இலக்கு

ஆளும் வர்க்கம் இந்தளவு பிரமாண்டமான தொகையைச் செலவிட்டு யுத்தத்தை முன்னெடுப்பது ஏன்?நாம் பதில் காண வேண்டிய முக்கிய கேள்வி இதுவாகும். யூ.என்.பி.யும் பொதுஜன முன்னணியும் இனவாதிகளும் யுத்தத்தைத் தொடர்வது நாட்டின் "பூகோள ஒருமைப்பாட்டைக் கட்டிக் காக்க" எனக் கூறிக்கொள்கின்றார்கள்.ஆனால் அவர்கள் கூறிக்கொள்ளும் அந்த பூகோள ஒருமைப்பாடு சிதறுண்டு போகும் வரை யுத்தம் சென்றுள்ளது. பூகோள ஒருமைப்பாடு எனப்படுவது சிதறுண்டு போகும் வரையும் முதலாளித்துவ பொருளாதார அபிலாசைகளுக்கு கெடுதி ஏற்படும் நிலையிலும் அரசியல் ஈடாட்டம் கண்டு போன நிலையிலும் ஆட்சியாளர்கள் யுத்தத்தைத் தொடர்வது ஏன்? இது சிங்கள, தமிழ் தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் இரத்த வெள்ளத்தினால் பிளவுபடுத்தி, முதலாளி வர்க்க ஆட்சியைக் கட்டிக் காப்பதன் மூலம், அனைத்துலக மூலதனத்தின் ஆட்சிக்கு இம்மக்களைக் கீழ்ப்படுத்தி வைக்கச் செய்யும் யுத்தமாகும். தமிழ் ஒடுக்கப்படும் மக்களை ஒடுக்கித் தள்ளித் தொடுக்கப்பட்டுள்ள இந்த யுத்தம் தென் மாகாணங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை, ஜனநாயக உரிமைகளை நாசமாக்கவும் பயன்படுத்தப்படுகின்றது. இந்நிலைமையின் கீழ் சர்வாதிகார ஆட்சிக்கான நிலைமைகள் வளர்ச்சி கண்டு வருகின்றது.

இந்த கருத்தரங்கில் கலாநிதி கெலேகம முன்வைத்த தகவல்களும் புள்ளிவிபரங்களும் இலங்கையின் இராணுவ இயந்திரம் விழுங்கிக் கொண்டுள்ள பிரமாண்டமான செலவினத்தை எடுத்துக்காட்டிக் கொண்டுள்ளது. 1996ம் ஆண்டளவில் இந்நாட்டின் இராணுவம் மலேசியா, பிலிப்பைன்ஸ், அவுஸ்திரேலியா இராணுவத்தின் எண்ணிக்கையைத் தாண்டிச் செல்லும் கட்டத்தை நெருங்கியுள்ளது. இந்த கருத்தரங்குக்கு கொத்தலாவலை இராணுவ கல்வி நிறுவனத்தில் இருந்து கலந்துகொண்ட எம்.எம்.ஜயவர்தன என்ற பேர்வழி யுத்தத்தை நியாயப்படுத்தி உள்ளார். இது நாட்டினுள் வளர்ச்சி கண்டுவரும் இராணுவவாதப் போக்கினை எடுத்துக் காட்டுகின்றது.

"உள்நாட்டில் இருந்தோ அல்லது வெளிநாட்டில் இருந்தோ ஆபத்து ஏற்படும்போது பாதுகாப்பு முக்கிய அவசியமாகும். சமுகத்தினுள் பாதுகாப்பு அத்தகைய அவசியமான பாத்திரத்தை இட்டுநிரப்பும்போது சமுக சமரசத்தை (அதற்கு ஏற்ற விதத்தில்) ஒழுங்கு செய்ய வேண்டும்." என அந்த இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.சமுக அவசியங்களை பாதுகாப்பு அவசியங்களுக்கு கீழ்ப்படுத்த வேண்டும்! "சமுக சமரசம்" என்ற பெயரில் இடம்பெறும் ஆட்சி, பாதுகாப்பின் அவசியத்துக்குக் கீழ்ப்படுதல் வேண்டும்! கிராமப்புற இளைஞர்களை இனவாத யுத்தத்தின் தோட்டாக்களாகத் திரட்டிக் கொள்வதை அவர் இளைஞர்களுக்கு "வேலைவாய்ப்பு வழங்கும்", "கிராப்புற பக்கமாக வருமானம் பெருக்கெடுக்கும்" சாதகமான நிலைமை எனவும் வருணித்தார்.மனித வாழ்க்கை பற்றிய அலுகோசு மனப்பான்மை அத்தகையதாக இருந்து கொண்டுள்ளது. பாதுகாப்பு செலவினங்களின் அதிகரிப்பினால் வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை அதிகரிப்பதையும் நலன்புரிச் செலவினங்கள் வெட்டித் தள்ளப்படுகின்றதையும் அவர் ஒப்புக்கொண்டார். ஆனால் நிரூபிக்கத்தக்க பக்கங்களைக் கணக்கில் கொள்ளும்போது திறைசேரிச் செலவினங்களும் யுத்தத்தினால் திணிக்கப்பட்டுள்ள சுமையும் அற்பமாகத் தெரியும் என அந்த இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

**அனைத்துலக குழுவின் பகுதிகளின் இன்டர்நெட்**

**World Socialist Web Site**
**http://www.wsws.com**

* அமெரிக்கா:
**http://www.socialequality.com**

* அவுஸ்திரேலியா:
**http:www.workersnews.flex.com.au**

* பிரித்தானியா:
**http:/www.socialequality.org.uk**

* கனடா:
**http://www.egalitesociale.com**

* ஜேர்மன்:
**http://gleichheit.de**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உயர்நீதிமன்றத்தின் மூன்று தீர்ப்புகள்:*

# அரசாங்கத்தையும் நிர்வாகத்தையும் நீதிமன்றத்தையும் அம்பலமாக்குகின்றது

**விஜே டயஸ்**

சமீபத்தில் இலங்கை உயர்நீதிமன்றம் மூன்று வழக்குகளின் தீர்ப்புக்களை வழங்கியது. இவை ஆளும் வர்க்கம் வீழ்ச்சி கண்டுள்ள ஆதாளபாதாளத்தையும் அதனது அரசியல் நெருக்கடியையும் எடுத்துக் காண்டிக் கொண்டுள்ளன. அந்தத் தீர்ப்புக்கள் பற்றிய ஆய்வினை நாம் புரட்சிகர வேலைத்திட்டத்தின் அவசியத்தினைப் புரிந்து கொள்ளும் திசையில் இட்டுச் செல்கின்றோம். அந்த மூன்று வழக்குத் தீர்ப்புக்களும் இவைதான்:

1. மாகாணசபைத் தேர்தல்களை நடாத்துவதை ஒத்திப்போடும் தேர்தல் ஆணையாளரின் முடிபுக்கு எதிரானது

2. லலித் அத்துலத்முதலி கொலை பற்றி ஆராய நியமனம் செய்யப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுத் தீர்ப்புக்கு எதிரானது

3. அனுர பண்டாரநாயக்கவின் வீட்டுக்குள் சட்டரீதியான "வாரந்து" இல்லாமல் நுழைந்த பொலிசாருக்கு எதிரானது

சமத்துவம், சுதந்திரம், கருத்துவெளியீட்டு அடிப்படை உரிமைகள் மீறப்பட்டது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கும் மேலும் 12 பேருக்கும் எதிராக சுதந்திர ஊடக இயக்கத்தினால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு ஜனவரி 27ம் திகதி வழங்கப்பட்டது.

மாகாண சபைத் தேர்தல் முன்னர் 1998 ஆகஸ்டு 28ம் திகதி நடைபெற இருந்தது. ஆனால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் எனக் கூறி, அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி உத்தரவின் கீழ் அது காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது. சுதந்திர ஊடக இயக்கம் இதை எதிர்த்தே வழக்குத் தாக்கல் செய்தது.

பொதுஜன முன்னணி அரசாங்கமும் அரச அதிகாரிகளும் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் ஜனநாயக உரிமைகளை பிடுங்கிக் கொள்ளும் பொருட்டு பொய், சட்டவிரோத நடவடிக்கைகள், ஜனாதிபதியின் அதிகாரம் ஆதியவற்றைப் பயன்படுத்தும் இலட்சணத்தை இந்த வழக்குத் தீர்ப்புக்கள் அம்பலமாக்கிக் கொண்டுள்ளன.

வழக்குத் தீர்ப்பில் பின்வரும் விடயங்கள் அடங்கி இருந்தன: அ. "கடந்த ஆண்டு ஜூன் 25ம் திகதி தொடக்கம் ஜூலை இறுதி வரையிலான காலப்பகுதி, தேர்தலை ஒத்திப்போடுவதை அவசியமாக்கும் விதத்தில் தேசிய பாதுகாப்பு, பொதுஜன சமாதானத்திற்கு எந்தவிதமான அச்சுறுத்தலும் இருக்கவில்லை என்பதை பெட்டிசக்காரர்கள் ஸ்தாபிதம் செய்திருந்தார்கள்."

## தேர்தல் ஒத்திப்போடப்பட்டமை

இதன் மூலம் பொதுஜன முன்னணி அரசாங்கமும் ஜனாதிபதியும் மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு பொய்க் காரணங்களை காட்டி உள்ளார்கள் என்பது நிரூபணமாகி உள்ளது. "தேசிய பாதுகாப்பு," "சட்டத்தை பாதுகாப்பது" முதலிய காரணங்களைக் காட்டி முதலாளித்துவ அரசாங்கங்களும் அவற்றின் நிர்வாகத் துறை அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்கும் போது பொதுமக்கள் தமது ஜனநாயக உரிமைகளின் பாதுகாப்பையிட்டு அக்கறை கொண்டாக வேண்டும் என்பதை இது சுட்டிக் காட்டுகின்றது. அவை இந்த விதத்தில் மோசடி வார்த்தைகளை சரளமாகக் கையாண்டு பொதுமக்களின் உரிமைகளைக் கொள்ளையடிக்கவே பயன்படுகின்றன.

ஆ." (ஜனாதிபதி உத்தரவு) தேர்தல்களில் சகல துறைகள் சம்பந்தமாகவும் சட்டத்துக்கு இணங்கிப் போக வேண்டும் என்பதை தேர்தல் ஆணையாளர் அஞ்சாது சுட்டிக்காட்ட முடியும். அங்கு அவசியப்படின் நீதிமன்ற உத்தரவை பெற்றுக் கொள்ளும் பொருட்டு பொருத்தமான சட்ட நடவடிக்கையைக் கூட வலியுறுத்திக் கோர முடியும். ஆனால் நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தஸ்தாவேசுக்கள் சட்ட நிலைமையை தெளிவுபடுத்தும் பொருட்டு எந்தவிதமான முயற்சியும் செய்யவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது."

முதலாளித்துவ அரச அதிகாரத்துவம் எந்த இலட்சணத்தில் செயற்படுகின்றது என்பதை இது அம்பலப்படுத்துகின்றது. பொதுமக்களின் இறைமையின் உரைகல்லாக கணிக்கப்படும் வாக்குரிமையைக் கட்டிக்காக்க கடமைப்பட்டுள்ள சுயாதீன தேர்தல் ஆணையாளர் எனக் கூறப்படுபவர் ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் கட்டளைகளின் கைத்தேங்காயாகச் செயற்படுபவர். இதை வழக்குத் தீர்ப்புக்கள் கூறாமல் கூறியுள்ளன. இது முதலாளித்துவ ஜனநாயகத்தின் இலட்சணம்.

உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கள் சுட்டிக்காட்டுவதன்படி தேர்தல் ஆணையாளருக்கு ஜனாதிபதி உத்தரவைச் சவால் செய்யும் அதிகாரம் எற்கனவே இருந்து கொண்டுள்ளது. ஆனால் அவர் அதை பிரயோகிக்கவில்லை. இப்போது யூ.என்.பி.யும் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளும் நவசமசமாஜ ஜே.வீ.பி. கூட்டணிகளும் எனைய சகல அரசியல் அமைப்புக்களும் தீவிரவாதக் குழுக்களும் ஒரே தாளில் கோருவது என்ன? தேர்தல் ஆணையாளரின் ஆதிகாரங்களைக் கூட்டு! ஏற்கனவே இருந்து கொண்டுள்ள அதிகாரங்களைக் கூடப் பாவிக்க இலாயக்கில்லாத ஒரு கைப்பொம்மையின் கைகளில் சட்ட அதிகாரங்களை மேலும் குவிப்பதன் மூலம் பலன்கிட்டும் என நினைக்க யாரால் முடியும்? சுயபுத்தியற்றவர்களும் முதலாளித்துவ ஜனநாயகம் பற்றி மலட்டுப் புத்தி கொண்டவர்களும் மட்டுமே.

கடந்த ஆண்டு ஆகஸ்டில் இடம்பெற இருந்த மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைத்த வேளையில் தேர்தல் ஆணையாளர் செயற்பட்ட சட்ட விரோத நடவடிக்கை அந்தப் பதவிக்கு மட்டும் கட்டுப்பட்டு நின்றுவிடும் ஒரு நிலைமை அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆட்சியில் உள்ள அரசாங்கத்தினதும் ஜனாதிபதியினதும் கட்டளைகளை தலைமேல் கொண்டு ஜனநாயக உரிமைகளை நசுக்கத் தீர்மானம் செய்த செயற்பட்ட உயர் நீதிமன்ற நீதியரசர்களையிட்டும் மக்கள் பலமுறை கேள்விப்பட்டுள்ளனர். அரச பாதுகாப்புச் சேவை உட்பட்ட நிர்வாகத்தின் கையாட்கள் பற்றிக் கூறவும் வேண்டுமா?

ஆளும் வர்க்கத்தினதும் அதனது பிற்போக்கு அரசாங்கங்களதும் அவசியங்களுக்கு இணங்க தேர்தல் ஆணையாளர் பதவியில் நாட்டியம் ஆடும் இலட்சணத்துக்கு நல்ல எடுத்துக்காட்டு, கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தையும் அதன் வாரிசான சோசலிச சமத்துவக் கட்சியையும் இன்னமும் ஒரு அரசியல் கட்சியாக அங்கீகரிக்க மறுத்துக் கொண்டுள்ளதேயாகும். பதவியை வகிப்பவர் மாறினாலும் பதவியின் ஆளும் வர்க்கக் கோலம் மாறிக் கொண்டது கிடையாது. தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு (தமிழ் மக்கள் உட்பட) கிடைக்க வேண்டிய ஜனநாயக உரிமைகளைக் காப்பது என்பது முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கிவீசாமல் ஜனாதிபதியின் பின்னால் வயிறளப்பதன் மூலமோ அல்லது முதலாளித்துவ நிர்வாக அதிகாரிகளின் கைகளில் அதிகாரங்களைக் குவிப்பதன் மூலமோ சாத்தியகமாகக் கூடியது அல்ல. எமது இந்தக் கருத்து உயர்நீதிமன்றத் தீர்ப்புக்களில் அடங்கி உள்ளது.

## ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகளின் மற்றொரு பக்கம்

**2.** லலித் அத்துலத்முதலி படுகொலை பற்றி ஆராய நியமனம் செய்யப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பாக மேன்முறையீட்டு நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பும், அரசாங்கத்தின் ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகளின் மற்றொரு பகுதியை அம்பலப்படுத்தியுள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவைச் சவால் செய்ய முடியாது எனவும் அவற்றை அமுல் செய்யும் அதிகாரிகள், அவர்களின் நடவடிக்கைகளை நீதிமன்றத்தின் எதிரிலும் கூட சவால் செய்ய முடியாது எனவும் மக்களுக்கிடையே ஒரு நப்பாசை சிருஷ்டிக்கப்பட்டு இருந்தது. அது ஜே.ஆர்.ஜயவர்தன ஜனாதிபதி காலம் தொடக்கம் ஆர்.பிரேமதாச, சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்க ஊடாக ஸ்தாபிதம் செய்யப்பட்டு வந்தது. இந்த நிலைமையின் கீழ் ஜனாதிபதியினால் நியமனம் செய்யப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் தீர்ப்பினை சர்ச்சைக்கு இடமில்லாமல் ஒப்புக் கொண்டாக வேண்டும் என்ற தப்பான அபிப்பராயமும் பொதுஜன அபிப்பராயத்தினுள் வேரூன்றிக் கொண்டுள்ளது.

இந்தத் தப்பான அபிப்பராயத்தை இறுக்கமாக்கும் பொருட்டு 1978ல் நிறைவேற்றப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு சட்டத்துடன் சிறப்புச் சரத்துக்களும் சேர்க்கப்பட்டது. அதாவது, எந்த ஒரு சிபார்சையோ அல்லது முடிவையோ முன்வைத்தாலும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆணையாளர்களை சிவில், கிறிமினல் தீர்ப்புக்களுக்கு கீழ்ப்படுத்த முடியாது" என்பதாகும்.

சிறிசேன கூரே, லலித் அத்துலத்முதலி பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவினால் தமக்கு எதிராகச் செய்யப்பட்ட சிபார்சுகள், தீர்ப்புக்களுக்கு எதிராக "சர்டியோராரி" (உயர்நீதிமன்றம் கீழ்நீதிமன்றத்துக்கு வழக்கு தஸ்தாவேசுக்களை அனுப்பகோரும் கட்டளை) தடையுத்தரவு பிறப்பிக்கும்படி கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்த பெட்டிசம் மீதான தீர்ப்பு இந்த நப்பாசைகளை எல்லாம் தவிடுபொடியாக்கியது. சிறிசேன கூரேயின் பெட்டிசத்தில் எதிரிகளாகக் குறிப்பிடப்பட்ட இரண்டு ஆணையாளர்களில் ஒருவரின் பேரில் ஆஜரான சட்டத்தரணி கூறியதாவது: "இந்தப் பிரேரணையை நிறைவேற்றும் பொருட்டு அரசியலமைப்புச் சபைக்கு வாய்ப்பு வழங்கி (ஆணைக்குழுவினால்) அறிக்கை அல்லது சிபார்சு முன்வைக்கப்படுமானால் அதை அர்த்தப்படுத்த உயர்நீதிமன்றத்தால் முடியாது. அதற்குக் காரணம், அது பாராளுமன்றத்தினுள் செயற்படும் பொதுமக்களின் இறைமையில் கைவைப்பதாக விளங்கும்."

பொதுமக்களின் இறைமை பற்றிய மோசடியான பொறிக்கிடங்கைத் தோண்டி, பொதுமக்களின் உரிமைகளைப் பிடுங்கிக் கொள்ளும் பொருட்டு தமது கையாட்களை ஆணைக்குழுவின் பெயரில் பாவிக்க யூ.என்.பி. சட்டம் நடவடிக்கை எடுத்துள்ள விதத்தையும், பொதுஜன முன்னணி அரசாங்கம் தற்போது அதைப் பயன்படுத்திக் கொண்டுள்ள முறையையும் இது தெளிவுபடுத்துகின்றது.

பாராளுமன்றம் தனது அறிவினால் மட்டும் நிறைவேற்றிக் கொண்ட எந்த ஒரு சட்டத்துக்கோ பொதுமக்களின் இறைமையில் கைவைக்க எந்த ஒரு நோக்கமோ கிடையாது "என ஒப்புதல் வாக்குமூலத்தின் பாணியில் குறிப்பிட்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், "தாம் அக்கறை காட்டுவது, பொதுஜன செயற்பாட்டாளர்களாக ஆணைக்குழு தீர்மானம் செய்யும் ஆட்களைப் பாதிக்கும் விடயங்களின் செல்லுபடியான தன்மையைப் பற்றியேயாகும்" எனக் குறிப்பிட்டது. அங்கு நீதிமன்றம் ஸ்தாபிதம் செய்த கருத்து, ஜனநாயகத்தினுள் ஆணைக்குழுக்களுக்கு வேண்டும் என்றே பீதியை உருவாக்க அல்லது சட்டத்தின் அதிகார வரம்புக்கு வெளியே செயற்பட இடமளிக்க முடியாது என்பதாகும்." அதன்படி ஜனாதிபதி ஆணைக்குழுவினால் சிறிசேன கூரேக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்த சிபார்சுகளும் முடிவுகளும் இரத்துச் செய்யப்பட்டன. சிறிசேன எந்த வகையிலான ஒரு பிற்போக்காளன் என்பதையும் கணக்கில் எடுக்காது, ஜனாதிபதி ஆணைக்குழுவின் பிற்போக்குத் தன்மையை அம்பலப்படுத்தும் விடயத்தில் அந்த வழக்குத் தீர்ப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்த இரண்டு வழக்கு தீர்ப்புக்களும் இந்த விதத்தில் விசாரணை செய்யப்பட்டு வருகையில் ஜனநாயக உரிமைகளைக் காப்பதை நீதிமன்றங்களுக்கு கையளித்து பொதுமக்களைக் காக்க முடியும் என்ற கருத்தை ஸ்தாபிதம் செய்யப் பிற்போக்கு ஆளும் வர்க்கத்தின் தீவிரவாத தட்டினர் முன்வருவது நிச்சயம். அந்தப் பொறியில் வீழ்ந்தால் தனது மரணப்பிடியில் இருந்து தப்பிய மனிதனுக்கு முதலை கூறிய கதைதான் பொருத்தமானது : "என்னிடம் இருந்து தப்பினாலும் எனது தம்பி தலையெடுப்பான்" என்பதற்கு இணங்க பொதுமக்கள் அனாதரவு நிலைக்குள் தள்ளப்படுவதைக் கண்டு ஆளும் வர்க்கம் திருப்தியடையும்.

நாம் இந்த ஆபத்தைப் பற்றிப் பேசக் காரணம், ஆளும் வர்க்கமும் அதன் அதிகாரிகளும் இந்தப் புதிய பொறிக்கிடங்கைத் தோண்டும் வேலைகளில் எற்கனவே ஈடுபட்டுள்ளதினால் ஆகும். தேர்தல் ஆணையாளர் பதவியின் முதுகெலும்பற்ற தன்மையை உயர்நீதிமன்றம் அம்பலப்படுத்தியதன் பின்னர் இப்போது அந்த அதிகாரியே தாம் பொதுஜன அபிப்பராயத்துக்குச் செவிமடுப்பதாகக் காட்ட ஐந்து மாகாண சபைகளின் தேர்தல் திகதியை(எப்பிரல் 1) மாற்றும் பொருட்டு அந்த நீதிமன்றத்திடமே சரணடைந்தார். இந்த நச்சுக் கடியைச் சகல முதலாளித்துவச் சார்பு அரசியல் கட்சிகளும் தீவிரவாத இயக்கங்களும் உச்சாடனம் செய்து கொண்டுள்ளன.

## அரசியல் எதிர்ப்பாளர்களுக்கு எதிரான திட்டம்

**3.** அனுர பண்டாரநாயக்காவின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டது தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இந்த நப்பாசைகளை எல்லாம் தவிடுபொடியாக்கும் ஒரு தீர்ப்பாகும். ஒரு பொலிஸ் கோஷ்டி அதிகாரபூர்வமான 'விறாந்து' இல்லாமல் தனது வீட்டினுள் நுழைந்து தேடுதலில் ஈடுபட்டதன் மூலம் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுவிட்டதாக அனுர பண்டாரநாயக்க 'பெட்டிசம்' தாக்கல் செய்து இருந்தார். பொலிஸ் கோஷ்டி இரத்தினபுரி மாவட்ட மாஜி.எம்.பி.எல்லாவலை படுகொலையின் சந்தேக நபரான புஞ்சிநிலாமேயைத் தேடியே வந்துள்ளது. இந்தப் பெட்டிசம் பொலிஸ் மா அதிபர், பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவின் உதவிப் பணிப்பாளர், குற்றப்புலனாய்வு பிரிவின் உதவி பொலிஸ் மா அதிபர் ஆகியோரை எதிரிகளாகக் குறிப்பிட்டு இருந்தது.

உயர்நீதிமன்ற வழக்குத் தீர்ப்பு பின்வருமாறு குறிப்பிட்டது: "15 வருடங்களாகத் தகவல்கள் வழங்கிவந்த உளவாழி தமக்கு நம்பகரமான தகவல்களை வழங்கினார் என்பதை ஊர்ஜிதம் செய்யப் பொலிஸ் மா அதிபர் தவறிவிட்டார். சந்தேகநபர் பெட்டிசம் காரரின் வீட்டினுள் நுழைந்தார் என்பதை நம்புவதற்கு தமக்கு ஆதாரம் இருந்தது என்பதை எமக்கு புரியவைக்க இரண்டாம், மூன்றாம் எதிரிகள் தவறிவிட்டனர். இந்த நிலைமையின் கீழ் இருக்கக்கூடிய நிலைமை என்னவெனில் உளவாழி இருக்கவில்லை என்பதும் பெட்டிசம் காரரின் வீட்டைச் சோதனையிட்டது அம்பலப்படுத்தும் நோக்கத்துடன் அல்ல என்பதுமேயாகும்."

முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தமது அரசியல் எதிர்ப்பாளர்களை ஒடுக்கித்தள்ளி

16ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி அலைகளின் முரண்பாடுகளின் அர்த்தம் என்ன?

நிக் பீம்ஸ்

அமெரிக்க வர்த்தகத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்கள் 1998ன் இறுதிக் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி வீதம் ஆரம்ப மதிப்பீடுகளான 5.6வீதத்தினையும் தாண்டி, 6.1வீதத்தினை எட்டியுள்ளதைக் காட்டிக் கொண்டுள்ளது. இது அமெரிக்கப் பொருளாதாரம் பூகோளரீதியான நிதிக் குழப்ப நிலைமையின் தாக்கங்களை எல்லாம் தொடர்ந்தும் அலட்சியம் செய்துவிட்டு, உண்மையில் பலம் கண்டுவருவதாகக் காட்டிக் கொண்டுள்ளது.

ஆனால் ஒரு நெருக்கமான ஆய்வானது இதில் இருந்து வேறுபட்ட கதையைக் கூறுகின்றது. இது அமெரிக்க வளர்ச்சி அலை வீச்சானது, உலகப் பொருளாதாரத்திலான அதிகரித்துவரும் பதட்ட நிலைமையின் ஒரு பண்பு மட்டுமேயாகும். எதிர்காலத்தில் அது வன்முறை மாற்றங்களுக்காகக் களத்தை சீர்செய்யும்.

வர்த்தகத் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களின்படி நுகர்வுச் செலவினங்கள் வருடாந்தம் நூற்றுக்கு 4.8 வீதத்தினால் அதிகரித்துள்ளது. கடந்த 14 ஆண்டுகளுள் ஆகக் கூடிய நுகர்வு அதிகரிப்பு வீதம் இதுவேயாகும்.

இதன்மூலம் அமெரிக்கப் பொருளாதாரம் அதனது சமாதான கால வரலாற்றில் நீண்ட விரிவாக்கத்தை எட்டுவதைச் சாத்தியமாக்கியுள்ளது. இதேசமயம் பணவீக்கம் மிகக் குறைந்த வீதத்தில் 0.7 வீதமாக இருந்துகொண்டிருக்கையில் முதலீடு அதிகரித்துள்ளது.

ஆனால் இதன் பெறுபேறுகள், உலகப் பொருளாதாரத்தின் முழு நிலைமைக்கும் எதிராக நிறுத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. யப்பானியச் செய்திகளின்படி பொருளாதாரம் தொடர்ந்து பின்னடைந்து வருகின்றது. பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் நுகர்வு பொருட்களின் விலைகள் 0.5வீதத்தினால் வீழ்ச்சிகண்டது. சில்லறை விற்பனைகள் 5.6வீதத்தினால் வீழ்ச்சி கண்டது. கைத்தொழில் உற்பத்தி 7.5வீதத்தினால் வீழ்ச்சி கண்டது. டிசம்பரில் வீடமைப்புக்கான ஆரம்பிப்புக்கள் 11.2வீதத்தினால் வீழ்ச்சி கண்டது.

இது ஒரே வரிசையில் 25வது மாதத்தில் அடைந்த வீழ்ச்சியாகும். அத்தோடு கடந்த 14 ஆண்டுகளுள் அடைந்த ஆகக் கூடிய வீழ்ச்சி வீதமுமாகும்.

## ஐரோப்பாவின் பின்னடைவு

1999ல் முன்னேற்றம் காணும் என எதிர்பார்க்கப்பட்ட ஐரோப்பிய பொருளாதார வளர்ச்சி இப்போது பின்னடைந்து செல்வது தெரிகின்றது. ஆரம்ப மதிப்பீடுகளின்படி ஐரோப்பிய பிராந்தியத்தில் பிரமாண்டமானதான ஜேர்மன் பொருளாதாரம், டிசம்பர் காலாண்டில் 1.8வீத வருடாந்த வீதத்தினால் பின்வாங்கியுள்ளது. இது இப்பிராந்தியத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ( ) வீழ்ச்சி காணும் என்பதைக் காட்டிக் கொண்டுள்ளது.

அதிகரித்த அளவில் ஏற்றத்தாழ்வினைக் கொண்ட உலகப் பொருளாதாரத்தின் தோற்றமானது அமெரிக்கத் திறைசேரி அதிகாரிகளை ஐரோப்பாவும் ஜப்பானும் தமது உள்நாட்டுப் பொருளாதாரங்களை முன்னேற்றக் கண்டிப்பாக ஏதேனும் செய்ய வேண்டும் எனவும் தமது வர்த்தக உபரிகளை வெட்டிக் குறைக்க வேண்டும் எனவும் அமெரிக்க வர்த்தகப் பற்றாக்குறையை என்றும் இல்லாத விதத்தில் 169 பில்லியன் டாலர்களுக்கு இட்டுச் சென்றுள்ள கிழக்கு ஆசிய ஏற்றுமதிகளில் சிலதை உள்ளீர்க்கத் ஆரம்பிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளத் தூண்டியுள்ளது.

பெப்பிரவரி மாதத்தில் கூடிய ஜீ 7 நாடுகளின் நிதி அமைச்சர்கள் மகாநாடு திட்டவட்டமான எந்த ஒரு நடவடிக்கைக்கும் அழைப்பு விடுக்கவில்லை. அங்கத்துவ



ஜப்பானில் வேலையின்மையினால் இலவச சூப் சாவடிகளின் கியூக்களில் காத்துக்கிடக்கத் தள்ளப்பட்டுள்ள தொழிலாளர்கள், இளைஞர்கள், முதியவர்கள்

நாடுகளில் பெரிதும் சமமான வளர்ச்சியை ஈட்டிக் கொள்ளும் வகையில் உள்நாட்டினை அடிப்படையாகக் கொண்ட ஒரு வளர்ச்சி மூலோபாயத்தை கடைப்பிடிக்கவும் வெளிவாரி ஏற்றத்தாழ்வுகளை குறைக்கவும் சந்தைப் பொருளாதாரம் தலையெடுக்க உதவவும் வேண்டும் என்று மட்டும் இவை வெறுமனே குறிப்பிட்டுக் கொண்டுள்ளன.

நடைமுறையைப் பொறுத்த மட்டில் இவை பெருமளவுக்கு "ஒல்லி"யாகவே உள்ளன என பினான்சியல் டைம்ஸ் குறிப்பிட்டுள்ளது. "இதை ஈட்டிக் கொள்வது ஜப்பானுக்கு சாத்தியமில்லாது போவதோடு ஐரோப்பிய மத்திய வங்கி இதை ஈட்டிக் கொள்ள விரும்பாது" எனவும் அது குறிப்பிட்டுள்ளது.

ஐரோப்பிய அரசாங்கங்களில் இருந்து சுதந்திரமாக இயங்கும் ஐரோப்பிய மத்திய வங்கி வட்டி வீதத்தைக் குறைக்கவும் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டவும் இலகுவான நாணயக் கொள்கையை கடைப்பிடிக்கும் எண்ணம் தனக்குக் கிடையாது என்பதைத் தெளிவு படுத்தியுள்ளது. இதற்குப் பதிலாக அது உழைப்புச் சந்தைகளில் பெருமளவிலான கட்டுப்பாடற்ற நிலைமையை அமுல் செய்வதை "அமைப்புரீதியான சீர்திருத்தம்" வேண்டி நிற்கின்றது.

## இணக்கம் இல்லை

உலகப் பொருளாதாரத்தை தூண்டுவதற்கு எந்தவிதமான ஒரு இணக்கத்தையும் காண ஜீ 7 நாடுகளின் மகாநாடு தவறிவிட்ட நிலையில் பெப்பிரவரி கடைப்பகுதியில் அமெரிக்க திறைசேரி பிரதிச் செயலாளர் லாறி சம்மர்ஸ் ஜப்பானிய அரசாங்கத்துக்கு ஒரு எச்சரிக்கையை விடுத்தார். பொருளாதாரம் தொடர்ந்தும் சீர்குலைந்து வருவதாகவும் அந்த நடவடிக்கை பணச்சுருக்கத்தை தவிர்த்துக் கொள்ள விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு ஊக்கமளிப்பதாகவும் விளங்க வேண்டும் என்றுள்ளார்.

சம்மர்ஸ் தனது ஆசியப் பிராந்திய சுற்றுலாவின் இறுதியில் டோக்கியோவில் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: "ஜப்பானின் எதிர்பார்ப்புக்கள் ஒரு சில மாதங்களுக்கு முன்னர் அவர்களுக்கு இருந்ததை விட மோசமாகத் தெரிகின்றது. 1999ம் ஆண்டில் மற்றொரு பாதகமான வளர்ச்சியை மதிப்பீட்டாளர்கள் எதிர்பார்க்கின்றார்கள். தனிப்பட்ட அனுமானங்கள் விலைகளில் வீழ்ச்சியைக் குறித்துக் கொண்டுள்ளன.

"பூகோளரீதியான பொருளாதாரம் நிரந்தரமாகத் தனியொரு இயந்திரத்தில் பறக்க முடியாது. ஒரு பூகோளரீதியான பொருளாதாரம் பொதுவில் ஒரு வெற்றிகரமான ஜப்பான் இல்லாமல் வெற்றி காண முடியாது."

ஏற்றுமதிகளை அதிகரிக்கச் செய்ய யென்னை வீழ்ச்சிகாணச் செய்ய இடமளிக்கும் [illegible] பதிலீடாக முடி[illegible] வலியுறுத்தினார். "செலாவணி வீதம் கொள்கைக்கான ஒரு பதிலீடாகிவிட முடியாது" எனவும் அவர் கூறினார்.

ஆனால் அமெரிக்க திறைசேரி பிரதிச் செயலாளர் சம்மர்சுக்கு ஜப்பானிய அரசாங்கத்திடம் இருந்தோ அல்லது அதிகாரிகளிடம் இருந்தோ பாவமன்னிப்புக் கிடைக்கவில்லை. ஜப்பானிய ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் "கொள்கையாக்கத் தலைவர்" என வருணிக்கப்படும் யுக்கிதஹிகோ இக்கோடாவின் கருத்துக்கள் இன்று அமெரிக்காவுக்கும் ஜப்பானிய அரசாங்கத்துக்கும் இடையே இருந்துவரும் சில பதட்ட நிலைமையை எடுத்துக்காட்டுவதாக விளங்கியது.

"சம்மர்ஸ் அதைச் செய், இதைச் செய் எனக் கூறுகின்றார். ஆனால் நாம் ஏற்கனவே தீர்மானித்துள்ள நடவடிக்கைகளைத் தொடர்வோம்" எனக் கூறியுள்ளார். அத்தோடு தாம் சம்மர்சை எச்சரிக்கை செய்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். அவரது குறிப்புக்கள் அவர் நினைத்ததைவிடக் கூடுதலான தாக்கத்தைக் கொண்டுள்ளதாகவும் ஆதலால் அவர் பேசும் போது மிகவும் கவனமாகச் சிந்திக்கும்படி எச்சரிக்கை செய்வதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து வந்த அரசாங்கங்களின் செலவுக் குறைப்புத் தீர்வுகள் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதில் தோல்வி கண்டதைத் தொடர்ந்து அவதானம் நாணய நடவடிக்கைகள் பக்கம் திரும்பியுள்ளது. ஆனால் இங்கு நிதி அதிகாரிகளிடையே பெரும் பிளவு இருந்துகொண்டுள்ளது.

இதேசமயம் யப்பான் வங்கி வட்டி வீதக் குறைப்பை இரவோடு இரவாக 0.15 வீதத்தினால் குறைத்துள்ளது. எதிர்காலத்தில் இது இன்னமும் குறைய இடமுண்டு. ஆனால் இதேசமயம் யப்பான் வங்கி யப்பான் அரசாங்கம் நிதி முறிகளை விநியோகிப்பதை குறைத்துக் கொள்வதையோ அல்லது திறந்த சந்தையில் இந்த கடன் முறிகளைக் கொள்வனவு செய்வதை பாவலாக்குவதற்கு ஆதாவு வழங்கவோ மறுப்புத் தெரிவித்துவிட்டது. இது அதிகரித்துவரும் அரசாங்கச் செலவினங்களை நிதியீட்டம் செய்ய அரசாங்கம் அதிகமாக கடன் முறிகளை விநியோகிக்குமோ என்ற அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது. அத்தோடு விலைகளில் வீழ்ச்சியையும் நீண்டகால வட்டிவீத அதிகரிப்பையும் ஏற்படுத்துமோ என்ற பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

மிட்சுவா மியூராவின் (யொமியூரி ஷிம்பன் சஞ்சிகையின் பிரதி ஆசிரியர்) கருத்தின்படி இப்போது "மேலதிகம்" பொருளாதாரத்திற்கு ஒரு பெரும் பிரச்சினையாகத் தலையெடுத்துள்ளது. மேலதிகமான வசதிகளும் சாதனங்களும் பல கைத்தொழில்களில் இலாபம் ஈட்டும் வாய்ப்பைக் குழிபறிந்து போகச் செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மேலதிக உற்பத்தியும் கூட ஒரு அளவுக்கதிகமான போட்டிக்கு இட்டுச் [illegible] ஆதலால் காலவதியான [illegible] சாதனங்களையும் வெட்டித்தள்ளும் நிஜ அவசியம் ஏற்பட்டுள்ளது. உற்பத்தியைப் பெரிதும் திறமையானதாக முன்னெடுக்க வேண்டியுள்ளது." என்றுள்ளார். உதாரணமாக உருக்குக் கைத்தொழிலில் 20வீதமான மின்சார உலைகள் பயனற்றவையாகிப் போய்விட்டன. அவ்வாறே சிந்தெட்டிக் பைபர் கைத்தொழில்களில் 30 வீத பொலிஸ்ட்ரீன் உற்பத்தி வசதிகள் பயனற்றுப் போய்விட்டன. இன்னும் பல கைத்தொழில்கள் உதாரணமாக செமிகொண்டக்டர், மோட்டார்வாகன கைத்தொழில்கள், இத்தகைய பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாக" அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யப்பானியத் தொழிலாளர்களுக்கு விடுக்கும் ஒரு எச்சரிக்கையாக அவர் கூறியுள்ளதாவது: "பொருளாதாரம் முகம் கொடுக்கும் மற்றொரு பிரச்சினை மேலதிகத் தொழிலாளர்கள். 30இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் கம்பனிகளில் தேவைக்கு அதிகமான உபரிகளாகுவர் எனச் சொல்லப்படுகின்றது. உழைப்புப் படையிலான உபரி பல ஜப்பானிய வர்த்தக நிலையங்களை தமது பாரம்பரிய வேலைவாய்ப்பு பட்டியல்களையும் சேவைமுப்பு முறையையும் புதுப்பிக்கும்படி தள்ளியுள்ளது." என்றுள்ளார்.

இந்த நீண்டகால வட்டிவீத பிரச்சினையானது ஜப்பானிலும் அமெரிக்காவிலும் பொருளாதாரங்களுக்கு பெரும் சிக்கலான பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது.

பொருளாதார விரிவாக்கங்கள் முக்கியமாக நுகர்வோர்களதும் கூட்டுத்தாபனங்களதும் கடன்களை அதிகரிப்பதன் மூலமே நிதியீட்டம் செய்யப்பட்டுவந்தது. சுருக்கமாகச் சொன்னால் பங்குமுதல் சந்தையின் செழிப்பின் "செல்வம்மிகுந்த தாக்கத்தினால்" நிதியீட்டம் செய்யப்பட்டுவந்தது.

அமெரிக்க பங்கு முதல் சந்தையின் கோட்டையாக விளங்கிய வோல் ஸ்ரீட்டின் எழுச்சியானது அமெரிக்க கடன் முறிகளைக் கொள்வனவு செய்யப் பயன்பட்ட வெளிநாட்டு மூலதனத்தின் பாய்ச்சலின் மூலமே நிதியீட்டம் செய்யப்பட்டது. இதன்மூலம் அவற்றின் விலைகள் அதிகரிக்கச் செய்யப்பட்டதோடு வட்டிவீதங்களை குறைத்துக்கொள்ளவும் வழிவகுக்கப்பட்டது.

வேறுவார்த்தையில் சொன்னால் பூகோளரீதியான பொருளாதாரம் பொருளாதார வீழ்ச்சியினுள் தள்ளப்படுவதானது அமெரிக்காவினுள் பாய்ந்து கொண்டிருந்த இந்த நிதி காரணமாக மட்டுமே தடுக்கப்பட்டுவந்தது. இது பங்குமுதல் சந்தையை பெருக்கெடுக்கச் செய்ததோடு கடன் மூலம் நிதியீட்டம் செய்யப்பட்ட செலவுகளை உயர்ந்த மட்டத்தில் கொண்டிருந்தது.

ஆனால் வட்டி வீதம் அமெரிக்காவிலும் சரி வேறு எந்த ஒரு நாட்டிலும் சரி அதிகரிக்குமானால் இந்தப் போக்கானது வெகு விரைவாக இதன் எதிரிடையாக மாற்றப்படும். எனவேதான் பெப்பிரவரியின் கடைப்பகுதியில் நிதி முறிச் சந்தைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியானது வோல் ஸ்ரீட் ஊடாக பெரும் பூகம்பங்களை ஏற்படுத்தியது. நீண்ட கால ஜப்பானிய வட்டி வீதங்கள், அதிகரிக்கத் தொடங்கி அமெரிக்க கடன் முறிகள் வீழ்ச்சிகாணுமானால் முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை விலக்கிக் கொள்ளத் தொடங்குவர் என்ற அச்சம் இருந்து கொண்டுள்ளது. நிதிமுறைச் சந்தையிலான ஒரு துரிதமான வீழ்ச்சியானது வோல் ஸ்ரீட்டில் ஒரு வீழ்ச்சியை ஏற்படுத்தும். அது அமெரிக்காவில் பொருளாதார வளர்ச்சியை உத்தரவாதம் செய்த போக்குகளை பின்வாங்கச் செய்வதாக விளங்குவதோடு உலகப் பொருளாதாரத்தை வீழ்ச்சியில் தள்ளுவதை சமிக்கை செய்வதாகவும் விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு ரீமோர்

# பிரெட்லின் அமைப்பை வீழ்ச்சி காணும் முதலாளித்துவத்துக்கு முண்டாக நிறுத்த முயற்சி

1975ல் இந்தோனேசிய இராணுவம் ஆக்கிரமிப்பு நடாத்தி கைப்பற்றிய கிழக்கு ரீமோரை கைவிட்டுவிட்டுச் செல்லத் தாம் தயார் என இந்தோனேசிய ஹபீப் ஆட்சியாளர்கள் ஜனவரி இறுதி வாரத்தில் தெரிவித்துள்ளனர். மேற்கத்தைய ஏகாதிபத்தியவாதிகளின் பொருளாதார அரசியல் நெருக்குவாரங்களின் தாக்கம் காரணமாக அவர்கள் இவ்வாறு கூறிக்கொண்டுள்ளனர்.

அரசியல், பாதுகாப்பு பிரச்சினைகள் தொடர்பாக இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர், பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசிய தகவல் துறை அமைச்சர், ஜெனரல் சொசிபியா யூரிசும், வெளிநாட்டு அமைச்சர் அலி சுலகாசும், இந்தோனேஷியா கிழக்கு ரீமோருக்கு, பிராந்திய சுயாட்சிக்கு மேலான தீர்வை வழங்கப் போவதாக தெரிவித்துள்ளனர். இதற்கான பரிசாக இந்தப் பிராந்தியத்தின் மீது இந்தோனேஷிய ஆளுமையை அனைத்துலக ரீதியில் அங்கீகரிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கிடையே 1975 தொடக்கம் இந்தோனேஷியா கிழக்கு ரீமோர் மீது ஆதிக்கம் கொண்டுள்ளதை ஒப்புக் கொண்டிருந்த ஒரே ஒரு ஏகாதிபத்திய நாடான அவுஸ்திரேலியாவும், அதைத் தாம் இனியும் தொடர்ந்து அங்கீகரிக்க முடியாது எனக் கூறிக் கொண்டுள்ளது.

அவுஸ்திரேலியா, இந்தோனேஷியாவின் அந்த உரிமையை அங்கீகரித்துக் கொண்டு இருந்ததற்குக் காரணம் என்ன தெரியுமா? அவுஸ்திரேலியாவுக்கும் கிழக்கு ரீமோருக்கும் இடையிலான ஆழ்ந்த கடல் பகுதியில் உள்ள எண்ணெய், இயற்கை வாயுக்களின் உரிமையின் பேரில் இந்தோனேஷியாவும் அவுஸ்திரேலியாவும் செய்து கொண்டிருந்த "ரீமோர் இடைவெளி" உடன்படிக்கையேயாகும்.

ஆனால் இந்தோனேஷிய சர்வாதிகாரி சுகார்ட்டோ பெரும் நெருக்கடியின் மத்தியில் வீழ்ச்சி கண்டு போனதன் காரணமாக, அந்த இராணுவ சர்வாதிகாரத்தினால் இந்த பிராந்தியத்தில் தொடர்ந்தும் பொலிஸ் நடவடிக்கைகளில் ஈடுபடுவது சாத்தியம் இல்லாது போயிற்று. அந்தக் காலப்பகுதியினுள் பிராந்தியத்தில் ஏகாதிபத்திய அவசியங்களின் மதில் சுவராக விளங்கிய இந்தோனேஷிய சர்வாதிகாரம், இன்றைய பூகோளமயமாக்கப்பட்ட சுரண்டலுக்கு ஒரு தடைச் சுவராக மாற்றம் ரீமோர் கடலின் பிரமாண்டமான எண்ணெய், இயற்கை வாயு வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையின் கீழ், ரீமோரில் 1975க்கு முன்னர் ஏகாதிபத்திய ஆட்சியாளனாக குறிக்கப்பட்ட போர்த்துக்கல் மீண்டும் அந்தப் பிராந்தியத்தின் ஆட்சியை தனது கைக்குள் போட்டுக்கொள்ள விண்ணப்பித்துக் கொண்டுள்ளது. சிறப்பாக ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் ஆதரவு போர்த்துக்கலுக்கு கிடைத்துள்ளது.

அவுஸ்திரேலியா உட்பட்ட சகல ஏகாதிபத்திய நாடுகளும் ரீமோரின் ஆளுமையை கைவிட்டுச் செல்லும் இத்தகைய ஒரு நிலைமையிலேயே இந்தோனேஷியாவை நெருக்குகின்றன.

அவுஸ்திரேலியாவின் வாயளப்பு பற்றி இந்தோனேஷிய வெளிநாட்டமைச்சர் அலகாசும் நிதி அமைச்சர் கர்சஸ் மித்ராவும் கடும் கோபத்தில் பேசியுள்ளனர். சுவிற்சலாந்தில் டாவோஸ் நகரில் சமீபத்தில் நடைபெற்ற அனைத்துலக நாணய மாநாட்டில் பேசிய கர்சஸ் மித்ரா "கிழக்கு ரீமோரை நிதி வளங்கள் என்ற முறையில் பெரிதும் இழந்துவிட்டோம்" எனவும் ரீமோரினால் இந்தோனேஷியாவிற்கு பெரிதும் சிக்கல்களும், குற்றச்சாட்டுக்களும் கொடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தோனேசியாவின் தலைநகரான ஜகர்த்தாவில், இதன் பேரில் பல அக்கறைகள் உருவாகியுள்ளன. நிகழ்கால ரீதியில் பார்த்தால் ரீமோர் பிரமாண்டமான பொருளாதார இழப்புக்களை ஏற்படுத்துகிறது. இந்தப் பூமியினுள் ஆயிரக்கணக்கான படையாட்களைப் பராமரிப்பதற்கு மேலதிகமாக, பிராந்தியத்தின் கல்வி, சுகாதாரம் முதலியவற்றுக்கு செலவாகும் செலவுகளில் நூற்றுக்கு 60 வீதம் இந்தோனேஷியாவில் இருந்தே கிடைக்கிறது.

400 வருட கால போர்த்துக்கல் ஆட்சியின் பின்னர், கிழக்கு ரீமோர் தென் கிழக்கு ஆசியாவின் பெரும் வறிய நாடுகளில் ஒன்றாக மாறியுள்ளது. அதன் வருமான மட்டம் இந்தோனேஷியாவின் சாதாரண வருமான மட்டத்தின் 1/3 பங்காகும்.

### அவுஸ்திரேலியாவும் ரீமோரும்

இருந்த போதிலும் நீண்ட கால அடிப்படையில் பார்த்தால், அவுஸ்திரேலியாவுக்கும், ரீமோர் தீவுக்குமிடையே இருந்து கொண்டுள்ள

தற்சமயம் இவாங் கக்கட்டுபா எண்ணெய் நிலங்களின் பேரில், அவுஸ்திரேலியா 136 மில்லியன் டாலர்கள் (60 லட்சம் கோடி) பெற்றுக் கொண்டுள்ளது. பி.எச்.சி, சன் கோஸ், பெற்றோஸ், இந்தோனேஷியா இம்பெக், கம்பனிகளின் கூட்டுக்கள் மூலம் நிர்வகிக்கப்படும் அந்த எண்ணெய் வளங்களில் இருந்து, வருடாந்தம் 12 1/2 மில்லியன் டாலர்கள் இந்தோனேஷிய அவுஸ்திரேலிய அரசாங்கங்களுக்கு கிடைக்கிறது. இந்த எண்ணெய் வளங்கள் விரைவில் முடிவடைந்து போனாலும், இதைவிட பிரமாண்டமான இயற்கை வாயு வளங்கள் கிடைக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. அப்பொழுது வருடாந்த அரச வருமானம் 300 மில்லியன் டாலர்களைத் தாண்டும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதைத்தவிர இன்னும் நான்கு எண்ணெய் வளங்கள் இந்தோனேஷியாவிற்கும் அவுஸ்திரேலியாவிற்கும் கூட்டாக உரித்தாக உள்ளன. கடந்த ஆண்டு இந்த உடன்படிக்கைக்கு உட்பட்ட பிராந்தியத்தின் எண்ணெய், இயற்கை வாயு இருப்புக்களின் பெறுமதி 19மில்லியன் டாலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தோனேஷிய ஆளும் வர்க்கத்திற்கு இதில் பெரிதும் பரந்த அர்த்தம் பொதிந்து போயுள்ளது. கிழக்கு ரீமோரை பிரித்து வேறாக்கினாலும், மேற்கு பப்புவா, அம்பொன், சுலவெய், போர்ணியோ, மற்றும் அயல் பகுதிகளும் அப்படி பிரிந்துபட்டு போகும் என அவர்கள் அஞ்சுகிறார்கள். இந்தோனேஷிய ஜனநாயகக் கட்சியின் மேகவதி சுகார்னா புத்திரியும், நந்தனதுல முஸ்லிமா உலேமா அமைப்பின் அப்துல்லாகுமான் வாகீட்டும், அரசாங்கம் ரீமோர் பிளவுபட்டுப்போகும் பிரச்சினையை எழுப்புவதையிட்டு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள்.

கிழக்கு ரீமோரில் நீண்ட கால ஆதிக்கத்தை உத்தரவாதம் செய்யாது போனால், இன்று உடனடியாக வெளியேறும் அராஜக நிலைமையை ஏற்படுத்துவதாக எச்சரிக்கை விடுக்கும் அதே வேளையில், இந்தோனேஷிய இராணுவம் தமக்கு ஆதரவான குழுக்களை ஆயுதபாணிகளாக்குவதன் மூலமும், இராணுவக் குழுக்களை கிழக்கு ரீமோருக்கு அனுப்புவதன் மூலம் மக்களுக்கு எதிரான கடை கெட்ட அடக்குமுறைத் தாக்குதல்களை கட்டவிழ்த்து விட்டுள்ளார்கள்.

இந்த நடவடிக்கைகள் 1975 ல் போர்த்துக்கல்லின் கைத்தானோவின் சர்வாதிகாரம் வீழ்ச்சி கண்டதன் பின்னர், கிழக்கு ரீமோருக்குள் ஊடுருவும் நிலைமைகளை உருவாக்கிய நிலைமைகளுக்கு இணங்கவே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இன்று இந்தோனேஷிய சர்வாதிகாரம் வீழ்ச்சி கண்டுள்ள ஒரு நிலைமையில், அங்கு எதனை புகுத்த வேண்டும் என்பது ஏகாதிபத்தியவாதிகளுக்கு பெரிதும் சிக்கலான ஒரு விடயமாகியுள்ளது.

சுயநிர்ணய சுயாட்சி வேலைத்திட்டம் எனப்படுவதை நடைமுறைக்கிட, ரீமோர் குட்டி முதலாளித்துவ கொரில்லா இயக்கமான பிரெட்லின் ( ) இயக்கத்திற்கு அழைப்புவிடப் போவதாக ஏகாதிபத்திய, முதலாளித்துவ பிற்போக்காளர்கள் கூறிக்கொள்கிறார்கள். சுகார்ட்டோ ஆட்சிக்காலத்தில் ஆயுட்கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவரும், பின்னர் அது 20 ஆண்டுகள் சிறைத்ண்டனையாக குறைக்கப் பட்டவருமான, பிரெட்லின் இயக்கத்தின் தலைவரான ஷனானா கஸ்டா ஓ. கடந்த பெப்பிரவரி முற்பகுதியில் சிறையிலிருந்து வீட்டுக்காவலுக்குத் தள்ளப்பட்டார்.

பிரெட்லின் இயக்கம், ரீமோர் ஜனநாயக இயக்கம் என்ற இரண்டு அமைப்புக்களும், மாபெரும் தலைவனாக பெயர் சூட்டப்பட்ட இவரும், உப தலைவரான ராமோஸ் ஹொர்கா என்ற இருவருடனும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட சமரசத்தின் மூலம், முதலாளித்துவ ஆட்சியை மீண்டும் ஸ்தாபிதம் செய்ய முயற்சிக்கின்றார்கள். தாம் ஆட்சிக்கு வந்தால் இந்தோனேஷிய அனைத்துலக மூலதனத்தை முன்நின்று காப்பதாக ஏற்கனவே தெரிவித்துள்ளனர்.

பிரெட்லின் இயக்கத்தைப் பாவித்து இப்பிராந்தியத்தினுள் திணிக்கும் ஆட்சி முறையானது, கிழக்கு ரீமோர் மக்களை மேலும் மேலும் சிறைக்குள் தள்ளுவதைத் தவிர வேறு எந்த ஒரு பாதைக்கும் வழி திறக்காது.

கிழக்கு ரீமோர் மக்களின் சுதந்திரத்துக்கான பாதை சோசலிச புரட்சியினூடாகவே செல்கின்றது.

இந்தியா:

# பாரதீய ஜனதா கட்சி அரசாங்கத்தின் பின்னணியில் தீவிரமடையும் சமூகப் பதட்ட நிலைமை

கடந்த பதினொரு மாதகாலமாக ஆட்சி நடாத்திவரும் பாரதீய ஜனதா கட்சி தனது இந்து பேரினவாத வலதுசாரிப் போக்குக்கு முண்டுகொடுத்துவந்த சிறுகட்சிகளின் ஆதரவு ஈடாட்டம் கண்டநிலையில் ஊசலாடுகின்றது. பிராந்தியவாத முதலாளித்துவக் குழுக்கள் அண்மையில் பீ.ஜே.பி.அரசாங்கம் வெளியிட்ட உணவுப் பொருட்கள், உரம், சமையல் காஸ் விலை அதிகரிப்பைப் தொடர்ந்து வெடித்தெழும் பதட்ட நிலைமையின் காரணமாக தமது ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதாக கூறிக்கொண்டுள்ளன. பா.ஜ.க. அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கி வந்ததும் நான்கு எம்.பீ.க்களைக் கொண்டதுமான இந்திய தேசிய லோக்தாள் ஏற்கனவே இராஜினாமாச் செய்து கொண்டுள்ளது. பெப்பிரவரி 4ம் திகதி சீக்கிம் மாநில சீக்கிம் ஜனநாயகக் கூட்டணி ஆதரவை விலக்கிக் கொண்டுள்ளது.

"விவசாயிகள், சாதாரண குடிமக்கள், உழைக்கும் மக்களின் நலனில் அக்கறையில்லாத ஒரு அரசாங்கத்திற்கு நாம் ஆதரவு வழங்க முடியாது" எனத் தெரிவித்த லோக்தாள் தலைவர் ஓம் பிரகாஷ் சௌதாலா, அரசாங்கத்திற்கு நாம் வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொள்வதாகக் கூறும் கடிதத்தை ஜனாதிபதி கோ.ஆர்.நாராயணனுக்கு சமர்ப்பித்துவிட்டதாகத் தெரிவித்தார்.

போபாலின் பா.ஜ.க. பிரதிநிதி வர்மா இராஜினாமாச் செய்துள்ளார். போபால் நச்சுவாயுவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பாக உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படாததையிட்டு இவர் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார். இதற்கிடையே பீகார் மாநில அரசாங்கம் கலைக்கப்பட்டு அது மத்திய அரசாங்கத்தின் கீழ்க் கொணரப்பட்டுள்ளது.

### ஜெயலலிதா சர்ச்சை

தமிழ் நாடு [illegible] ஜெயலலிதா பா.ஜ.க.அரசாங்கத்திற்கு வழங்கும் ஆதரவைப் பேரம் பேசி சர்ச்சைக்கு உரியதாக்கியுள்ளார். மாபெரும் ஊழல் குற்றச்சாட்டு வழக்கில் ஜெயலலிதாவுக்குச் சாதகமான முறையில் மேல்நீதிமன்ற வழக்குகளை இடம்மாற்றி, அவற்றின் விசாரணையை இழுத்தடிக்க பா.ஜ.க.அரசாங்கம் செயற்பட்டதால் பா.ஜ.க.தலைவர் வாஜ்பாய் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளார். அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்படும் நிலைமையினுள் ஊசலாடிவரும் எதிர்க்கட்சியான காங்கிரசின் (இ) எதிர்ப்பையும் பா.ஜ.க.எதிர்கொண்டுள்ளது.

பா.ஜ.க.யின் அரசியல் நெருக்கடியை பயன்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றத் தருணம் பார்த்துள்ள இந்தியக் காங்கிரஸ் கட்சி தலைவி சோனியா காந்தி, பா.ஜ.க. ஆட்சிக்கு பாதகமாகியிருக்கும் அவசியமோ அல்லது விரைந்து ஆட்சியைக் கைப்பற்றும் தேவையோ தனக்குக் கிடையாதெனத் கூறிவந்துள்ளார். ஆனால் இவர் காங்கிரஸ் கட்சியின் மாதாந்தக் கூட்டத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்:

"இந்த அரசாங்கத்தினால் ஆட்சியை நடாத்த முடியும் என்ற நம்பிக்கை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வீழ்ச்சி கண்டுள்ளது. நாம் விரைந்து எம்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாகுவோம். புத்துயிரூட்டப்பட்ட எமது கட்சி இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்கொள்ள எழுச்சி காணும் என்பதே எனது நம்பிக்கை" எனப் பலதடவைகள் சோனியா காந்தி வலியுறுத்தியுள்ளார்.

பா.ஜ.க.அரசாங்கத்தை ஈடாட்டம் காணச் செய்தது இதுவரை காலமும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக அது தொடுத்து வந்த சமூக, பொருளாதாரத் தாக்குதல்கள் உக்கிரம் கண்டதேயாகும்.

15ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை -இந்திய வர்த்தக ஒப்பந்தம்:

# பொது மக்களுக்கு எதிரான தாக்குதலை உக்கிரமாக்கும் துரும்பு

**சோசலிச சமத்துவக் கட்சியின் அரசியல் குழுவின் அறிக்கை-1999 ஜனவரி 22**

இலங்கை இந்திய அரசாங்கங்களினால் சமீபத்தில் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தமானது உலக முதலாளித்துவ அமைப்பின் ஒரு முக்கிய முரண்பாட்டின் விளைவாக ஏற்பட்டது. அதாவது, உலகப் பொருளாதார அபிவிருத்திக்கும் காலவதியான தேசிய அரசுக்கும் இடையேயான முரண்பாடாக வெளியே தள்ளப்பட்டுள்ள முதலாளித்துவப் பொருளாதாரத்தின் பூகோளமயமாக்கத்தின் ஒரு பெறுபேறாக ஏற்பட்டது. இந்த நிலைமையினுள் முதலாளித்துவ அரசாங்கங்கள் இரண்டுக்கும் இடையே உருவான இந்த ஒப்பந்தம் தொழில், வாழ்க்கைத் தரங்கள் மீதான தாக்குதல்களை உக்கிரமாக்குவதிலும் இரண்டு நாடுகளதும் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் ஒடுக்கப்படும் மக்களைச் சுரண்டுவதை உக்கிரமாக்குவதிலும் ஒரு துரும்பாக விளங்கும்.

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாய்பாய்க்கும் இடையே புதுடில்லியில் 1998 டிசம்பர் 28ம் திகதி கைச்சாத்தான இந்த உடன்படிக்கை இலங்கை, இந்திய முதலாளி வர்க்கப் பகுதியினரால் "மகத்தான ஒப்பந்தம்" எனவும் "முக்கிய தரப்பினருக்கிடையேயான தொடர்புகளின் ஆரம்பமாகவும்" தூக்கிப்பிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி இந்தியாவினதும் இலங்கையினதும் 1000 உற்பத்திகளுக்கான இறக்குமதி வரிகள் மூன்று வருடங்களுக்கு இரத்துச் செய்யப்படுவதோடு, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான 900 உற்பத்திகளுக்கான இறக்குமதி வரி எட்டு வருடங்களுக்கு நீக்கப்படும். இறக்குமதி வரி அகற்றப்படும் பொருட்களின் பட்டியலும், இறக்குமதி வரியின் மூலம் பாதுகாப்பு வழங்கப்படும் பொருட்களின் பெயர்களைக் கொண்ட "இரத்து பட்டியலும்" இந்த ஒப்பந்தம் கைச்சாத்தான நாளில் இருந்து 60 நாட்களில் வெளியிடப்பட உள்ளது. 1999 மார்ச் 1ம் திகதி இது வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை வர்த்தக ஒப்பந்தத்தில் உள்ள இடைவெளியை குறைத்துக் கொள்ளவே இலங்கை அரசாங்கம் இந்த ஒப்பந்தத்துக்குச் செல்வதற்கு காரணமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1997ல் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா.33,023 மில்லியன்களாகும்.(560மில்லியன் டாலர்) இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதியான பொருட்களின் பெறுமதி ரூபா.2582மில்லியன்(42.7 மில்லியன் டாலர்)அல்லது இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதியில் நூற்றுக்கு 8வீதமாக இருந்தது.

### ஒப்பந்தம் சம்பந்தமாக இலங்கை முதலாளிகளிடையே முரண்பாடு

இந்திய வர்த்தகர்களிடம் இருந்தோ அல்லது அந்நாட்டு வெகுஜனத் தொடர்புச் சாதனங்களிடம் இருந்தோ அல்லது அரசியல் கட்சிகளிடம் இருந்தோ சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் சம்பந்தமாக எதிர்ப்புக் கிளம்பியுள்ளதாகத் தெரியவில்லை. ஆனால் இலங்கை முதலாளி வர்க்கக் குழுக்கள் இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக இருகோஷ்டியாக பிளவுண்டு போய் உள்ளன. ஒரு புறத்தில் "மகிழ்ச்சியும்" மறுபுறத்தில் "கவலையும்" தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வர்த்தக சபையின் தலைவரும் இலங்கையின் பெரும் வர்த்தக நிறுவனத்தின் அதிபரும், 1997 98 ஆண்டுகளில் முதல் தடவையாக 100பில்லியன் ரூபாக்களுக்கும் அதிகமான இலாபம் ஈட்டிக் கொண்டதுமான கம்பனிகளின் தலைவருமான கென் பாலேந்திரா இதை "சரியான வழியில் எடுக்கப்பட்ட நடவடிக்கை" எனக் கூறியுள்ளார். இலங்கை வர்த்தக சபையின் அங்கத்தவர்களுக்கு இந்த ஒப்பந்தத்தின் "பெறுபேறுகள்" பற்றி விளக்குவதற்கு இடம்பெற்ற கருத்தரங்கில் பின்வருமாறு குறிப்பிட்டார்: "மூன்று வருடங்களில் இந்தியாவிடம் இருந்து பூரண சுதந்திர ஏற்றுமதி முறையைப் பெற்றுக் கொள்ளும் இலாபம் இலங்கைக்கு உள்ளது."

ஆனால் இலங்கை வர்த்தக, கைத்தொழில் சபையின் தலைவர் பட்ரிக் அமரசிங்க தமது "கவலை"யைத் தெரிவித்துக் கொண்டுள்ளார். அவர் கூறியுள்ளதாவது : "இது இந்தியாவின் பிரமாண்டமான சந்தைக்குள் நுழைவதற்கு சந்தர்ப்பம் வழங்குமானால் அது மிகவும் சிறந்தது. ஆனால் எமது கைத்தொழில் அதற்கு ஏற்ற விதத்தில் ஒழுங்கு செய்யப்படவில்லை." என்றுள்ளார்.

தேசிய கைத்தொழில் சபையும் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் "பிரமாண்டமான வேலையின்மையும் தொழில்நுட்பம் இல்லாது போகச் செய்யும் வெட்டுக்களும் கதவடைப்புக்களும்" கைத்தொழில் துறையில் ஏற்படுமோ என்ற கவலையை வெளியிட்டுள்ளது.

இந்த சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பற்றி இதே தேசிய கைத்தொழில் சபை வெளியிட்டுள்ள ஒரு பத்திரிகை அறிக்கையில் பல்வேறு "கவலைகளை" வெளியிடும் விதத்தில் பின்வருமாறு கூறிக்கொண்டுள்ளது: "கைத்தொழில், படித்த இளைஞர்களிற்குத் தொழில் வாய்ப்பு வழங்குகின்றது. சகல வருடமும் பாடசாலைகளில் இருந்து வெளியேறும் பல இலட்சம் பேரின் முக்கிய தொழில் மார்க்கமாக இருப்பதும் கைத்தொழில்களேயாகும். கைத்தொழில் உற்பத்தியை சுதந்திரமாக ஏற்றுமதி செய்யும் ஒரு நிலைமையினுள் உருவாகும் பிரமாண்டமான வேலையின்மையைப் பற்றிச் சிந்திப்பது பெரும் அச்சம் தருகின்றது."

பிற்போக்கு தேசியவாதிகளதும் இனவாதிகளதும் மேடையான 'ஐலண்ட்' முதலாளித்துவப் பத்திரிகை இந்த "அச்சங்களுக்கான" பின்னணியைக் காட்டும் விதத்தில் அவற்றை வெளியில் கக்கியுள்ளது. "ஜாதிக சிந்தன பர்ஜதய" என்ற அமைப்பினுள் அணிதிரண்டு கொண்டுள்ள சிங்கள இனவாத பாசிஸப் புள்ளிகளின் தலைமைச் சிந்தனையாளரான பேராசிரியர் நளின் டி சில்வா இப்பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் இந்த வர்த்தகர்களின் அச்சத்தை வெளிக்காட்டிக் கொண்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்த வர்த்தகர்களும் அவர்களின் சிந்தனையாளர்களும் தொழிலாளர்கள், வேலையற்றோர் பற்றி முதலைக் கண்ணீர் வடிக்கின்றார்கள். அரச நிறுவனங்களை தனியார்மயமாக்கியதன் மூலம் கொழுத்துப் பருத்ததும் தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்யவும் சம்பள, சேவை நிலைமைகளை வெட்டவும் நடவடிக்கை எடுத்ததும் இந்த பிற்போக்கு வர்த்தகர்களே. சமீபத்தில் இவர்கள் வர்த்தக ஒப்பந்தத்துக்கு ஆதரவான வர்த்தகச் சபை தலைவர்களுடன் சேர்ந்து அரசாங்கத்துக்கும் ஏனைய கட்சிகளுக்கும் முன்வைத்த கோரிக்கைகளின் பட்டியலில் தொழிலாளர்களின் உரிமைகளைக் காப்பதாகத் தோன்றும் தொழிற் சட்டங்களை அகற்றும்படியும் மனம்போன போக்கில் வேலைநீக்கங்களைச் செய்ய இடமளிக்கும் படியும் கேட்டிருந்தனர். பலம் வாய்ந்த பூகோளமயமான போக்கினுள் தாம் புதையுண்டு போக நேரிடுமோ என்ற பீதி இவர்களைப் பிடித்துக் கொண்டுள்ளதை இது! எடுத்துக் காட்டுகின்றது. சகல பின்தங்கிய நாடுகளிலும் உள்ள முதலாளி வர்க்கத்தின் [illegible] பீதி இருந்து [illegible] இறுதியில் இவர்கள் விதிகளுக்குக் கட்டுப்பட்டு ஒன்றில் குப்பைக் கூடைக்குள் தள்ளப்படுவர். அல்லது அனைத்துலக மூலதனத்தின் சகாக்களாக மாறுவர்.

முக்கிய எதிர்க்கட்சியான யூ.என்.பி.யின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க கொள்கை ரீதியில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு இணங்கினாலும் அதை நடைமுறைக்கிடும் நிகழ்ச்சி நிரல் நீண்ட ஒன்றாக இருக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

### அனைத்துலக மூலதனத்துடன் உறவு

இலங்கையின் பொதுஜன முன்னணி அரசாங்கமும் இந்தியாவின் பாரதீய ஜனதா கட்சி கூட்டரசாங்கமும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் காரணம் "சுதந்திர வர்த்தகம்" தொடர்பாக அவர்களுக்கு இருந்து கொண்டுள்ள காதலினால் அல்ல. இந்த முதலாளிகள் இந்த உடன்படிக்கை மூலம் தமக்கு அனைத்துலக மூலதனத்துடன் நெருங்கிய கூட்டுக்குச் செல்ல மேலும் வாய்ப்புக்கிட்டும் எனக் கணக்கிட்டுக் கொண்டுள்ளனர்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் அதனது பொருளியல் ஆலோசர்களதும் முக்கிய முதலாளிகளதும் கணிப்பு என்ன? இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மூலம் இலங்கைக்கு அதிகம் அதிகமாக வெளிநாட்டு செலாவணியைக் கவர்ந்து கொள்ள நிலைமைகள் உருவாகும் என்பதேயாகும். அவர்களின் தர்க்கம் என்ன தெரியுமா? இந்தியா தனது சந்தையை முழுமையாகத் திறந்து விடாத ஒரு நிலைமையில் இலங்கைக்குள் வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்ந்து கொள்வதன் மூலம், இலங்கையை இந்தியாவின் பரந்த சந்தையாக இறக்குமதி செய்யும் மேடையாக மாற்ற முடியும் என்பதேயாகும். இந்த உடன்படிக்கை கைச்சாத்தானது தான் தாமதம் இந்திய வர்த்தக, கைத்தொழில் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கூட்டத்தில் பேசிய இலங்கை ஜனாதிபதி, தென் ஆசிய நாடுகளின் வருடாந்த வருமானமான 500 பில்லியன் டாலர்களில் நூற்றுக்கு 75சதவீதம் இந்தியாவுக்கு செல்வதாகவும் இலங்கைக்கு இதில் நூற்றுக்கு 3சதவீதமும் பாகிஸ்தானுக்கு 14 சதவீதமும் பங்களாதேசுக்கு 7சதவீதமும் நேபாளத்துக்கு 1 சதவீதமும் மட்டுமே கிடைப்பதாகவும் கூறினார். தமது பேச்சில் அவர் மேலும் கூறியதாவது: "இந்தியா இல்லாமல் எதுவும் செய்ய முடியாது. எழு தேசங்களிலும் தென் ஆசிய அரசுகளில் பெரியதும் முதன்மையானதுமான பங்காளியான இந்தியா தொடர்ந்து அப்படி இருந்துவரும். எவ்வாறெனினும் நாம் இப்போது கூட்டு முயற்சிகளை எதிர்பார்க்கின்றோம். இந்த நிலைமையினுள் இந்தியாவின் தனியார் துறை முக்கிய பாத்திரத்தினை வகிக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்."

இது வாயைப்பிளந்தபடி வெளிநாட்டு முதலீடுகளை எதிர்பார்த்துக் கொண்டுள்ள இலங்கை முதலாளிகளின் அவஸ்தை நிலைமையை எடுத்துக்காட்டுகின்றது.

இந்திய முதலாளிகள் இந்த உடன்படிக்கை புதிய சந்தையைத் திறந்துவிடும் எனவும் வெளிநாட்டு முலீடுகளை ஈர்த்துக்கொள்ள கைகொடுக்கும் எனவும் எண்ணிக்கொண்டுள்ளனர். இதனது எதிர்பார்ப்பை இந்து பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு சுருக்கிக் கூறி இருந்தது: "குறுங்காலப் பிரச்சினைகளுள் மாட்டிக் கொள்ளாது இந்தியா புதிய சித்திரத்துடன் புதிய நூற்றாண்டுக்கு பிராந்தியம் கிளம்பும் போது சார்க், சப்டா (தென் ஆசிய சுதந்திர வர்த்தக பிராந்தியம்) என்ற இரண்டையும் வெற்றியடையச் செய்ய உத்சாகமளிப்பதாக இருக்கும்." என்றது (1998 டிசம்பர் 31)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான இந்த உடன்படிக்கை [illegible] மூலதனம் இலாபத்தைக் [illegible] கொள்வதற்குச் செய்யும் முயற்சியினுள் மிகவும் முக்கியமான பொருளாதார வழிகாட்டிகளின் செயற்பாட்டைக் குறிக்கின்றது. உற்பத்திச் சக்திகளிலும் கணனி தொழில்நுட்பத்திலும், வெகுஜனத் தொடர்புச் சாதனங்களிலும் போக்குவரத்திலும் ஏற்பட்டுள்ள புரட்சிகர அபிவிருத்தியானது தேசிய எல்லைகளைத் தாண்டி, உலக சந்தையை மேலும் மேலும் ஒன்றிணைக்க வேண்டுகின்றது.

கடந்த தசாப்தத்தில் வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்( நப்டா), ஆசிய இந்து சமுத்திர பொருளாதார உட்னுழைப்பு போன்ற புதிய வர்த்தகக் கூட்டுக்கள் உருவானதையும் அவ்வாறே பழைய வர்த்தக முகாம்கள் பலப்பட்டதையும் காணக்கூடியதாக இருந்தது . உலக முதலாளித்துவத்தின் நீண்டு செல்லும் வீழ்ச்சியின் நிலைமைகளுக்குள் உலகச் சந்தையின் பெரும் பங்கினைப் பிடித்துக் கொள்வதற்காக ஆளுக்காள் எதிராகப் பெரும் பங்கைப் பிடித்துக் கொள்ளும் போட்டிகளை அவை காட்டிக் கொண்டுள்ளன. தமது போட்டியாளர்களுடன் போட்டியிடுவதற்காக ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் இணைவதையும் இப்போது காணக்கூடியதாக உள்ளது.

இந்தியாவும் இலங்கையும் முக்கிய முதலாளித்துவ சக்திகள் அல்ல. ஆனால் இந்த இரண்டு நாடுகளிலும் முதலாளி வர்க்கங்களுக்கு அனைத்துலக மூலதனத்துடன் இணைந்து கொள்வதைத் தவிர வேறு தெரிவுக்கான மார்க்கம் இல்லாது உள்ளது. இலங்கையினுள் இந்தப் போக்கானது 1977ல் இருந்து வலதுசாரி யூ.என்.பி. அரசாங்கத்தின் கீழ் ஆரம்பமாகியது. யூ.என்.பி. அரசாங்கம் பூகோளமயமாக்கம் தோன்றிக் கொண்டிருந்த ஒரு நிலைமையின் கீழ் தொடர்ந்தும் பராமரிக்க முடியாது போன பழைய தேசிய முதலாளித்துவ வேலைத்திட்டத்தை வீசியது. பொதுஜன ஐக்கிய முன்னணி மிகவும் இறுக்கமான முறையில் இன்று நடைமுறைக்கிடுவது, அனைத்துலக மூலதனத்தின் இந்த வேலைத்திட்டத்தையேயாகும். இந்திய ஆளும் வர்க்கம் கணிசமான காலத்தின் பின்னர் இந்த வழியை கடைப்பிடித்தது. 1991ல் காங்கிரஸ் அரசாங்கங்களின் தேசியவாத வேலைத்திட்டத்தை கைவிட்டுவிட்டு, திறந்த பொருளாதாரக் கொள்கையை ஆரம்பித்தது. இது யுத்தத்தின் பின்னர் பின்தங்கிய நாடுகளுள் கடைப்பிடிக்கப்பட்ட தேசிய முதலாளித்துவ திட்டங்களின் பண்புரீதியான மாற்றத்தை எடுத்துக் காட்டியது. இலங்கையும் இந்தியாவும் முக்கிய முதலாளித்துவ சக்திகள் இல்லாது போயினும் அவற்றின் விதிமுறையையும் தீர்மானம் செய்வது, பூகோளரீதியான மூலதனத்தின் அவசியங்களேயாகும். 2010ம் ஆண்டளவில் உலக சுதந்திர வர்த்தக ஆட்சி முறையை உருவாக்குவதை பூர்த்தி செய்ய வேண்டும். அது ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் பின்தங்கிய நாடுகளின் பொருளாதாரங்களை ஆரம்பிப்பதற்கு நிதி மூலதனத்தின் எஜமானர்கள் விடுக்கும் அரசியல் கட்டளையின் வடிவத்தை எடுத்துக் கொண்டுள்ளது.

பூகோளரீதியான நடவடிக்கைகளில் இணைந்து கொள்ளவும் தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிராக பிராந்திய ஆளும் வர்க்கங்களின் அரசியல் அணிதிரள்வினை ஏற்படுத்துகின்ற வழியாகவும் தென்ஆசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பு (சார்க்) அமைக்கப்பட்டது. சார்க்கின் கீழ் தென்ஆசிய சுதந்திர வர்த்தக வலய(சப்டா)த்தை 2001ல் நிறுவுவது பற்றிய பேச்சுவார்த்தைகள் தற்சமயம் இடம்பெற்று வருகின்றது. உரிய காலத்துக்கு முன்னதாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே இருதரப்பு வர்த்தக உடன்படிக்கைக்கு இணங்கிக் கொண்டமையானது இருநாட்டு அரசாங்கங்கள் தொடர்பாக சிறப்பாக இலங்கை அரசாங்கம் தொடர்பாக பொருளாதார, அரசியல் நிகழ்ச்சி நிரல் எந்தளவுக்கு நெருக்குவாரத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை யூ.என்.பி.-பொதுஜன முன்னணி அரசாங்கங்கள் இலவச சுகாதார சேவையை வெட்டித் தள்ளியதன் காரணமாக தமது முறைக்காக ஆஸ்பத்திரிகளில் மனித்தியாலக் கணக்கில் காத்துக் கிடக்கத் தள்ளப்பட்ட நோயாளிகள். இம்மக்களின் எண்ணிக்கை இந்தியாவில்(வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோர்) 1950பதுகளில் 164 மில்லியன்களில் இருந்து இன்று 320 மில்லியன்களாக அதிகரித்துள்ளது

உள்ளாகியுள்ளது என்பதைக் காட்டிக் கொண்டுள்ளது.

1995ல் இந்தியாவுக்கு 1750 மில்லியன் டாலர் வெளிநாட்டு முதலீடுகள் பெருக்கெடுத்து வந்துள்ளது. 1995ல் இலங்கைக்கு வந்த வெளிநாட்டு முதலீடு சுமார் 195 மில்லியன் டாலர்கள் மட்டுமே. இது 1998ல் 155 மில்லியன் டாலர்களாக வீழ்ச்சி கண்டது. கிழக்கு ஆசிய நெருக்கடியின் காரணமாக இலங்கைக்கு சுமார் 75 100 மில்லியன் டாலர் வெளிநாட்டு முதலீடுகள் இல்லாது போயிற்று என முதலீட்டுச் சபையின் தலைவர் சமீபத்தில் அறிவித்துள்ளார்.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் முழுப்பயனையும் அடைவது எப்படி என்பது குறித்து ஏற்கனவே வர்த்தக வட்டாரங்களில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி உள்ளது.

இந்தியாவுடன் ஒப்பிடும் போது இலங்கைக்கு இருந்து கொண்டுள்ள பெரும் தடை, உயர்ந்த உழைப்புச் செலவாகும் என அவர்கள் கூறிக் கொண்டுள்ளனர்.

இதன் அர்த்தம் என்ன? வர்த்தக உடன்படிக்கையை அமுல் செய்வதோடு சம்பளம்,சேவை நிலைமைகளை படுகுழியில் தள்ளுவதும், தொழிலாளர் படையைக் குறைப்பதும் உழைப்பு மட்டத்தை உயர்த்துவதும் ஆகும். இதை அமுல் செய்ய ஈவிரக்கமற்ற வேலைத்திட்டம் அமுலுக்கு வரும். அவ்வாறே இந்த உடன்படிக்கை "சந்தைப் போட்டியை" உருவாக்கும் பெயரில் தாக்குதல்கள் நடாத்துவதன் மூலம் இரண்டு நாடுகளதும் கைத்தொழில்களை மேலும் சுத்திகரிக்க ஊக்கம் அளிக்கப்படும்.

## விவசாயி, கிராம மக்களுக்கு தலையடி

விவசாயிகளது வாழ்க்கைத் தரத்தை வீழ்ச்சி அடையச் செய்யவும் முதலாளித்துவ விவசாயத்துக்கான நிலைமைகளை கிராமப்புறங்களில் உருவாக்கவும் பொதுஜன முன்னணி அரசாங்கம் "சுதந்திர பொருளாதாரக் கொள்கையை" பயன்படுத்திய முறையைக் கண்டோம். இந்த சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் கைத்தொழில், விவசாயத் துறையினுள் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை ஏற்கனவே காட்டிக் கொண்டுள்ளது. பெரிதும் இலாபகரமான முறையில் உருளைக்கிழங்கு, வெண்காயம், மிளகாய் இறக்குமதி செய்வதை அரசாங்கம் நியாயப்படுத்தியது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசாங்கம் கூறியது என்ன? தமது சொந்தத் தவறினாலேயே அவர்கள் வீழ்ச்சி கண்டுள்ளனர். அதாவது: குறைந்தமட்ட உழைப்பு விளைதிறனும், உயர்ந்த மட்ட உழைப்புச் செலவுமே காரணம் என்றது.

இலங்கை சந்தைக்கு இந்தியப் பண்டங்கள் பெருக்கெடுத்து வரும் போது கைத்தொழில்கள் வங்குரோத்தடைந்து அவற்றை இழுத்து மூடுவதானது தொழிலாளர்களை வேலைகளில் இருந்து நீக்க இடமளிக்கும். பிரபல முதலாளித்துவப் பொருளியலாளரான கலாநிதி. ஜே.பி.கெலேகம இந்த உடன்படிக்கைக்கு எதிராகக் கருத்து வெளியிடுகையில் தமது அச்சத்தை பின்வருமாறு வெளியிட்டுள்ளார்:

"வர்த்தகத்தின் பாதிப்பானது வேலையின்மைக்கும் வறுமைக்கும் சமூகப் பதட்ட நிலைமைக்கும் இடமளிக்கும்." என்றுள்ளார். ஆனால் அவர் இந்தப் பிரச்சினைக்கான தீர்வாக முன்வைத்திருப்பது இந்தப் பெறுபேறுகளைக் கொணர்ந்த வெளிநாட்டு முதலீடுகளுடன் இணைந்து கொள்வதேயாகும். வேலையின்மையினதும் வறுமையினதும், சமூகப் பதட்ட நிலைமையினதும் நிலைமைகள் இலாப அமைப்பினதும் இலாபத்துக்கு அலையும் முதலாளித்துவத்தின் கீழும் பூகோளமயமாக்கத்திற்கு ஒன்றிணைவதன் பெறுபேறுகளாகும்.

'சுதந்திரம்' என்பபடுவதற்கு பிந்திய காலத்தில் இந்தியாவிலும் இலங்கையிலும் முதலாளிகள் கடைப்பிடித்த தேசியவாதக் கொள்கைகள் என்றாலும் சரி கடந்த தசாப்தங்களில் ஆரம்பமான திறந்த சந்தை கொள்கை என்றாலும் சரி பொருளாதாரத்தையோ அல்லது மக்களின் வாழ்க்கை முறைகளையோ அபிவிருத்தி செய்வதில் வெற்றி காணவில்லை. இது அனைத்து பின்தங்கிய நாடுகளைப் பொறுத்தமட்டிலும் ஒரே கதையேயாகும்.

இதை அளப்பதற்கான ஒரே அளவு கோல் வறுமை மட்டமாகும். இந்தியாவில் 1950பதுகளில் நிலவிய நூற்றுக்கு 45 வீதமான வறுமை வீதம் கடந்த ஆண்டில் நூற்றுக்கு 30வீதம் வரை வீழ்ச்சி கண்டுள்ளதாக அறிக்கைகள் வெளிவந்தன. ஆனால் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை 1950பதுகளில் 164 மில்லியன்களாக இருந்தது. இப்போது இது 320 மில்லியன்களாக வளர்ச்சி கண்டுள்ளது. இந்தியா பொருளாதாரத்தைத் திறந்துவிட்டதன் பின்னரே 1991ல் இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இலங்கையைப் பொறுத்தமட்டில் புதிய மத்திய வங்கி ஆய்வுகளின்படி குறைந்த வருமானம் பெறும் சனத்தொகையில் நூற்றுக்கு 40வீதமானோருக்கு 1986ல் தேசிய வருமானத்தில் நூற்றுக்கு 11வீதம் கிடைத்ததாகவும் இது 1997ல் நூற்றுக்கு 13வீதமாக அதிகரித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த "அதிகரிப்பு" முக்கியமாக இனவாத யுத்தத்துக்கு திரட்டப்பட்ட இளைஞர்களது சம்பளம், மத்திய கிழக்குக்குச் சென்ற தொழிலாளர்களிடம் இருந்து கிடைக்கும் வருமானத்தினாலேயே ஏற்பட்டுள்ளதாகப் பிரபல பொருளியல் நிபுணர்கள் கூறியுள்ளனர். இலங்கை மத்திய வங்கியின் மற்றொரு ஆய்வின்படி 1953ல் குறைந்த வருமானம் பெறும் நூற்றுக்கு 40சதவீதத்தினருக்கு அன்று கிடைத்த தேசிய வருமானத்தின் பங்கு நூற்றுக்கு 14.5வீதமேயாகும். இதன் அர்த்தம் என்னவெனில் இலங்கையின் சமூக சமத்துவமின்மை அன்றையைவிட இன்று அதிகம் உக்கிரம் கண்டுள்ளது என்பதேயாகும்.

## அரசியல் அர்த்தம்

பொருளாதார நெருக்கடிக்கும் அதன் விளைவாக பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சிகண்டு போவதற்குமான தீர்வை. முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரக் கொள்கையின் கீழ் கண்டுவிட முடியாது. சந்தைப் பொருளாதாரத்தின் கீழ் கூட்டு அபிவிருத்தியோ அல்லது பொருளாதார நடவடிக்கைகளில் நிஜ இணைப்பையோ பொதுமக்களின் நலனின் பேரில் உற்பத்திச் சக்திகளைப் பயன்படுத்துவதையோ அடையமுடியாது.

இந்தச் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையோடு தொழிலாளர் வர்க்கத்துக்கும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக இரண்டு நாடுகளதும் முதலாளி வர்க்கங்களுக்கும் இடையேயான பிணைப்பு அரசியல், பொருளாதார ரீதியில் பலப்படும். சிறப்பாக இலங்கையின் பொதுஜன முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் பெயரில் தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தத்தை நடாத்தும் பொருட்டு இந்திய அரசாங்கத்தின் உதவியை பிச்சை கேட்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான இந்த சுதந்திர வர்த்தக உடன்படிக்கையைப் பற்றி சமசமாஜக் கட்சியோ அல்லது கம்யூனிஸ்ட் கட்சியோ அல்லது நவ சமசமாஜக் கட்சியோ அல்லது தொழிற்சங்கங்களோ எந்த ஒரு வார்த்தை தன்னும் கூறவில்லை. இந்தக் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் அனைத்துலக மூலதனத்துடன் இணைந்து கொள்ளும் வேலைத்திட்டத்திற்கு ஆதரவு வழங்கி வருகின்றார்கள். 1998 அக்டோபர்22ம் திகதி இலங்கை வர்த்தக சபையினால் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிகளதும் மகாநாட்டில் கலந்து கொண்ட நவசமசமாஜக் கட்சி, தேசிய அரசுகளுக்கு இடையே ஒத்துழைப்பை ஏற்படுத்தும்படி வர்த்தக சபைகளையும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தையும் கேட்டுக்கொண்டிருந்தது. வர்த்தக சபைகளுக்கும் அரசாங்கத்திற்கும் அவர்கள் சமர்ப்பித்த பத்திரத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டது:

"பூகோளமயமாக்கத்தின் தொழிற்பாட்டினுள் தேசிய அரசுகள் பலவீனம் கண்டு, தகர்ந்து போக இடமுண்டு. ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் பலவீனமான அரசுகளுக்கு கட்டளை பிறப்பிக்கின்றன. இன்று உற்பத்திச் சக்திகளை இந்த தேசிய எல்லைகளுக்குள் கட்டுப்படுத்தி வைக்க முடியாது. இதனால் இடதுசாரிகளும் தொழிற்சங்கங்களும் பொதுஜன அமைப்புக்களும் குறைந்த பட்சம் தென் ஆசியாவினுள் எல்லைக்கோடுகளை தாண்டிச் செல்லும் கூட்டுக்களை ஏற்படுத்திக் கொள்ள முயல வேண்டும். ஆதலால் தேசிய அரசுகளினுள் ஒருமைப்பாட்டைக் காக்க முயற்சிப்பது, காலவதியானதும் யதார்த்தம் இல்லாததுமான ஒரு விடயமாகும். ஒரே எதிர்கால வழி, அனைத்து நாடுகளதும் , தேசிய அரசுகளதும் பரஸ்பரம் ஒத்துழைப்பை உருவாக்குவதேயாகும்." என்றுள்ளது.

நவ சமசமாஜக் கட்சி 1987ல் இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு அத்திவாரமிட்ட யூ.என்.பி. ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன கூட்டிய அனைத்து கட்சிகளதும் வட்டமேசை மகாநாட்டுக்கு ஆதரவு வழங்கியதைப் போலவே இக்கட்சி சுதந்திர வர்த்தக உடன்படிக்கையைத் தயார் செய்ய முதலாளித்துவச் சக்திகளுடன் சேர்ந்து கொண்டுள்ளது.

## தொழிலாளர் வர்க்க நிலைப்பாடு

சோசலிச சமத்துவக் கட்சி இந்த சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலகவாதத்தின் நிலைப்பாட்டில் நின்று எதிர்க்கின்றது. உலக பொருளாதாரத்தின் பூகோளமயமானது முன்னர் ஒரு போதும் இருந்திராத விதத்தில் உலகத்தைத் தனி அலகாக ஒன்றிணைக்கும் நடவடிக்கையானது அனைத்துலக ரீதியில் மட்டும் நடைமுறைப்படுத்தக்கூடிய அளவுக்கு உற்பத்திச் சக்திகளில் ஏற்பட்டுள்ள புரட்சிகர அபிவிருத்தி என்ற இந்த சகல அபிவிருத்திகளதும் பிரமாண்டமான முன்னேற்றமாகும். பிற்போக்கு தேசியவாத வேலைத்திட்டத்தின் அடிப்படையில் வர்த்தக உடன்படிக்கைக்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதோடு எமக்கு எந்தவிதமான பொதுமைப்பாடும் கிடையாது. அந்த வேலைத்திட்டம் வரலாற்றின் சக்கரத்தைப் பின்னுக்கு தள்ள முயற்சிக்கும் பிற்போக்கு வேலைத்திட்டங்களாகும்.

உழைக்கும் மக்களது தொழில், சேவை நிலைமைகள், சேமநலன்கள் மற்றும் உரிமைகளையும் வெற்றிகளையும் அனைத்துலக மூலதனம் இலாபத்துக்காக அலைந்து கொண்டுள்ளதாலேயே ஒழித்துக் கட்டுகின்றது. உற்பத்திச் சக்திகளின் புரட்சிகர அபிவிருத்திகளை பயன்படுத்தி மனித இனத்தின் அவசியங்களுக்காக உலகப் பொருளாதாரத்தை வெற்றிகரமான முறையில் ஒருங்குதிரட்ட முடியுமானால் அவர்கள் பட்டினி நோய்கள், மற்றும் பேரழிவுகளில் இருந்து தப்ப முடியும். அவற்றை ஒழித்துக் கட்ட முடியும்.மாபெரும் மனித கலாச்சாரத்தை கட்டி எழுப்புவதற்கான நிலைமைகளை ஸ்தாபிதம் செய்ய முடியும். அதனை சோசலிச அனைத்துலகவாத வேலைத்திட்டத்தின் அடிப்படையில் மட்டுமே கைவரப்பெற முடியும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான "வர்த்தக உடன்படிக்கையின் ஒரு இலக்காக வர்த்தக அபிவிருத்தியினுள் இந்தியாவுக்கும். இலங்கைக்கும் இடையே பொருளாதார உறவுகளை அபிவிருத்தி செய்ய முடியும்" எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த அரசாங்க உடன்படிக்கைகள் கைச்சாத்தான போதிலும் அவற்றினால் "சாத்தியமான அபிவிருத்தியை" ஸ்தாபிதம் செய்ய முடியாது. உலக முதலாளித்துவ அமைப்பின் எஜமானர்களுடன் இணைந்து இலாபத்துக்காக உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்டுள்ள இந்த ஆளும் வர்க்கங்களின் அவசியத்துடன் அது மோதிக் கொள்வதே அதற்கான காரணமாகும்.

இலங்கையிலும் இந்தியாவிலும் முழுத் தென் ஆசியாவிலும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் இலாப வெறியினால் அனைத்துலக மூலதனத்தின் வேலைத்திட்டமான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை "சாப்டா" என்ற பெயரில் முன்வைத்துள்ள முதலாளித்துவ வேலைத்திட்டங்களுக்கு எதிராக இந்தியத் துணைக் கண்டத்தில் சோசலிச ஐக்கிய குடியரசுக்கான வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒன்றுபட வேண்டும். தென் ஆசியாவில் தொழிலாளர் வர்க்கத்திற்கும் ஏழைமக்களுக்கும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் [illegible]

முன்வைக்கும் வேலைத்திட்டம் அதுவேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூகோளமயமாக்கமும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கமும்

## மார்க்சிசத்தின் குட்டி முதலாளித்துவ எதிரிகளுக்கு ஒரு பதில்

**நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை**

*அமெரிக்க ஸ்பாா்ட்டசிஸ்ட் லீக்கின் ஒரு தொடர் கட்டுரைகளுக்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் தயார் செய்யப்பட்ட பதில் 1998 மே இதழில் இருந்து தொழிலாளர் பாதையில் பிரசுரமாகின்றது.*


### ஸ்பார்ட்டசிஸ்டுகள் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சிகண்டுள்ளதை நிராகரிக்கின்றார்கள்

தொழிற்சங்கவாதத்தின் நின்றுபிடிக்கும் தன்மையைப் பேணும் போது ஸ்பார்ட்டசிஸ்டுகள் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சிகண்டு வருகின்றது என்ற சமூக யதார்த்தத்தை நிராகரிக்கும் அளவுக்கு சிரிப்புக்கிடமான முறையில் நடந்து கொள்கின்றார்கள்.

வேர்க்கர்ஸ் லீக்கின் 1993 முன்நோக்குப் பிரேரணை, 'முதலாளித்துவ உற்பத்தியின் பூகோளமயமாக்கமும் தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலகப் பணிகளும்' என்பதில் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் சம்பளத்தில் ஒரு துளியைக் கொண்டதான நாடுகளுக்கு உற்பத்தியை நகர்த்துவதன் மூலம் "ஏகாதிபத்திய மையங்களில் மூலதனம் உழைப்பைச் சுரண்டுகையில், சம்பள மட்டத்தை குறைப்பதும் வாழ்க்கைத் தரத்தை வீழ்ச்சி காணச் செய்வதும் கடந்த கால சமூகச் சீர்திருத்தங்கள், சட்ட வரையறைகள் மீது இடைவிடாத தாக்குதல்களும்" ஈவிரக்கமற்றமுறையில் இடம்பெறும் என விளக்கியிருந்தோம்.

எவ்வாறெனினும் இந்த மறுக்கமுடியாத போக்கினை வெறுமனே சுட்டிக் காட்டுகையில் ஸ்பார்ட்டசிஸ்டுகள் நோர்த்வாதிகள் (Northites) ஒரு மெல்லிய மார்க்சிச வாயடிப்புடன் பல்வேறு வகையறாக்களையும் சேர்ந்த முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ லிபரல்கள் முன்வைத்த வாதங்களை முன்தள்ளுகின்றார்கள்." என்கின்றனர். வேறுவார்த்தைகளில் சொன்னால் இந்தப் போக்கானது பல முதலாளித்துவப் பொருளியலாளர்களாலும் பத்திரிகையாளர்களாலும் குறிப்பிடப்பட்டு முதலாளித்துவ ஆட்சியின் உறுதிப்பாடு சம்பந்தமாக கவலை தெரிவிக்கப்பட்டு இருந்ததால் அப்படி ஒன்று இருப்பதை நிராகரிக்க வேண்டும்.

இந்தச் சிரிப்புக்கிடமான வாதத்தின் அடிப்படையில் ஒருவர் லெனினின் ஏகாதிபத்தியம் சம்பந்தமான ஆய்வுகள் பெருமளவுக்கு சமூக லிபரல் ஹொப்சனின் ஆக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருந்ததால் அதை நிராகரித்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம்.



மார்க்ஸ்



லெனின்

அவரின் காலத்தைச் சேர்ந்த ஏனைய முதலாளித்துவ பொருளியலாளர்கள்; பத்திரிகையாளர்களைப் பற்றி பேசவே வேண்டியதில்லை.

ஸ்பார்ட்டசிஸ்டுகள் இங்கே எதிர்க்கும் பந்தியானது ஒரு அரசியல் முன்னோக்கு அல்ல. ஆனால் வெறுமனே முதலாளித்துவச் சந்தையின் தொழிற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார உண்மையின் ஒரு அறிக்கையேயாகும். மூலதனம் பண்டங்களை ஒரு சந்தையில் ஏனையவற்றைக் காட்டிலும் பெரிதும் மலிவாகக் கொள்வனவு செய்து கொள்ள முடியுமானால் தொழிலாளர் வர்க்கத்தின் உழைப்புச் சக்தி திறமையானதும் திறமையற்றதும் மிகவும் நிச்சயமான முறையில் ஒரு பண்டமாகும் அப்போது அந்தப் பண்டத்தின் விலை ஏனைய சகல சந்தைகளிலும் வீழ்ச்சி காணச் செய்யும்.

சாராம்சத்தில் ஸ்பார்ட்டசிஸ்டுகள் அனைத்துலகக் குழுவைக் கண்டனம் செய்வது, முதலாளித்துவ உற்பத்தி முறையின் அடிப்படையான வரலாற்றுப் போக்குக்களை நிராகரிக்கத் தள்ளப்படுவதாக உள்ளது. மார்க்ஸ் அம்பலப்படுத்தியது போல் முன்னைய சகல சமூக உற்பத்தி முறைகளில் இருந்தும் முதலாளித்துவத்தினை வேறுபடுத்துவது எல்லாவற்றையும் தழுவிக் கொள்ளவும் பூகோளத்தின் ஒவ்வொரு மூலைமுடுக்குகளையும் சென்றடையவும் ஒரு உலகச் சந்தையைச் சிருஷ்டிக்கவும் இருந்து கொண்டுள்ள போக்கேயாகும். இதனது இந்த இயற்கையான போக்கானது தொழிலாளர் வர்க்கத்தில் இருந்து உபரிப் பெறுமானத்தை அதிகரித்த அளவில் சுரண்டிக் கொள்ளும் மூலதனத்தின் இடைவிடாத உந்துதலுடன் பிணைக்கப்பட்டுள்ளது.

ஸ்பார்ட்டசிஸ்டுகளின் ஆய்வு இப்போது நன்கு தெளிவாக அம்பலமாகின்றது: மூலதனத்துக்கு ஒரு உலகச் சந்தையை நிர்மாணிக்கும் ஒரு பொதுப் போக்கு இருந்து கொண்டுள்ளதோடு இது உழைப்புச் சக்தியைத் தவிர ஏனைய சகல பண்டங்களுடனும் தொடர்புபட்டது. மூலதனம் தனது தொழிற்பாட்டுக்கு மூலதனத் திரட்சிக்கு தடையாக இருந்து கொண்டுள்ள சகலதையும் உடைத்து எறிய முயற்சிக்கும் அதே வேளையில் ஒரு இடத்தில் நிற்கின்றது: உழைப்புச் சக்திக்கான சந்தை தேசிய அரசினுள் சிறைப்பட்டு நிற்கின்றது.

பூகோளமயமான உற்பத்தியானது உழைப்புச் சந்தையில் பரஸ்பரம் தொடர்புபட்ட இரண்டு போக்குக்களால் பண்பாக்கம் செய்யப்பட்டுள்ளது: உலகின் எந்த ஒரு பகுதியில் இருந்தும் உழைப்புச் சக்தியை கொள்வனவு செய்வதற்கான அதிகரித்த வல்லமையும் உழைப்புச் சக்தியின் பூகோளரீதியான விநியோகத்தின் பரந்த அளவிலான அதிகரிப்பும் அடுத்த தசாப்த காலத்தில் உலகின் உழைப்பு நிரம்பல் கிட்டத்தட்ட 1 பில்லியனால் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பூகோளமயமான மூலதனத்தின் இயக்கத்தின் ஊடாக விவசாயிகள் பிரமாண்டமான அளவில் நாசமாக்கப்பட்டுள்ளமையானது முன்னொருபோதும் இல்லாத ஒரு நிலைமையை உருவாக்கியுள்ளது: உழைப்புச் சக்தியைத் தவிர விற்பதற்கு வேறெதையும் கொண்டிராத வர்க்கமான பாட்டாளிவர்க்கம் மனித இனத்தின் வரலாற்றில் முதற்தடவையாக உலக சனத்தொகையில் பெரும்பான்மையினராக உள்ளது.

"கூலிகள் இரும்பு விதியின்" வக்கீல்களை எதிர்த்து வந்த அதே வேளையில் மார்க்ஸ், உழைப்புச் சக்தியின் விலையை வீழ்ச்சி காணச் செய்ய முதலாளித்துவ உற்பத்திப் போக்கினுள் தொழிற்பட்ட ஈவிரக்கமற்ற போக்கினைச் சுட்டிக்காட்டினார். அதாவது,

கூலிகள். எல்லாவற்றுக்கும் மேலாக உற்பத்திச் சக்திகளின் தொடர்ச்சியான முன்னேற்றமும் புதிய தொழில்நுட்பத்தின் அபிவிருத்தியும் உழைப்புக்கான கேள்வியைக் குறைத்தும் அதன் நிரம்பலைக் கூட்டியும் தொழிலாளர் வர்க்கத்தின் நிலைமையை மோசமடையச் செய்தது.

### கணனியின் தாக்கம்

சுருங்கச் சொன்னால் இது கடந்த இரண்டு தசாப்தங்களாக உற்பத்திப் போக்கில் இடம்பெற்ற கணனிமயமாக்கத்தினதும் தன்னியக்கமயமாக்கத்தினதும் தாக்கமாகும். முழு உற்பத்திப் போக்குக்களும் தொழில்நுட்ப ரீதியில் பரிணாமம் செய்யப்பட்டமையானது பரந்த அளவிலான உழைப்பை ஒதுக்கித் தள்ளிவிடுவதைச் சாத்தியமாக்கியது. அதே சமயம் உற்பத்திப் போக்கினை பரந்த தூரங்களுக்கு இடையேயும் பிணைப்பை ஏற்படுத்துவதை சாத்தியமாக்கியது: இதன் மூலம் மூலதனம் உயர்ந்த கூலி உழைப்பு பிராந்தியத்தில் இருந்து குறைந்த கூலி பிராந்தியங்களுக்கு இடம்பெயர்வதற்கு இடமளித்தது.

எவ்வாறெனினும் ஸ்பார்ட்டசிஸ்டுகளின்படி இந்தப் போக்கு உற்பத்தியையும் இலட்சோப இலட்சம் மக்களதும் வாழ்க்கையையும் மாற்றம் காணச் செய்து விட்டது என்பது ஒரு பிரச்சார இயக்கத்தின் கற்பனையே தவிர வேறொன்றும் அல்ல.

அவர்கள் எழுதுவதாவது: "பூகோளமயமாக்கம்" ஒரு பழைய சங்கதியின் ஒரு புதிய வகையறாவே தவிர வேறொன்றும் அல்ல. 1950பதுகளிலும் 1960பதுகளின் ஆரம்பத்திலும் தன்னியக்கம் என்ற பதம் இதே புனிதத்துடனும் உலகைக் குலுக்கும் பெறுபேறுகளுடனுமே முதலீடு செய்யப்பட்டது. தாராண்மை புத்திஜீவிகள் கைத்தொழில் தொழிலாளர் வர்க்கம் பெருமளவுக்கு இயந்திர மனிதனாலும் மற்றும் இயந்திரங்களாலும் பதிலீடு செய்யப்படும் என முன் அனுமானித்தார்கள். தொழிற்சங்கங்கள் காலவதியாகிப் போகின்றது அல்லது காலவதியற்றுப் போகும் என்பதே இதன் முடிவு." (Workers Vanguard, Jan 24, '97).

இலட்சோப இலட்சம் தொழிலாளர்களின் தலைவிதியையிட்டு மத்தியதர வர்க்க தீவிரவாதிகளின் அலட்சியத்தின் ஒரு தெளிவான போக்கினைக் காண்பது கஷ்டமானது. கடந்த இரண்டு தசாப்தங்களாக நூற்றுக்கணக்கான மில்லியன் தொழிலாளர்களின்( நீல, வெண்நிற காலர் சீருடைத் தொழிலாளர்கள் ஒரே விதத்தில்) வாழ்க்கைகள், உற்பத்தியிலும் தொடர்புச் சாதன முறைகளிலும் கணனிமயத்தினதும் தன்னியக்கமயமாக்கத்தினதும் அறிமுகத்தினால் தொழில்கள் பரந்த அளவில் அழிக்கப்பட்டன.

இளம் அரைத்திறமை கொண்ட தொழிலாளர்களும் திறமையற்ற தொழிலாளர்களும் இன்று கண்ணியமான சம்பளம் கொண்ட பதவியை மோட்டார், சுரங்கம் இன்னும் பல கைத்தொழில்களில் அவர்களது தந்தையர்களும் முதாதையர்களும் பெறுவதற்கு இருந்த வாய்ப்பைவிடக் குறைந்த வாய்ப்புக்களையே கொண்டுள்ளனர். இதற்குப் பெருமளவுக்குக் காரணம் இயந்திர மனிதர்களதும் இன்னும் பல தன்னியக்க தொழில்நுட்பங்களின் அறிமுகமுமேயாகும்.

ஸ்பார்ட்டசிஸ்டுகள் தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களுடன் ஒத்துப்போகின்ற எந்த ஒரு தோற்றப்பாட்டையும் எதிர்கொள்ள இலாயக்கற்றவையாக உள்ள தொழிற்சங்கங்களிலான நப்பாசைகளை வளர்க்கும் பொருட்டு அவர்கள் பூகோளமயமாக்கத்தை தள்ளுபடி செய்துவிடுவது போல் தன்னியக்க முறையையும் நிராகரித்துவிடுகின்றார்கள்.

### பொருளாதார தேசியவாதமும் அமெரிக்க சோவினிசமும்

ஸ்பார்ட்டசிஸ்டுகளின் கருத்தின்படி "முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் சம்பளங்கள் இரண்டு காரணங்களின் காரணமாக மூன்றாம் உலக நாடுகளின் மட்டத்துக்கு தள்ளப்பட்டுவிடாது: ஒன்று அரசியல், மற்றையது பொருளாதாரம்."(Workers Vanguard, Feb 7, '97)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு ஏகாதிபத்திய வல்லரசுகள் இராணுவ வல்லமை ஆபத்துக்கு உள்ளாகும் அளவுக்கு மூலதனப் பெயர்ச்சி இடம்பெற அனுமதிக்க மாட்டா. ஒரு கட்டத்தில் அவர்கள் மூலதனத்தின் நகர்வின் மீது வரிகளையும் மற்றும் கட்டுப்பாடுகளையும் விதிப்பர் என்ற அரசியல் காரணத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

"அடுத்துவரும் சில ஆண்டுகளில் அமெரிக்கா, ஜேர்மனி, ஜப்பான் தமது சொந்த முதலாளி வர்க்கப் பகுதிகளின் உடனடி நலன்கள், விருப்பங்கள் மீது உயர்ந்த மட்டத்திலான வர்த்தகக் காப்பீடுகளையும் வெளிநாட்டு செலாவணி கொடுக்கல் வாங்கல் கட்டுப்பாடுகளையும் மூலதனத்தின் உள்வாரி, வெளிவாரி பாய்ச்சல்கள் மீது கண்டிப்பான வரையறைகளையும் திணிக்கும்."(Workers Vanguard, Feb 7, '97)

நாம் ஒரு கணத்துக்கு ஸ்பார்ட்டசிஸ்டு களின் ஊகங்களை அவற்றின் வெளிப் பெறுமானத்தின்படி அணுகுவோம்: முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் சம்பள மட்டத்தில் ஒரு இறுதி தரை இருப்பதாக அவர்கள் வாதிக்கிறார்கள். ஏனெனில் ஒரு குறிக்கப்பட்ட ஒரு கட்டத்தில் ஏகாதிபத்தியச் சக்திகள் உலகம் பூராவும் மூலதனத்தின் நகர்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை எடுக்கத் தள்ளப்படுவர். அதைத் தொடர்ந்து தொழிற்சங்கங்கள் தேசிய முதலாளி வர்க்கத்தின் மேல் நெருக்குவாரம் கொணரவும்( ) "தொழிலாளர் நலன்களை முதலாளித்துவத்தினுள் காக்கும்" வரையறுக்கப்பட்ட பணியை முன்னெடுக்கவும் முடியும். திரும்பவும் அனைவரும் சமூகப் புரட்சியை தவிர்த்துக் கொள்ளவதே நல்லதும் அவசியமானதும் என்பதற்கு ஆதரவாக நின்று கொண்டுள்ளார்கள்.

இப்போது நாம் யதார்த்தத்திற்கு திரும்பி ஸ்பார்ட்டசிஸ்டுகளின் நடவடிக்கைகளின் விளைவுகள் மெய் ஊதியத்தைக் காப்பதற்கு எந்தளவுக்கு உதவுகின்றது என்பதைப் பார்ப்போம். உலகப் பொருளாதாரம் அந்தளவுக்கு இணைக்கப்பட்டு உள்ளதால் சுங்க வரிகளும் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் உலக வர்த்தகத்தை மட்டும் சீர்குலைப்பதுடன் 1930பதுகளின் பேரழிவுமிக்க விளைவுகளை மீளக் கொணர்வதுடன் மட்டும் நின்றுவிடாது. அவை கூடவே பெரும் கூட்டுத்தாபனங்களின் உற்பத்திப் போக்குகளைத் தடம்புரளச் செய்யும். அவை தேசிய அடிப்படையான பக்டரிகளை இயங்கச் செய்ய முடியாது போகும். ஆனால் ஒரு உலகளாவிய ரீதியில் உற்பத்தியின் வேறுபட்ட பகுதிகளை இணையச் செய்யும். மூலதனத்தின் பாய்ச்சல் மீதான கட்டுப்பாடுகளுடன் கூடிய விதத்தில் அத்தகைய சுங்க வரிகளை அறிமுகம் செய்வதானது தள்ளாடச் செய்யும் அளவுக்கு ஒரு நிதி, கைத்தொழில் வீழ்ச்சியைக் கொணரும்.

இது ஒரு ஊகத்துக்குரிய விடயம் அல்ல. இதனது சுருக்கமான வருணனைகள் ஏற்கனவே தெளிவான முறையில் அம்பலமாகியுள்ளது. உதாரணமாக 1995ல் அமெரிக்காவுக்கும் யப்பானுக்கும் இடையேயான வர்த்தகப் போரில் கிளின்டன் நிர்வாகம் கார் இறக்குமதி மீது சுங்க வரிக் கட்டுப்பாடுகளை விதிக்கப்போவதாக மிரட்டிய போது யப்பானிய அதிகாரிகள் அத்தகைய ஒரு நடவடிக்கை அமெரிக்க பங்குக் கடன் பத்திரங்களின் நிதிப் பாய்ச்சல்களை வாபஸ்பெற்றுக் கொள்ளத் தூண்டும் என மிரட்டியதைத் தொடர்ந்து போர் நிறுத்தம் செய்யப்பட்டது.

ஸ்பார்ட்டசிஸ்டுகளின் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் ஒரு நிதி வீழ்ச்சியைக் கொணர்வதோடு மட்டுமன்றி ஒவ்வொரு ஏகாதிபத்தியச் சக்தியும் போட்டி ஏகாதிபத்திய சக்தியின் இழப்பின் மூலம் தனது அந்தஸ்தை விஸ்தரித்துக் கொள்ள முயல்வதால் ஏகாதிபத்தியச் சக்திகள் இடையேயான ஒரு புதிய யுத்தத்திற்கான நிலைமைகளையும் சிருஷ்டிக்கும்.

வேறு வார்த்தைகளில் சொன்னால் ஸ்பார்ட்டசிஸ்டுகள் வலியுறுத்திக் கொண்டுள்ள இதே அரசியல் நடவடிக்கைகளானது முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் சார்பு ரீதியில் உயர்ந்த சம்பள மட்டத்தைப் பேணுவதை ஊர்ஜிதம் செய்வதோடு அது சட்டவடிவம் பெறின் ஈவிரக்கமற்ற முறையில் மற்றொரு யுத்தத்துக்கு இட்டுச் செல்லும். உலக முதலாளித்துவ பொருளாதாரத்தின் ஒரு வீழ்ச்சியையும் கொணரும்.

ஸ்பார்ட்டசிஸ்டுகளின் வாதம் முதல் கண்ணோட்டத்தில் ஒரு வகையான முழைக் கோறாகத் தோன்றினும் அவை ஒரு சமூக அளவையியலையும் விதிமுறையையும் அம்பலமாக்குகின்றன. இந்த நூற்றாண்டின் முதல் பகுதியில் லெனினும் ஏனைய மார்க்சிஸ்டுகளும் விளக்கியது போல் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில். ஒரு வசதி வாய்ப்புக்கள் கொண்ட தொழிலாளர் பிரபுக்களதும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களதும் ஸ்தாபிதத்தினது சட அடிப்படையாக காலனித்துவ நாடுகளில் இருந்தும் பின்தங்கிய முதலாளித்துவ நாடுகளில் இருந்தும் ஏகாதிபத்தியச் சக்திகளால் கறந்து கொள்ளப்பட்ட உயர்ந்த இலாபம் விளங்கியது. இந்தச் சமூகத் தட்டினருக்காகவே ஸ்பார்ட்டசிஸ்டுகள் பேசுகின்றனர். இந்தத் தட்டினர் தேசிய அரசின் மூலம் சுங்கவரிக் காப்பீடுகளையும் நிதி விதிகளையும் கோரி நிற்கின்றனர். இறுதியில் இவர்கள் கூலிகளையும் வாழ்க்கைத் தரங்களையும் "எமது வாழ்க்கை முறையையும்" காக்க இராணுவ நடவடிக்கை அவசியம் எனக் கோருகின்றார்கள்.

அவர்களின் கூலிதரை கோட்பாட்டுக்கு ஆதரவாக ஸ்பார்ட்டசிஸ்டுகள் முன்வைத்த பொருளாதாரவாதங்களில் இதே சமூகப் பார்வை வெளிப்பாடாகியுள்ளது. பெரும் நிறுவனங்கள் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் பெரிதும் செலவுமிக்க உழைப்பைத் தொடர்ந்து பாவிப்பர் என அவர்கள் வலியுறுத்துகின்றனர். ஏனெனில் இந்தோனேஷியாவில் 15 திறமையற்ற தொழிலாளர்கள்(மணித்தியாலத்திற்கு 1 டாலருக்கும் குறைவாக உழைப்பவர்கள்) இந்தக் கைத்தொழில் போக்கில் அமெரிக்காவில் (மணித்தியாலத்துக்கு 15 டாலர் உழைக்கும்) ஒரு திறமையான இயந்திர நிபுணரையோ அல்லது (மணித்தியாலத்துக்கு 25 டாலர்கள் உழைக்கும்) ஜேர்மனியரையோ பதிலீடு செய்துவிட முடியாது." என்கின்றனர். (Workers Vanguard, Feb 7, '97)

ஸ்பார்ட்டசிஸ்டுகள் பிரதிநிதித்துவம் செய்யும் அதிகாரத்துவத் தட்டினருக்கு அந்தளவுக்கு தடையற்ற சோவினிசமும் இங்கு மீண்டும் வெடித்துக் கிளம்புகின்றது. இந்தோனேஷியா, இந்தியா, சீனாவிலும் மற்றும் நாடுகளிலும் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் உள்ளார்கள் என அவர்கள் ஒரு போதும் நினைப்பதில்லை. திறமையான தொழிலாளர்கள் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் மட்டுமே வசிக்கின்றார்கள்.

பிரச்சினை அமெரிக்காவில் ஒரு மணித்தியாலத்துக்கு 15டாலர்கள் சம்பளம் பெறும் இயந்திரத் தொழிலாளியை ஒரு மணித்தியாலத்துக்கு ஒரு டாலரை விட மிகக் குறைவான சம்பளம் பெறும் 15 தொழிலாளர்களால் பதிலீடு செய்வது அல்ல. அமெரிக்காவின் ஒரு இயந்திரத் தொழிலாளியை சீனாவில் அல்லது இந்தோனேஷியாவில் அல்லது மிகவும் சம்பளம் குறைந்த இயந்திரத் தொழிலாளியினால் அல்லது ஜேர்மனி தொழிலாளியை மிகவும் குறைந்த அளவு சம்பளம் பெறும் செக்கோசலவாக்கியா அல்லது போலந்து, ஸ்பெயின் அல்லது ரூஷ்ய இயந்திரத் தொழிலாளியினால் பதிலீடு செய்வதாகும்.

கடந்த காலத்தில் தொழில்நுட்பக் காரணங்கள் காரணமாக முழு உற்பத்திப் போக்கும் ஒரே இடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலைமையினுள் இந்தக் கைத்தொழில்களின் அமைவு, திறமைவாய்ந்த தொழிலாளர்களதும் மூலதன சாதனங்களுக்கான முன்னேற்றமான ஆதரவான வசதிகளினால் நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தது. ஆனால் திறமையான உழைப்பு பூகோளத்தின் எந்த ஒரு பகுதியிலும் அபிவிருத்தி செய்யப்பட முடியும். இன்று உலகில் திறமையற்ற தொழிலாளர்களுக்கு மட்டுமன்றி திறமைவாய்ந்த தொழிலாளர்களுக்கும் கூட ஒரு அனைத்துலகச் சந்தை இருந்து கொண்டுள்ளது. அமெரிக்காவின் ஒரு கணனி நிகழ்ச்சித்திட்டமிடலாளர் பெங்களூரின் நிகழ்ச்சித் திட்டமிடலாளருடன் போட்டியிட்டுக் கொண்டுள்ளார். அமெரிக்க இயந்திரவியலாளர் சீனாவில் அல்லது இந்தியாவில் உள்ளவருடன் போட்டியிடுகின்றார்.

தமது படுபிற்போக்கு சோவினிச பார்வைக்கு மேலதிகமாக ஸ்பார்ட்டசிஸ்டுகளின் பொருளாதாரவாதம் மணித்தியாலத்துக்கு 15 டாலர் அல்லது 25 டாலரைத் தன்னும் எட்டாத முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளர்களின் பெருந்தொகையானவர் களையிட்டு எந்தவிதமான அக்கறையும் கிடையாது என்பதைத் தெளிவுபடுத்து கின்றது. உண்மையில் சம்பளம் எந்தளவுக்கு வீழ்ச்சி கண்டுள்ளது எனக் கூறின் "மூன்றாவது உலக நாடுகள்" இலாப உழைப்பைத் தேடி வெளிநாடுகளுக்குச் செல்வதைக் காட்டிலும் தமது நாடுகளில் தற்போது இருந்து கொண்டுள்ள இலாப உழைப்பு சுரண்டல் பயனுள்ளது என முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் முதலாளிகள் கண்டு கொண்டுள்ளனர்.

தொடரும்

## நியூசிலாந்து கூட்டரசாங்கம்

# ஈடாட்டம் கண்டுள்ளது

நியூசிலாந்தின் தேசிய கட்சி சிறுபான்மை அரசாங்கம்' மாஜி.இளைஞர் விவகார அமைச்சர் டிபோரா மொறிஸ் பாராளுமன்றத்தில் இருந்து இராஜினாமாச் செய்ததோடு மேலும் வீழ்ச்சி கண்டுள்ளது. இப்போது இந்த அரசாங்கத்தின் பெரும்பான்மை 61 59 நிலையில் இருந்து கொண்டுள்ளது.

நியூசிலாந்து அரசாங்கம் அமெரிக்க விமானப் படையிடம் இருந்து பழைய எப்.16 வகையறாவைச் சேர்ந்த ஜெட் யுத்த விமானங்களைக் கொள்வனவு செய்ய எடுத்த முடிவைத் தொடர்ந்து மொறிஸ் இராஜினாமாச் செய்துள்ளார். சமூக சேவைத் திட்டங்களின் மீதான அரசாங்க செலவினங்களைப் பெருமளவுக்கு வெட்டிப் பாதுகாப்புச் செலவினங்களை அதிகரித்துக் கொண்டுள்ளமை கணிசமான எதிர்ப்பைத் தூண்டிவிட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சர் மக்ஸ் பிரட்போட் அவுஸ்திரேலியாவிடம் இருந்து ஒரு கடுகதி போர்க் கப்பலைக் கொள்வனவு செய்யுமாறு செய்த சிபார்சு தோற்கடிக்கப்பட்டுள்ளது.

மொறிஸ் முன்னர் வலதுசாரி நியூசிலாந்து முதலாவது கட்சியில் இருந்தவர். இந்த விடயத்தின் பேரில் தாமும் ஏனையோரும் பிரதமர் ஜென்னி சிப்லியினால் "கொடுமையாக" நடாத்தப்பட்டதாகக் கூறிக்கொள்கின்றார். தேசியக் கட்சி நிலைப்பாட்டுக்கு ஆதரவு அளிக்காது போனால் ஆளும் கட்சிக்கு வெளியில் இருந்து அரசாங்கத்துக்கு ஆதரவு தந்து வந்த எம்.பீ.க்களை சிப்லி மிரட்டி வந்தார். உரிய காலத்துக்கு முன்னரே பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல் நடாத்தப் போவதாகக் கூறி வந்தார்.

கடந்த ஆகஸ்டில் நியூசிலாந்து முதலாவது கட்சியுடனான கூட்டரசாங்கம் உடைந்து போனதில் இருந்து சிப்லி அரசாங்கம் ஒரு சங்கடமான நிலைக்குள் தள்ளப்பட்டது. நியூசிலாந்து முதலாவது கட்சியில் இருந்து வெளியேறித் தொடர்ந்தும் அரசாங்கத்தை ஆதரிக்கும் எம்.பீ.க்களில் மொறிசும் ஒருவராக இருந்து வந்தார்.

பெரும் வர்த்தக நிலையங்கள் சார்பான ஏ.சீ.டி.கட்சி, மாஜி.நியூசிலாந்து முதலாவது கட்சி அங்கத்தவர்கள், பல "சுயேட்சைகள்" யூனைட்டட் கோல் எம்.பி.பீட்டர் டன் போன்ற ஒரு தொகை ஆட்டங் கண்ட அரசியல்வாதிகளைச் சேர்த்து, அமைச்சர் டா ஹெனரே தலைமையில் மொறி பசிபிக் என்ற புதிய இனக்குழு அடிப்படையிலான ஒரு கட்சியை அமைத்துள்ளது.

மொறிசின் இராஜினாமா ஒரு கேலிக்கூத்தாக இருந்து கொண்டுள்ளது: அதிகாரபூர்வமான அரசியலின் பெரிதும் ஆவியாகிவிடும் தன்மையைக் காட்டிக்கொண்டுள்ளது. நாட்டின் புதிய விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறைகளின் [illegible] அங்கத்தவர்கள் இராஜினாமாச் செய்யும் அல்லது ஓய்வு பெறும் போதும் அக்கட்சியின் பட்டியலில் அடுத்த நிலையில் உள்ளவர் எம்.பி.யாக நியமனம் செய்யப்படுவார். மொறிஸ் இராஜினாமாச் செய்யும்போது அவர் பேரளவில் ஒரு சுயேட்சையாக இருந்த போதிலும் நியூசிலாந்து முதலாவது கட்சியின் மூலம் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டதால் நியூசிலாந்து முதலாவது கட்சி அரசியல்வாதி கில்பேட் மைல்சினாலேயே பதிலீடு செய்யப்படுவார்.

மொறிஸ் தமது இராஜினாவைச் சந்தித்த பின்னர் மைல்சுடனான தொலைபேசிப் பேச்சுவார்த்தைகளைக் கொண்ட நாடாக்களை வெளியிட்டார். அதில் அவர் நியூசிலாந்து முதலாவது கட்சி அங்கத்தவராகப் பாராளுமன்றத்தினுள் நுழைந்ததுதான் தாமதம் கட்சி மாறுவதாகவும் ஒரு தேசியக் கட்சி அரசாங்க ஆதரவாளராக மாறப்போவதாகவும் தெரிவித்துள்ளார். 1991 94 காலப்பகுதியில் மைல்ஸ் தேசியக் கட்சியின் ஒரு அங்கத்தவராக விளங்கியவர். இப்போது அவர் நான்காவது அரசியல் கட்சியில் இருந்து கொண்டுள்ளார்.

### கட்சி மாற்றம்

நியூசிலாந்து முதலாவது கட்சி அதிகாரிகள் நடாத்திய ஆய்வுகளின்படி கட்சித் தலைவர் வென்ஸ்டன் பீட்டர்சின்படி மைல்ஸ் கட்சிக்கு விசுவாசமாக இருக்க வாக்குறுதி அளித்துள்ளதாகத் தெரிவித்தார். மைல்ஸ் அப்படிச் செய்யாது போனால் எனது நியூசிலாந்து முதலாவது கட்சி சகாக்கள் அவரின் கழுத்தை உடைப்பர் என எச்சரிக்கை செய்துள்ளார். கடந்த ஆறு மாதங்களுள் ஒன்பது நியூசிலாந்து முதலாவது கட்சி பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஏற்கனவே கட்சி மாறியுள்ளனர்.

சிப்லி அரசாங்கம் ஆட்டம் கண்டுள்ளதன் பின்னணியில் வேலையின்மை அதிகரிப்பு, வாழ்க்கைத் தரத்தின் வீழ்ச்சி, சமூக சேவைச் செலவினங்கள் மீதான கடும் வெட்டும் தொழிலாளர் வர்க்கத்தினதும் மத்தியதர வர்க்கப் பகுதிகளதும் எதிர்ப்பு வளர்ச்சி கண்டுள்ளமையும் இருந்து கொண்டுள்ளன.

கடந்த மே மாத 5 பில்லியன் டாலர் வரவு செலவுத் திட்டத்தில் இருந்து 750 மில்லியன் செலவினங்களை அரசாங்கம் வெட்டிச் சரித்துள்ளது. முதியவர்களுக்கான ஓய்வூதியத்தை இது சராசரி சம்பளத்தின் 65 வீதத்தில் இருந்து 60வீதமாகக் குறைக்க முடிவு செய்துள்ளது. இது அடுத்த 10 ஆண்டுகளுக்கு 2.6பில்லியன்களைச் சேமிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பெரும் வர்த்தக ஏகபோகங்கள் தமது நிகழ்ச்சி நிரலை அமுல் செய்வதற்கு ஈடாட்டம் கண்ட இன்றைய சிப்லி அரசாங்கத்துக்குப் பதிலாக எதிர்க்கட்சியான தொழிற் கட்சியை ஆட்சிக்குக் கொணர முயற்சிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாத யுத்தத்தில் சிக்கித் தவிக்

( யாழ்ப்பாணக் குடாநாட்டினை பொதுஜன முன்னணி அரசாங்கப் படைகள் கைப்பற்றியதன் பின்பு "சிவில் நிர்வாகத்தை" மீள ஸ்தாபிதம் செய்வது என்ற பெயரில் நடக்கும் இராணுவ ஆட்சியின் ஒடுக்குமுறையின் கீழ் மீளக்குடியேறச் சென்ற தமிழ் மக்களின் கொடுக்கும் வாழ்க்கை, சமூக நிலைமைகளை இக்கட்டுரை காட்டுகின்றது. )

எஸ் அகிலன்

யாழ்ப்பாண மக்கள் சுயவிருப்புடன் மீண்டும் யாழ்பாணத்தில் குடியேறிய நிலைமை இங்கில்லை. தமது பழைய இருப்பிடங்களிலேயே தொடர்ந்து வாழும் வாய்ப்பு, அனேக மக்களுக்குக் கிட்டவில்லை. விடுதலைப் புலிகளால் விரட்டப்பட்டு மீண்டும் பழைய வதிவிடங்களுக்கு திரும்ப முடியாத மக்களும் உள்ளனர். இப்பிராந்தியத்தில் உள்ள தென்னந்தோட்டங்கள், பாடசாலைகள், காணி கட்டிடங்கள், தோட்டங்கள், வயல்வெளிகள் எல்லாம் அரசாங்கப் படைகளினால் சுவீகரிக்கப்பட்டுள்ளது. ஐ.நா.வின் மனித உரிமைகள் குழு, போரூட் என்ற நோர்வே அமைப்பு, ஜேர்மனிய தொழில் நுட்ப ஆதரவு கிட்டும் அமைப்பு ஜி .டி .செட் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள், மீளக்குடியேற்றப்பட்ட மக்கள் வீடுகட்டவும் திருத்தவும், மலசல கூடங்கள் அமைக்கவும் தேவையான கட்டிடப் பொருட்களை வழங்க முன்வந்துள்ளன.

வருடக் கணக்காக இடைக்கிடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகளைப் பார்த்த வண்ணமும், காலத்துக்கு காலம் பல்வேறு பெயர்களில் இடம்பெறும் இராணுவ முற்றுகைகள், அவற்றின் தாக்கங்களின் படுகொடுமையான அனுபவங்களையும் கொண்ட யாழ்ப்பாண மக்களுக்கு, இந்த இனவாத யுத்தம் ஒரு முடிவுக்கு வரும் என்ற நம்பிக்கை ஒரு கிஞ்சித்தும் கிடையாது. இதற்குக் காரணம் என்ன? என்ற கேள்வி யாழ்ப்பாண பொதுமக்களிடம் நிலவுகின்றது. பேச்சுவார்த்தையை தொடங்குவது யார்? தயாரிப்பது யார்? இப்பேச்சுவார்த்தை எது சம்பந்தமாக இடம்பெறும்? தமிழ்மக்களின் தேவைகள் குறித்தா? தற்போதுள்ள அரசியல் பொருளாதார அமைப்புகள், வடக்குக் கிழக்குப் பகுதிகள் யாரால் நிர்வகிக்கப்பட வேண்டியது அவசியம்? யார் கைக்கு அதிகாரம் செல்ல வேண்டும் ?ஆகிய கேள்விகள் யாழ் மக்களிட முள்ளன.

இவ்வாண்டு தேர்தல் நிகழும் ஆண்டாகையால், அரசியல் கூட்டங்களில் பொய்த் தேர்தல் வாக்குறுதிகள், யுத்த நிறுத்தம் யுத்தத்திற்கு முடிவு கட்டல் பற்றிய பொய் வாக்குறுதிகள் காதில் விழுகின்றன. யுத்தம் நிகழும் போதும், இராணுவம் அகற்றப்பட்டுள்ள நிலைமைகளின் கீழும், இப்பகுதிகளின் தொழிலாளர் ,விவசாயி மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் ஈடுபடுவதாகக் காட்ட, யூ. என் .எப் .பி .ஆர், கெயர், போரூட், தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகம், மனித அபிவிருத்தி அமைப்பு,யூனிசெப், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சிக்கின்றன. அரசாங்கப் படைகள் சோதனைச் சாவடி, இராணுவ முகாம், பாடசாலை,வீடு வளவுகளில் தங்கிக் கொண்டு மிதி வெடிகளை சுற்றிவர வைத்து பாதுகாப்பாக இருக்கின்றன. விடுதலைப் புலிகள் அமைப்பும் யாழ்பாணத்தை கைவிட்டுச் செல்கையில், மனித அழிவுக்கான மிதி வெடிகளைப் புதைத்துச் சென்றது. இந்த மிதி வெடிகள் யாவும் அகற்றப்பாடாது தொடர்ந்தும் இருந்து வரும் ஒரு நிலைமையில், யாழ் மக்கள் அங்கு சென்று குடியேறி வாழத் தள்ளப்பட்டனர். இவற்றால் யாழ்பாணத்திலுள்ள மக்களில் பெரும் பகுதியினர், உடல் உறுப்புக்களை இழந்த நடைப்பிணங்களாகவும் அங்கவீனர்களாகவும் உள்ளனர்.

இத்தகைய மிதிவெடியினால் கால்களை இழந்த கோபால் என்ற சங்கானை வாசி பின்வருமாறு தெரிவித்தார்: "இராணுவம் மீண்டும் எங்களை யாழப்பாணத்திற்கு திரும்பும்படி கூறிய போது, நானும் எமது வீடுள்ள யாழ் ஸ்டேசன் முகாமுக்கு வந்தேன். சில தினங்களின் பின் இயற்கைக் கடன்கழிக்கும் முகமாக மலசல கூடப் பக்கம் செல்கையில், மிதி வெடியொன்றில் சிக்கி, இடது காலை இழந்தேன். பொய்க்கால் பொருத்தி நடமாடுகிறேன். சைக்கிள் ஓடி வர்த்தகம் செய்து வாழ்ந்த எனக்கு இப்படி வாழவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

வசதிவாய்ப்புள்ள செல்வந்தர்களும் மீண்டும் யாழப்பாணம் திரும்பி வந்து வாழ்கின்றனர். தமது பிள்ளைகளது கல்வி நடவடிக்கைகளுக்காகத் கிராமப்புறங்களில் உள்ளவர்களும் கூட, கஷ்டப்பட்டாவது யாழ் பாணத்தில் தங்கி வாழ நேர்ந்துள்ளது.

கிராமங்களில் வாழும் மக்களுக்கு தமது உணவுப் பொருட்களைக் கூட செய்கை பண்ண முடியாத நிலை எழுந்துள்ளது. மீளக்குடியேறாதவர்கள் உள்ள வீடுகளின் கதவு, யன்னல்கள் கூடக் கழற்றப்பட்டுள்ளன. ஹெலி குண்டு வீச்சுத் தாக்குதல்களினால் , அனேக வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. ஜனநாயகம் மீண்டுள்ளதாக கூறும் தமிழ் கட்சிகள், அழிந்த வீடுகளது பொருட்களை கழற்றி விற்பனை செய்கின்றன. வேலையற்றோர் சிலரும் இத்தகைய அழிந்த வீட்டுப் பொருட்களை திருடி , விற்றுச் சீவியம் நடத்துகின்றனர்.

பேக்கறித் தொழிலாளி ஒருவர் பின்வருமாறு கூறினார்:

□நாட் கூலியாக எனக்கு 175 ரூபா தருவார்கள். மாலை ஐந்து மணிக்கு வேலைக்கு வந்து, இரவு நித்திரை முளித்து வேலைசெய்து காலை பத்து மணிக்குத்தான் வீடு போவேன். இந்த வேலையையும் விட்டால் வேறு எங்குதான் வேலை தேடுவது?நாம் 17 மணித்தியாலம் வேலை செய்கிறோம். பாண் மா பதமாகும் வரை இரண்டு மணித்தியாலம் நித்திரை கொள்வோம். சம்பளத்தை கூட்டிக் கேட்டால் வீட்டுக்குப் போக வேண்டிவரும் என்பது எனக்குத் தெரியும். இத்தகைய யுத்த நிலைமையின் கீழ் வேலையில்லாமல் குடும்பத்தை கொண்டுநடத்த என்னால் முடியுமா? குடும்பத்துக்கு சாப்பாடு போடவேண்டுமேயென எண்ணி பெரும் கஷ்டத்தைச் சகித்துக் கொண்டு இங்கு வேலை செய்கிறேன்.

"மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயி ஒருவர் இப்படிச் சொல் கிறார்." மரக்கறி செய்வது மிகவும் கஷ்டமானது. வேலியடைக்காத தோட்டத்துள் கட்டாக்காலி மாடுகள் நுழைந்து பயிர்களை நாசம் செய்யும். காசு செலவழித்து மரக்கறி பயிர் செய்து விற்றுச்சீவியம் நடத்த முடியாது. இப்போது விற்க முடியாது. மரக்கறி மிஞ்சும். எமது உணவுத் தேவைக்கு போதுமானளவு மட்டும் செய்கை பண்ணுகிறேன் . மழை காலத்தில் மட்டும் புகையிலை வளர்த்து தரகுக் காரருக்குக் கொடுத்து பணம் பெகிறேன். "குடும்பத்துக்கும் கிராமவாசிகளுக்கும் உணவாகப் பயன்படக் கூடிய எள்ளு, உழுந்து, பயறு, கவ்பி போன்ற தானியங்களை பயிரிடாது சப்பித்துப்பும் புகையிலையை பயிரிடுவதேன்? எனக் கேட்கையில் அவர் "தொழிலாளர் பாதை" நிருபருக்கு இப்படிக் குறிப்பிட்டார்: அவைகளைப் பயிரிட்டால் காசு கிடைக்காது, ஆகவேதான் புகையிலை வளர்த்து சம்பாதிக்கிறேன் .நெற் செய்கை செய்தால் சாப்பிட மட்டுந்தான் முடியும். பணம் கிடைக்காது.

தேநீர் கடையின் ஊழியர்:

இரண்டு வருடங்களாக இங்கு வேலை பார்க்கிறேன் காலை ஆறு மணிக்கு கடைக்கு வந்து, இரவு ஏழரை மணிவரை வேலை செய்வேன். இரவு ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கும் வேளையில்தான் வீடு செல்வேன். 31 நாளும் வேலை . லீவு கேட் டால் வீட்டுக்குப் போக நேரிடும்.இந்த வேலையும் இல்லாவிட்டால் வேறு என்ன வேலையைத்தான் செய்ய முடியும். (வேறு ஒரு நாள் இவரை சந்திக்கச் செல்கையில் கடையில் வேலையில் இருக்கவில்லை. ) மீன்பிடித் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்.

□மீன் பிடித்துக்கொண்டு கரைக்கு வந்ததும் படையினர் தமக்குப் பிடித்தமான மீனை எனது பெட்டியிலிருந்து எடுத்துவிடுவார்கள். எமது மீனவர் சங்கத்துக்கும் மீன் பெட்டியை காட்ட வேண்டும். பிடித்த மீனில் பத்து வீதம் கோவிலுக்கு சீட்டு எழுதுவேன். விற்பனைக்கு இறங்கினால் மீன் தரகர் ஒரு கிலோவுக்கு அதிகமான மீனை ஐம்பது ரூபாவிற்கு எடுத்துவிடுவார். ஒரு நாள் இரண்டு கிலோ மீன் பிடித்த நான் அதனை யாழ்ப்பாணம் கொண்டு சென்று விற்க நினைத்து கரைக்கு வந்தேன். நேவிக்காரன் ஒரு மீனை எடுத்தான். மற்றவற்றை சங்கத்துக்குக் காட்டி விலையை நிர்ணயித்துக் கொண்டு, சைக்கிளில் மீனை கொண்டு செல்கையில், அராலிச் சந்தியில் ஆமிக்காரன் ஒரு மீனைப் பிடுங்கிவிட்டான். அல்லைப்பிட்டி பாதை பரிசோதனை தடை முகாமில் வைத்து இன்னுமொரு ஆமிக்காரன் மற்றொரு மீனையும் எடுத்தான். விற்பனைக்குப் போதுமானளவு மீனில்லை என நினைத்தபடி, பண்ணைப் பாலத்தில் ஏறும் போது அங்கிருந்த ஆமிக்காரன் இன்னுமொரு மீனை எடுத்தான்.

கால் கிலோமீனும் விற்பதற்கு மிஞ்சவில்லை என்று மீண்டும் வீடு திரும்பினேன். இந்தக் கொடுமையை யாருக்கு சொல்வது?

வங்கி ஊழியர்

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் வங்கி ஊழியர்.

"இங்கு சனிக்கிழமைகளிலும் வேலை. சனி . ஞாயிறு லீவு என்பது பெயரளவில் மட்டுமே. வங்கி ஊழியர் சங்கம் தனது அங்கத்தவர்களைப் பற்றி எந்த அக்கறையும் காட்டுவது கிடையாது அவர்களைப்பற்றி நினைத்துப் பார்ப்பதுமில்லை."

யாழ்ப்பாண மேயர் சிவபாலன் உட்பட ஊழியர் குழு, வேலை நேரத்தில் குண்டு வெடிப்புக்கு இலக்காகி இறந்தனர். வேலைத்தளத்தில் குண்டு வைத்து கொலை செய்தது தொடர்பாக வங்கி ஊழியர் சங்கம் எதிர்ப்பு எதுவும் தெரிவித்ததா? இத்தகைய கொலைகள் தொடர்பாக அவர்கள் கடைப்பிடிக்கும் மௌனப் போக்கு பற்றி தொழிலாளர் பாதை நிருபர் கேட்டபொழுது அவர் பின்வருமாறு கூறினார்: அது பற்றி சங்க கிளை கூடி எந்த முடிவும் எடுக்கவில்லை. அது குறித்து தாய்ச் சங்கமே நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிளை தெரிவித்தது.

யாழ்பாண வங்கி ஊழியர்கள் கொழும்பு தாய்ச் சங்கத்திற்கு ஒன்றுமே எழுதவில்லையா?

"நாம் யுத்த நிலைமைக்குள் வேலை பார்த்துக் கொண்டுள்ளோம். வேலைமுடிந்து, திரும்பி வீடு போய் சேர்வோமா என்ற ஐயத்துடனாகும்." வேலைத் தளங்களில் குண்டு வைத்து உடல் சிதறி பெட்டியில் அடைக்கும் நிலைமைக்குள் இப்படி சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? "கடந்த வங்கி ஊழியர் சங்க மாநாட்டில் நான் கலந்துகொண்ட போது, இந்த யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்பதற்கு சார்பாக பேசினேன். மற்றவர்களின் பேச்சுக்கு என் பேச்சு முற்றிலும் வேறுபட்டது□ எனத் தெரிவித்தார்.

சிதறிப் போன பாடசாலைக் கல்வி

யாழ்பாணத்தில் மீளக்குடியேற்றப்பட்டு, பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமானதன் பின், இரு ஆண்டுகள் கழிந்தும் கூட, இன்னமும் சீரான முறையில் கல்வி கற்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. யாழ்ப்பாண பாடசாலை அதிபர் ஒருவருடன் உரையாடிய வேளையில் அவர் பின்வருமாறு தெரிவித்தார்: "பாடசாலை கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான பொருட்கள் இன்னமும் போதிய அளவில் கிடைப்பதில்லை. பாடசாலைகளில் முகாமிட்டுக் கொண்டிருந்த பொலிஸார் இன்னமும் முற்றாக அகற்றப்படவில்லை. கட்டிடங்கள் அமைக்கப்படவில்லை, தண்ணீர் வசதியில்லை, இருந்து படிக்க மேசை, கதிரை கிடையாது, கரும்பலகையில்லை. "நிலைமை இவ்வாறாயின் இவ்வாண்டு கல்விப் பொதுத் தராதர (சா) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் நிலை என்ன? எனக் கேட்கையில், "எதிர்வரும் ஆண்டில்தான் கல்வி பற்றி பூரண அக்கறை எடுக்க முடியும். இவ்வாணடு சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் பற்றி ஒன்றும் கூறமுடியாது. அவர்களது சுயமுயற்சியினால் வீட்டில் படித்துக் கொள்ள வேண்டும்.உங்களது பிள்ளைகளுக்கு நீங்கள் பாடம் சொல்லிக் கொடுப்பதில்லையா? என அவர் என்னிடம் திருப்பிக் கேட்டார். கல்வியறிவுடைய பெற்றோர்களுக்கு இது முடியுமானாலும், கல்வி அறிவற்ற பெற்றோரின் நிலை என்ன? எனக் கேட்டபோது, இந்த இடர்ப்பாடான நிலைமையில் எம்மால் இவ்வளவுதான் செய்ய முடியும் என அவர் பதிலளித்தார்.எதிர் காலக் கல்வி நிலைமை பற்றி இப்போது ஒன்றும் கூறமுடியாது. பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி பற்றி அக்கறை எடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

யாழ் பாடசாலைகளில் மாணவர்களின் ஆங்கில அறிவு மிகவும் மோசமான நிலையில் உள்ளமை பற்றி ஆசிரியர் ஒருவர் குறிப்பிடுகையில், "ஆங்கில அறிவு வீழ்ச்சிகண்டுள்ள பிரச்சனை இலங்கை பூராவும் உள்ள பிரச்சினையாகும் எமது பாடசாலையில் ஆங்கில அறிவு குறைந்துள்ளமைக்கு ஒன்றும் கூறமுடியாது. தற்போது எமது ஆங்கில ஆசிரியர் வெளிநாடு சென்றுள்ளார். அவர் ஆகஸ்டில் மீண்டும் வந்தவுடன் நிலைமை திருந்தும் எனத் தெரிவித்தார்.

இன்றுள்ள நிலைமைக்குள் யாழ்ப்பாண ஆசிரியர்கள் எதிர் கொண்டுள்ள இ[illegible]கள் மாணவரது கல்விப் பாதிக்கப்படுவதோடு தொடர்புடையது. ஆசிரியருக்கு தமது குடும்பத்தின் சொந்தக் குறைநிறை பிரச்சினை உண்டு. பாடசாலைக்குச் செல்லும் தமது பிள்ளைகள் குடும்பத்தார் நலன் பற்றிய அக்கறையுண்டு, பாதுகாப்புப் பிரச்சினை உண்டு. பாடசாலை சென்றுவர பஸ் வசதியில்லை, நேரகாலத்துடன் ஆசிரியர் பாடசாலை சென்று கல்வி கற்பிப்பார் என்ற நம்பிக்கை, எதிர்பார்ப்பு பெற்றோருக்குக் கிடையாது. ஆசிரியர்களுக்குக் கற்பித்தல் தொழிலை சுதந்திரமாக நடத்தும் நிலைமை யாழ்பாணத்தில் கிடையாது எனக் கூறுவதே பொருந்தும்.

யாழ்.கல்வி அதிகாரி

யாழ்ப்பாணப் பகுதி கல்வியதிகாரியை சந்தித்தபோது."பாடசாலைகள் மீண்டும் ஆரம்பித்து இரண்டு வருடமாகியும் கூட கல்வி நடவடிக்கைகளை சுமுகமாக [illegible]த்த முடியாதுள்ளது.பஸ் போக்குவ[illegible]த்து ஸ்தம்பிதமடைந்துள்ளது. கஷ்டப் பிரதேசங்கள் இப்பாடசாலைகளில் கடமையாற்ற ஆசிரியர்கள் விரும்புவதில்லை. எதிர் காலத்தில் இக்குறைபாடுகளைப் போக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம். முயற்சிப்போம் என்பதைத் தவிர எம்மால் ஒன்றும் சொல்ல முடியாது." என்றார்.

ஆங்கில அறிவுத்தரம் பற்றி ஒரு திணைக்கள அதிகாரி இப்படிக் கூறினார்.உங்கள் பகுதி பாடசாலைகளில் "மேலதிக" ஆங்கில ஆசிரியர்களுக்கு இவ்வளவு சம்பளம் என வாக்குறுதியளித்து நியமிக்கப்பட்டுள்ளனர். இதைத்தவிர நாம் எங்கு போய் ஆங்கில ஆசிரியர்களைத் தேடுவது? உங்களால் முடிந்தால் யாரையாவது தாருங்கள் நாம் அவருக்கு நியமனக் கடிதம் தருகின்றோம்."என்றார்.

ஆங்கில அறிவுடையவர்கள் கடந்த காலங்களில் யுத்தத்தில் இருந்து தப்ப கொழும்புக்குப் போய், வெளிநாட்டுக்கு போய்விட்டார்கள்.நாம் எப்படி யாழ்பாணத்தில் இருப்பது என அவர்கள் கேட்கின்றனர். தற்சமயம் எம்மைப்போல ஆங்கல அறிவுடையவர்கள் சிலரே இங்குள்ளனர். நாமும் போனால் ஆங்கிலக் கல்விக்கு என்ன நடக்குமோ ? இத்தகைய யுத்தத்தின் கீழ் வாழ வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது."

வர்த்தகம்

யாழ் வர்த்தகர்கள் கொழும்பிலிருந்து கொண்டு செல்லும் பொருட்களை பதுக்கி வைத்து, பொருட் பற்றாகுறையை ஏற்படுத்தி கூடிய விலைக்கு பொருட்களை விற்கிறார்கள். உணவுச் சாமான் கப்பல் வந்ததும் பொருட்கள் விலை ஓரளவு குறையும் என்றாலும், அடுத்த கப்பல் வரும்வரை விலையை நிர்ணயம் செய்வதை யாழ் வர்த்தகர்கள் தமது ஏகபோக உரிமையாக்கிக் கொண்டுள்ளனர்.

அரசாங்க ஊழியர், வறிய மக்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும் வடக்கு மக்கள் வாழ்வு



இரணை இலுப்பைக்குளம் பகுதியில் பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆரம்பித்த புதிய "ரணகோஷா" இனவாத யுத்த நடவடிக்கைகளுக்குப் பலியாகியுள்ள இளம் தமிழ் சிறார்கள்

பொருட்களை வாங்க வருமானம் போதாது . தெற்கிலிருந்து தேங்காய் கொண்டு ணடு செல்லாமையாலும் தென்மராட்சி பகுதியில் தென்னை மரங்கள் அழிக்கப்பட்டமையாலும், தீவுப்பகுதியிலிருந்து கொண்டு வரும் தேங்காய்களை கடற்படையினர் தட்டிக் கொள்வதாலும், தேங்காய் ஒன்றின் விலை 45 50 ரூபாய் வரை விற்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் ஒரு கிலோ சீனியின் சாதாரண விலை ரூபா.45 55 ரூபாய்.(ஒரு மாதத்தில் நான்கு கிலோ சீனி மட்டும் 30 ரூபாய்கு பங்கீட்டு முறையில் கிடைக்கும்) கத்தரிக்காய் ஒரு கிலோ 120 ரூபாய், கரட் 80ரூபா, தக்காளி 86ரூபா, பூசனி 20ரூபா, மரவள்ளி ரூபா5 10 , வெண்காயம் ரூபா 15 30 க்குமிடையே, உருளைக்கிழங்கு 150 ரூபாவுக்கு மேல். செத்தல் மிளகாய் ஒரு கிலோ 240 ரூபா, உள்ளி கிலோ ரூபா 60 90 க்குமிடையில் விற்பனையாகின்றது. ஈ பி டி பி . கையாட்களுக்கு அரசாங்கம் மூலம் கிடைக்கும் உணவுப் பண்டங்கள், கள்ளச்சந்தை முதலாளிகளுக்கு விற்கப்படும். பண்ட விலை உயர்வுக்கு அவர்களின் ஆதரவும் உண்டு.

டின்மீன், மாசிக்கருவாடு, பருப்பு ஆகியவை ஈ .பி .டி .பி .ஆட்களால், அதிக விலைக்கு தனியார் முதலாளி களுக்கு விற்கப்படுவதுடன், இன்னும் விலை கூட்டி விற்று, இலாபம் சம்பாதிக்கும் போக்கில் பொதுமக்களைச் சுரண்டும் போக்கும் இருந்து கொண்டுள்ளது.

மீனவர் சுரண்டல்

ஒடுக்கப்பட்ட மீனவர் எதிர் நோக்கும் இன்னல்கள் மீனவர் கடலுக்கு செல்லும் நேரம் ,தூரம் என்பன கடற்படையினரால் தீர்மானிக்கப்பட்டு தடைவிதிக்கப்பட்டுள்ள தால். கஷ்டங்கள் அடக்குமுறைகளுக்கு மீனவர் இலக்காகியுள்ளனர். பாசையூர் ,குருநகர் மீனவர் அனேகமாக மீன்பிடித் தொழிலுக்கு செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதால், தமது குடும்பப்பட்டினியைப் போக்க கூலி வேலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. உதாரணமாக கடந்த மாவீரர் தினத்தின் போது மீன் பிடிக்கச் செல்ல தடை விதிக்கப்பட்டது.இதனால் தமக்கு அக் காலகட்டத்தில் வருமானம் இல்லாது வாட நேர்ந்ததாக, கடற் தொழிலாளர்கள் மீன்பிடி அமைச்சிக்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மீனவருக்கு நிவாரணம் வழுங்குவதாக பத்திரிகை அறிக்கைகள் வெளிவந்த போதிலும் இதுவரை எந்த நிவாரணமும்க் ணவுமே கிட்டவில்லை என மீனவர்கள் தெரிவித்தனர். ஒரு வறிய மீனவர் ஒருவர் இது குறித்து இவ்வாறு கூறினார்:

"அரசாங்கப் படைகள் மீனவர் கடலுக்கு செல்வதா இல்லையா எனத் தீர்மானித்து, எமக்கு நிவாரணக் கொடுப்பனவு வழுங்கப்படும் என்று, அரசாங்கம் அறிக்கை விட்டதும், தடையை விதித்த இராணுவத்தினரே, மறுநாள் ஒரு சிறிது தூரம் சென்று மீன் பிடிக்கலாமென கூறி, அந்த நிவாரணம் கிடைப்பதைத் தடுத்தனர். இதனால் எந்நாளும் அரசாங்கம் எம்மை படுகுளியில் தள்ளிவிடும் நிலைமை காணப்படுகிறது."

கடலில் இறால் பிடிக்க ஈ.பி.டி.பி .அமைப்பு தனது ஆதரவாளர்களுக்கு மட்டும் அனுமதியளித்துள்ளது. பிடித்த மீன்களையும் அவர்களே குறைந்த [illegible] பணம் சம்பாதிக்கிறார்கள் [illegible]

இப்படி அனுமதியை ஐந்து வியாபாரிகளுக்கு மட்டும் பெற்றுக் கொடுத்துள்ளது ஈ பி டி பி. 150 அங்கத்தவர்களைக் கொண்ட மீனவர் சங்கத்திற்கு கடற் படையினர்இந்த அனுமதியை வழுங்கவில்லை. இந்த ஐந்து முதலாளிகளின் படகுகளில்தான் மீன் பிடிக்க செல்ல வேண்டியுள்ளது. அவர்களது படகில் சென்று பிடித்த இறால்களை, 100 ரூபாவிற்கு வாங்கும் முதலாளிகள் அவற்றை 250 ரூபாவிற்கு விற்று இலாபம் சம்பாதிப்பர் . இவ்வாண்டு அந்த 100 ரூபாவும் 80 ரூபாவுக்கு இறங்கியுள்ளது.முன்பு வழுங்கிய ரூபா. 100 வைக் கேட்டால் படகுகளைக் கொடுக்கமாட்டார்கள் என்பதால் சகித்துக் கொண்டிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். என் குறைந்த பணம் தருகிறீர்கள் எனக்கேட்டால், எமக்கு செலவு கூடத்தானே. உங்களிடமிருந்து குறைந்த விலைக்குத்தான் வாங்க வேண்டியுள்ளது என்று சாக்குப்போக்கு கூறுகிறார்களாம். இந்த ஐந்து முதலாளிகளும் கடற் படையதிகாரிகளிடம் இறால் பிடிக்க செல்வதற்கான அனுமதி பெறுவதற்கு லட்சக்க ணக்கில் கப்பம் கட்டியுள்ளதால், அப்பணத்தைப் பெற இங்ஙனம் ஒடுக்கப்பட்ட மீனவருக்கு கொடுக்கும் பணத்தைக் குறைத்து வயிற்றிலடிக்கின்றனர்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மீனவத் தொழிலாளி நாவாந்துறைக் கடலில் முளாய் பகுதியில் வேலை செய்கிறார்: கடலில் மீன் பிடிக்கும் தூர எல்லை குறைந்தமை தொடர்பான பிரச்சினைகளால் வலை எறிந்து மீன் பிடிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலைமையால், ஊர்காவற்துறைப் பகுதியைச் சேர்ந்த மீனவர்களுக்கும், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மீனவர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.இவ்வாண்டு ஜனவரி 10 ம் திகதி ஆனைக்கோட்டை மீனவர்கள் இராணுவத்தின் அனுமதியுடன் ஊர்காவற்துறைப் பகுதி மீனவர்களைக் கடலில் தாக்கி, வலை, படகு என்பவற்றை பலாத்காரமாகப் பறித்து, இராணுவத்திடம் ஒப்படைத்தனர். இராணுவமும் ஊர்காவற்துறை மீனவரை கைது செய்து நான்கு நாட்கள் நடர்த்திய தாக்குதலினால் பலத்த காயங்களை ஏற்படுத்தியதன் பின்னர் விடுவித்துள்ளனர். ஊர்காவற்துறை மீனவர் இது குறித்து பொலிஸாருக்கு முறையிட்ட பின், ஆனைக்கோட்டை மீனவரைக் கைது செய்து, நீதிமன்றத்தில் நிறுத்தி நடவடிக்கை எடுத்தனர்.இதற்கு முன் கடலில் ஒற்றுமையாக மீன் பிடித்துவந்த இந்த மீனவர்களை வெட்டு குத்துகளில் ஈடுப வைத்தது.இராணுவத்தால் விதிக்கப்பட்ட மீன் பிடிக்கும் தூரம் பற்றிய கடல் எல்லைச் சட்டமேயாகும். மீனவரிடையே கோபதாபங்களைத் தூண்டி விட்டமைக்கு இராணுவத் தலையீடுகளே காரணமாகும்

பாடசாலைக் கல்வி ஸ்தம்பித்துள்ளதால், யாழ்ப்பாணத்தில் அநேக மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களை நாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.ரினிநுநு யூகஷயுயு) ஸெரி ஹால் என்ற நிறுவனம் கல்விக் கட்டணத்தை இரு மடங்கு ஆக்கியதால், கோபமடைந்த மாணவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். எவரோ அக்கல்வி நிலைய மண்டபத்திற்கு தீ மூட்டியுமுள்ளனர். இது நிர்வாகம் தீ வைத்துவிட்டு,எதிர்ப்புக்காட்டிய மாணவரை இராணுவத்திடம் பிடித்துக் கொடுக்க செய்த முயற்சி ஒன்றாகும் என்ற கருத்தும் மக்களிடையே நிலவுகின்றது. எவ்வாறாயினும் மண்டபத்திற்கு தாம் தீ வைக்கவில்லை என மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.இத்தகைய நிலைமை ஏற்பட்டுள்ளமைக்கு, யுத்தத்தின் இடர்பாடான சூழ் நிலையே காரணமாகும். யாழ். பல்கலைக்கழக மாணவியர் விடுதிக்குள் [illegible] நுழைய முயன்ற இராணுவத்தினர்.மாணவிகளின் கூச்சலால் முயற்சி பயனளியாது போகவே ஆகாயத்தில் சுட்டபடி தப்பி ஓடியுள்ளனர். இது பற்றி பல்கலைக்கழக நிர்வாகம் அக்கறை காட்டாததையிட்டு உபவேந்தருக்கு எதிராகப் பிரச்சார இயக்கம் இடம்பெற்றதோடு பல்கலைக் கழகத்தில் விரிவுரைப் பகிஷ்கரிப்பும் இடம்பெற்றது . மாணவிகளின் பாதுகாப்பிற்கு ஆபத்து! மாணவிகளுக்கான பாதுகாப்பை உறுதி செய்! உபவேந்தர், அனுமதியின்றி பல்கலைக்கழக வளவினுள் இராணுவத்திற்கு நுளைய இடமளியாதே! போன்ற பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று உபவேந்தரிடம் சமர்பிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இரவு நேரத்தில் மாணவிகள் விடுதிக்குள் இராணுவம் நுழைவதன் நோக்கம் என்ன என்பதை எவரும் அறிவர். இதற்கு முன் மாணவிகள் விடுதிக்குள் குண்டு வைத்துவிட்டு, இராணுவம் மாணவிகளைச் சோதனையிட்ட சம்பவத்தையும் இங்கு மனங்கொள்ள வேண்டுமென மாணவிகள் கூறுகின்றனர். தாச்சியில் இருந்து அடுப்புக்குள் வீழ்ந்த கதையை ஒத்த நிலைமையில் மாணவர்கள் போராட்டம் நடத்துகின்றனர்.

வன்னியிலிருந்து வந்த பலரிடம், யாழ்ப்பாணத்தில் பொருட்களன் விலை உயர்வல்லவா? எப்படி சமாளிக்கிறீர்கள்? என்று கேட்டபோது:"நான் யாழ்ப்பாணம் வந்தது விசேட அடையாள அட்டை பெற்றுக்கொண்டு கொழும்பு சென்று, அப்படியே வெளிநாடு செல்லவாகும் என ஒருவர் கூறினார். வேறொரு மாணவர், "எனது கிராமத்தில் இளைஞர்கள் இல்லை. சில குடும்பங்கள்தான் உண்டு. கிராமத்தில் வேலையில்லை என்பதால் எப்படி சீவிப்பது? யாழ்ப்பாணத்தை விட்டு வெளிநாடு சென்று பணம் உழைக்க எண்ணியுள்ளேன்" என்றார். வன்னியிலிருந்து யாழ்ப்பாணம்வந்த பணக்காரக் குடும்ப இளைஞர்கள் விசேட அடையாள அட்டை பெற்று, கொழும்பு சென்று வெளிநாடு செல்ல முயற்சிப்பது தொடர்பாக சிலர் இப்படிக் கூறுகின்றனர். "கல்வி மூலம் எம்மால் முன்னேற முடியாது. வர்த்தக சந்தையில் முதலீடு செய்ய முடியாது. பயிர்ச்செய்கை உற்பத்திகளை கொழும்புக்கு அனுப்பி விற்க முடியாது."

அரசாங்கத்தினதும் ஆயுதபாணிக் கும்பல்களதும் ஒடுக்குமுறைக் காரணங்களும் உண்டு. யாழ்ப்பாணம் பகுதியில் சிவில் நிர்வாக நிர்வாக நிறுவனங்களில் விடுதலைப் புலிகளின் அமைப்பின் தலையீடுகளும் உண்டு. நிர்வாகம் கொழும்பு அரசாங்கத்தின் கையில் இருந்த போதிலும், விடுதலைப் புலிகள் அமைப்பின் ஒடுக்கு முறையால் கொழும்பு அரசின் வேலையை தாமதப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகிறது. அரசாங்கத்தின் சில அதிகாரிகள் விடுதலைப் புலிகளின் மிரட்டலினால் சிலவற்றை செயல்படுத்துகிறார்கள். யாழ்ப்பாணத்தில் "உதயன்" பத்திரிகை யாரின் அதிகாரத்தில் உள்ளது என்பதனை இங்கு கூறவேண்டியதில்லை. வர்த்தக சந்தை யாழ்ப்பாணம். கொழும்பு வர்த்தகர்களது கையிலிருப்பினும், விடுதலைப் புலிகளுக்கு க கப்பம் கொடுக்காது செயல்படுகிறதா என்பதை உறுதிப்படுத்த முடியாது. அரச சார்பற்ற அமைப்புகள் அரசியல் கலப்பற்ற அபிவிருத்தியை செய்ய முடியுமென்ற பொய்யான நப்பாசைகளை மக்களிடையே ஏற்படுத்திவிட தொழிற்படுகின்றன. அதேசமயம் அவை அரசாங்கத்துடன் உள்ள தொடர்பை மூடி மறைக்க நாடகமாடுகின்றன. ஆகையால் யாழ்ப்பாண நிர்வாகம் யார் கையில் உள்ளதென கவனித்துப் பார்ப்பின், கொழும்பு இராணுவ நிர்வாகம்,விடுதலைப் புலிகள் நிர்வாகம், அரச சார்பற்ற அமைப்புக்களின் நிரவாகம், தனியார் முதலாளிகளின் நிர்வாகம் என்பன நினைவுக்கு வரும். இவை யாவும் இராணுவ ஆட்சியின் உப அம்சங்களே. இவை யாழ்ப்பாண மக்களை அடக்கி ஒடுக்கி வைத்துள்ளன. இத்தகைய இடர்மிகு நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ள மக்கள் தமது எதிர்காலம் எப்படி அமைய வேண்டும் என்று தீர்மானிக்க, எந்த அரசியல் பதிலீட்டை தேர்ந்தெடுப்பது? என்ற கேள்வி எழுந்துள்ளதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமசமாஜ கட்சியும் வடமேல் மாகாண காடைத்தனங்களும்

பெப்ரவரி 4 ம் திகதிய "சுதந்திரத் தின" அறிக்கையின் பின்னர் இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், வட மேல் மாகாணசபைத் தேர்தலினுள், பொதுஜன முன்னனியின் காடைத்தனங்கள், வாக்கு கொள்ளையடிப்புபற்றி ஜனாதிபதி . சந்திரிகா குமாரதுங்க வாய்திறக்கும் வரையும் பேசா மடந்தைகளாக இருந்த லங்கா சமசமாஜ கட்சி, தேர்தல் நடந்து முடிந்த 11 நாட்களின் பின் "கடசியின் நிலைப்பாட்டை" ஒரு பத்திரிகை அறிக்கையாக வெளியிட்டுள்ளனர்.

"யூ.என்.பி. அவமானத்திற்கு உள்ளாகியுள்ள ஒரு நிலைமையில், ஜனாதிபதி யூ.என்.பி.யை அம்பலப்படுத்தி நடாத்திய அன்பளிப்புகள், பொது ஜன முன்னணியின் வெற்றியை உத்தரவாதம் செய்வதற்கு போதுமானதாக இருந்தது." என சமசமாஜக் கட்சிக்காரர்கள் வாதம் செய்கின்றார்கள்.


ஜனாதிபதி, இடம்பெற்றுள்ள காடைத்தனங்களையும், தேர்தல் ஊழல்களையும் ஈடாட்டம் இல்லாத முறையில் கண்டனம் செய்துள்ளதோடு, இந்தக் குற்றவாளிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விடுத்துள்ள அறிக்கையை, ல.ச.ச.க. சுட்டிக் காட்டுகின்றது.மிகவும் கவலைக்குரிய விடயமாக இன்று நாம் முகம் கொடுக்கின்ற வன்முறைகள் , யூ என் பி ஆட்சிக் காலத்தில் போன்று அரசியல் இயக்கத்தினுள் உருவெடுத்த ஒன்று அல்ல. மறுபுறத்தில் சகல தேர்தல் வாக்குச் சவடிகளிலும் முதல் 25 வாக்காளர்களையும் கொன்று தள்ளுவதாக, ஜே வி பி எச்சரிக்கை செய்த 1987 உள்ளூர் ஆட்சி சபைத் தேர்தலில், சட்டத்துக்கு கிட்டவும் நெருங்க முடியாத விதத்தில் இடம் பெற்ற படு கொடூரமான கொலைப் பயமுறுத்தல்களின் பின்னணியாக விளங்கிய வன்முறைகளும் அல்ல. அது விசேட நிலைமைக்கு முகம் கொடுக்கும் பொருட்டு திடீரென ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். அதை தனிமைப்படுத்தி அரசியல் ரீதியில் தோற்கடிக்கக் கூடிய ஒன்றாகும்".

இந்த இலட்சணத்தில் சமசமாஜத் தலைவர்கள் கூறுவது என்ன? வட மேல் மாகாணத் தேர்தலில், பொது மக்களின் ஜனநாயக உரிமைகளைக் கொள்ளையடித்து சூறையாடக் கட்டவிழ்த்து விட்ட வன்முறைகளை, அந்தளவிற்கு கணக்கெடுக்க வேண்டியதில்லை. அது பொது மக்களுக்கு அந்தளவிற்கு ஆபத்தான ஒரு விடயம் அல்ல.

தேர்தல் பிரச்சார இயக்கத்தினுள், அரசியல் எதிர்ப்பாளர்களுக்கு எதிராக, பொதுஜன முன்னணியின் வன்முறைகள், பொலிசாரின் பாதுகாப்புடன் கட்டவிழ்த்து விடப்படும் ஒரு நிலைமையினுள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, யூ என் பி ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற வன்முறைகளின் தரத்துக்கு இப்போது ஒன்றும் இடம் பெற்றுவிடவில்லை எனவும், பொதுஜன முன்னணி ஜனநாயகத்தின் காப்பாளனாக



சந்திரிகா குமாரதுங்க



பற்றி வீரக்கோன்

தொடர்ந்தும் இருந்து கொண்டுள்ளது எனவும் கூறியுள்ளார். இந்த சகல மோசடிகளையும் சமசமாஜ பொதுச் செயலாளரும், அமைச்சருமான பற்றி வீரக்கோனை தேர்தல் பிரச்சார மேடையில் வைத்துக் கொண்டே ஜனாதிபதி கூறியுள்ளார்.

யூ .என் .பி. அரசாங்கத்தின் வன்முறைக் காலத்தில், தாம் இழைத்த நடவடிக்கைகள் பற்றி, மாஜி பிரதி பொலிஸ் மா அதிபர், பிரேமதாச உடுகம்பொல சத்தியப் பிரமாணம் எழுதியது, தமது வீட்டிலாகும் எனக் கூறி பற்றி வீரக்கோன் ஜனாதிபதியின் பேச்சுக்களுக்கு முண்டு கொடுக்க முன்வந்துள்ளார்.

தேர்தல் தினத்தன்று அமைச்சர்களும், எம் .பீ.க்களும் காடையர்களுடன் சேர்ந்து தொழிற்பட்ட விதத்தை தேர்தல் சுதந்திர கண்காணிப்புக் குழு அம்பலப்படுத்தியுள்ளது.

சீருடையணிந்த பொலிஸார் இவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கியதோடு, சீருடையணியாத பொலிஸார் காடையர் கும்பல்களோடு இருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவை எல்லாம் இந்த இலட்சணத்தில் நடைபெற்றிருக்கையில் "இன்றைய வன்முறைகள் யூ.என்.பி. காலத்தைப் போல் அரசியல் ஆட்சி முறைக்கே உரித்தான ஒன்றல்ல" என சமசமாஜ வழக்கறிஞர்கள் மூளைகள் கூறிக் கொண்டுள்ளார்கள். இது ஜயவர்தன பிரேமதாச ஜனாதிபதிகள் மேடைகளில் ஜனநாயக, பஞ்ச சீலங்களைப் போதித்து வந்த அதே வேளையில், மேடைகளின் அடியில் தயார் செய்து வந்த காடைத்தனங்கள் வன்முறைகளிலிருந்து வேறுபட்டதா?

ஜே.வி.பி காரர்கள் வாக்களிக்க வரும் முதலாவது 25 வாக்காளர்களையும் கொன்றுத்தள்ளி, ஏனைய வாக்காளர்களை விரட்டிக் கலைத்துவிடச் செயற்பட்டார்கள்.

இன்றைய பொதுஜன முன்னணிக் குண்டர்கள், தேர்தல் பிரதிநிதிகளை ஓட்டிக் கலைத்து, வாக்குகளைப் போட்டனர். இன்று, சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ கட்சிகளுடன் யூ.என்.பி.யும் வன்முறைகளுடன் சேர்ந்து கொண்டதோடு, இன்று சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள்,

பொதுஜன முன்னணியின் பங்காளிகளாக திட்டவட்டமான முறையில் வன்முறையில் சேர்ந்து கொண்டுள்ளன.

வடமேல் மாகாணத்தில் வெளிப்பாடான பொதுஜன முன்னணியின் காடைத்தனங்களும், வன்முறைகளும், முதலாளித்துவ ஆட்சி முறையினுள் வேரூன்றிக் கொண்டுள்ள, சமசமாஜ, கம்யூனிஸ்ட் பங்களிப்பில் இருந்து தலைதூக்கியவை அன்றி வேறென்ன?. சமசமாஜக் கட்சி முன்வைக்கும் பொய் வாத விவாதங்களின் மூலம், "மாற்றங்களின்" முலம் பொதுஜன முன்னணி அரசாங்கம் அபிவிருத்தி செய்யும் காடையர் இயக்கத்தை மூடி மறைக்க முயற்சிக்கின்றது.

இவர்களின் வாதத்தின்படி இந்த பொதுஜன முன்னணி குண்டர் இயக்கம் "திடீர் நிலைமைக்கு முகம் கொடுக்க உருவாக்கப்பட்ட ஒன்றாகும்". இது மற்றொரு பொய் வாதமாகும். அரச படையணிகளின் உள்ளும், அத்துடன் இணைந்த அரசாங்க குண்டர் படையணிகளின் உள்ளும், பிற்போக்குப் படையணிகள் திரட்டப்பட்டுள்ளன. "திடீரென" குண்டர் இயக்கத்தை அமைப்பதும் நீதியானதா?

பொதுஜன முன்னணி காடைத்தனங்களையும், வன்முறைகளையும் அந்தளவுக்கு கணக்கெடுக்க வேண்டியதில்லை. அதை தனிமைப்படுத்தி தோற்கடிக்க முடியும் என சமசமாஜ கட்சிக்காரர்கள் கூறும் யோசனையை எடுத்துப் பார்ப்போம். அதை அவர்கள் எப்படிச் செய்யப் போகிறார்கள், "பொதுஜன முன்னணியினுள் இருந்து கொண்டுள்ள முற்போக்குச் சக்திகளின் பலத்தை எடுத்துக் கொண்டால் (காடைத்தனம் (தொ.பா) வெற்றிகரமாகத் தோற்கடிக்க முடியும் என ல ச ச க நம்புகின்றது." இவர்கள் முற்போக்கு சக்திகள் என வாயடித்துக் கொள்வது, ஜனாதிபதி தொடக்கம், மகிந்த ராஜபக்ச வரையும், பற்றி வீரக்கோன் தொடக்கம் கே.பி. சில்வா வரையிலான பகுதியினரையும், மல்பரி குழுவையுமேயேயாகும். ஜனாதிபதியின் முற்போக்கு தன்மை பற்றி ல.ச.ச.க. சமீப காலமாக அவரை தலைமேல் வைத்துக் கொண்டாடுவது ஜனாதிபதி . இலங்கையின் முதலாளி வர்க்கத்தின் நனவான பகுதியினரதும், அனைத்துலக மூலதனத்தினதும் நிஜ

கைத்தேங்காயாக ல.ச.ச.க.வும் களத்தில் இறங்கி வேலை செய்யும் நிலையிலேயேயாகும். முற்போக்கு சக்திகள் எனக் கூறிக்கொள்ளும் ஏனைய கோஷ்டிகளும், பொதுஜன முன்னணிக் கரத்தையின் கறள்பிடித்த சக்கரங்களுக்கு "கிறிஸ்" தடவித் தள்ளும் பேர்வழிகளாவர். பிற்போக்கு சக்திகள் தம்மிடையே வேலையை பங்கிட்டுக்கொண்டு, இடைக்கிடையே ஜனநாயகம் பற்றி எழுப்பும் கோஷங்களையிட்டு நம்பிக்கை கொள்ள வேண்டும். அது பொது மக்களை ஆதாள பாதாளத்தில் தள்ளும் கொந்தராத்தைப் பகிர்ந்து கொள்ளும், அரசியல் மோசடியாளர்களின் இலட்சணத்தில் ஒரு அங்கமாகும்.

இந்தக் குழறுபடிகளுக்கிடையேயும் சமசமாஜக் கட்சிக்காரர்கள்.பின்வருமாறு கூறிக்கொள்ள நேரிட்டுள்ளது.

"எந்த ஒரு தேர்தல் சம்பந்தமாகவும் இந்த விதத்தில் தொடுக்கப்படும் வன்முறை அரசியல் பிற்போக்கின் ஒரு வெளிப்பாடாகும். தமது வரலாறு பூராவும் இதற்கு முகம் கொடுக்க நேரிட்ட ல.ச.ச.க. சமீபத்தில் முகம் கொடுத்த சம்பவங்கள் இதில் இருந்து அன்னியமானவையல்ல என இனங்கண்டு கொண்டுள்ளது. எதிர் அரசியல் கட்சிகளுக்கும், அதன் செயற்பாட்டாளர்களுக்கும் எதிராக பயன்படுத்தப்பட்ட ஒன்றாக அது தோன்றினாலும், இதன் இலக்கு வாக்காளரே." லங்கா சமசமாஜ கட்சி பங்களிப்புச் செய்தது இந்த பிற்போக்குக்கேயாகும். நீண்ட கால வரலாற்றில் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஒழித்துக் கட்டுவதற்கு எதிராக அந்த உரிமைகளைக் காக்க, முன்நின்ற ல.ச.ச.க. இன்று அதன் எதிரியாக மாறியுள்ளது.

சிந்திக்கும் ஆற்றல் படைத்த எந்த ஒரு மக்கள் பகுதியினரும், நடந்து முடிந்த வடமேல் மாகாண சபைத் தேர்தலில் பொதுஜன முன்னணியின் காடைத்தனங்கள் தலை நீட்டியது ஏன் என்பதைத் தெரிந்து கொண்டுள்ள ஒரு நிலைமையில், சமசமாஜக் கட்சி இந்தக் கேவலமான விவாதங்களை சிருஷ்டித்துக் கொண்டுள்ளது. இது மீண்டும் பொதுஜன முன்னணியில் முற்போக்காளர்களைத் தேடும் முயற்சியா? விருப்புரிமை வாக்குக்களை ஒழித்துக் கட்டுவது போன்ற கோரிக்கைகளை முன்வைப்பதன் மூலம் அந்த சிந்திக்கும் ஆற்றல் படைத்த மக்களை மீண்டும் ஆதாள பாதாளத்தில் தள்ளச் செய்யும் முயற்சியா?

பிற்போக்கும் எதிர் புரட்சியும் இங்கு அபிவிருத்தி செய்வது இந்த அரசியல் மூடு திரையின் பின்னால் பதுங்கிக் கொண்டேயாகும். சமசமாஜக் கட்சி அத்தகைய பிற்போக்கு தலையெடுக்க தோள் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டிக்கோயா ஆஸ்பத்திரி ஊழியருக்கு எதிரான தாக்குதலும் சிங்கள வீரவிதானவின் இனவாத ஆத்திரமூட்டல்களும்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளரும், பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமானும், அவரது பாதுகாப்பாளர்கள் சிலரும், டிக்கோயா ஆஸ்பத்திரி ஊழியர் டி .கே .பி விஜித ரத்னாவை தாக்கியதற்கும், மாவட்ட வைத்திய அதிகாரியை ஏசி, கொலைப் பயமுறுத்தல் நடத்தியதற்கும் எதிராக, கடந்த மாதம் 17 ம் திகதி முதல் 22ம் திகதி வரை, மத்திய மாகாணத்தின் சுகாதார அமைப்புக்களும், 74 ஆஸ்பத்திரிகளின் ஊழியர்களும் போராட்டத்தில் குதித்தனர். ஐந்து நாட்களாக தலைமறைவாகி திரிந்த குண்டர்கள் நீதிமன்றத்தில் சரணடைய வேண்டிய நிலையேற்பட்டதோடு, அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

சுகாதார ஊழியர்கள் முன்னெடுத்த போராட்டத்திற்கு ஆதரவளிக்காமல் இருந்தது உப வைத்தியர்கள் சங்கம் மாத்திரமே. அதன் தலைவர்கள், டாக்டர்களுக்கும் தமக்கும் இடையேயான முரண்பாடுகளைக் கிண்டிவிட்டு, உப வைத்தியர்களை போராட்டத்துடன் இணையவிடாமல் தடுத்து, குண்டர்த் தாக்குதல் நடாத்தியவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் குண்டர்த் தலைமை ,தொலை பேசி இலக்கம் தொடர்பான ஓர் சிறிய பிரச்சினையை இத்தாக்குதலுக்கு சாதகமாக்கிக் கொண்டது.

அது மாத்திரமல்லாமல் கடந்த காலங்களில் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்கவே நாம் இருக்கிறோமென மார்தட்டிக் கொண்டவர்கள், அரசாங்கத்தின் ஆதரவோடு தொழிலாளர் ஏழைகளுக்கெதிராக குண்டர் தாக்குதலை முன்னெடுப்பதற்கு மேலும் ஓர் அர்த்தம் உண்டு. அது தொடர்ந்தும் தொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் முதலாளித்துவ தாக்குதல்களின் மத்தியில், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஒடுக்கப்படும் மக்களுக்கிடையில் ஏற்படும் ஐக்கியத்திற்கு குழி பறிப்பதற்கேயாகும். தனியார் மயத்தின் தாக்குதலினாலும் சமரச ஒப்பந்தங்களாலும், இத்தாக்குதல்களுக்கு அடிபணிய வைத்தல் உள்ளிட்ட, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் துரோக நடவடிக்கைகளுக்கும் எதிராக, எழுச்சி கண்டுவரும் போராட்டங்களை, இனவாத வெட்டு குத்துகளை தூண்டி விடுவதன் மூலம் திசை திருப்பிவிடும் அவசியமும் இ.தொ.கா.வுக்கு இருந்து கொண்டுள்ளது.

பிணையில் விடுதலையான பின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் உறுப்பினர்கள் தாக்குதல் நடத்திய குண்டர்களுக்கு ஆதரவாக அட்டன் நகரில் ஊர்வலம் சென்றது இந்த நிலைமையினுள்ளேயேயாகும்.

இதற்கிடையே கடந்த காலங்களில் சுகாதார ஊழியர்களுக்கு பொதுஜன முன்னணிக் குண்டர்களாலும் மற்றும் ஏனைய குண்டர்களாலும், தொடுக்கப்பட்ட குண்டர் பயமுறுத்தல்கள், தாக்குதல்களுக்கு எதிராக சின்னி விரலைத் தன்னும் உயர்த்த என்றுமே முன்வராத சிங்கள வீரவிதான என்னும் சிங்கள பாசிச அமைப்பின் நடிகர்கள் இச்சம்பவத்தில் முதலைக் கண்ணீர் வடிக்கக் காரணம், ஆஸ்பத்திரி ஊழியர்களைத் தாக்கியவர்கள், தமிழர்களாக இருந்துவிட்டதுதான்.

சுகாதார ஊழியர்கள் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் சுகாதார சேவைகளை வெட்டித்தள்ளும் நிலையிலும் வசதி வாய்ப்புக்கள் இல்லாத நிலையிலும் ஊழியர் பற்றாக்குறையான நிலையிலும், நோயாளர்களுக்கு ஏற்படும் இழப்புக்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டி ஏற்பட்டுள்ளதும் அவர்களேயாகும். அதற்கும் மேலாக அவர்கள் முதலாளித்துவ ஆளும் வர்க்கம் நனவான முறையில் நடாத்தி வரும் குண்டர் தாக்குதல்களுக்கும் பலியாக வேண்டியுள்ளது.

சுகாதார. ஊழியர்கள் அத்துறையின் சேவையாளர்களுடன் மட்டுமல்லாமல் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஒடுக்கப்படும் மக்களுடன் ஒன்றிணைந்து சோசலிச வேலைத்திட்டத்துக்காகப் போராடுவது அவசியமாகும்.

# தோட்டப்புற அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் பிரச்சாரம்

சோசலிச சமத்துவக் கட்சி தோட்டப்புற அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் பிரச்சாரத்தை நாடுதழுவிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் முன்னெடுத்துள்ளது. அதன் ஒரு பாகமாக, தொழிலாளர், ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் "பெட்டிசன்" கையொப்பம் திரட்டும் பிரச்சாரத்திலும் ஈடுபட்டு வருவதோடு, கடந்த ஜனவரி பத்தாம் திகதி பொகவந்தலாவை நகரில் பகிரங்கக் கண்டனக் கூட்டம் ஒன்றையும் நடத்தியது.

கடந்த ஜூன் முதலாம் திகதி அட்டன் ஷனன் தோட்ட தேயிலைத் தொழிற்சாலையில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து, தோட்டப் பிரதேசங்களில் பாய்ந்து விழுந்த பொலிசார், அட்டன் பகுதியைச் சேர்ந்த ஆறு இளைஞர்களைக் கைது செய்ததோடு கடந்த அக்டோபர் மாதம், தோட்டப்புற ஆசிரியர்கள் இருவரையும் விடுதலைப் புலிகள் அமைப்பு சந்தேக நபர்களாக கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சோ.ச.க. ஆதரவாளர் சுப்பு உதயகுமார் உட்பட, பிச்சமுத்து சந்திரன், அருணாசலம் யோகேஸ்வரன், செல்லமுத்து லோகநாதன், பொன்னையா சரவணகுமார், சாமிமுத்து பெனடிக் ஆகியோர், கடந்த 1994ம் ஆண்டு பொதுஜன முன்னணி அரசாங்கத்தால் விடுதலைப் புலிகள் அமைப்பின் சந்தேக நபர்களாக கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டதோடு இரண்டு வருடகாலமாக சோ. ச. க. வின் முன்னோடி அமைப்பான புரட்சிக் கம்யூனிஸ்டுக் கழகம் தொடுத்த போராட்டத்தை தொடர்ந்து நிரபராதிகளாக விடுதலை செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சோசலிச சமத்துவக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான எம். அரவிந்தனும், சோ. ச .க வின் வழக்கறிஞர் அஜித் ரட்னாயக்கவும் இக் கைதிகளை போகாம்பரை சிறைச்சாலையில் பார்வையிட்டனர். சோ. ச .க வின் தொழிலாளர் நடவடிக்கை குழுவுடன், தொழிலாளர் பாதை நிருபரும், கைது செய்யப்பட்டுள்ள இளம் தொழிலாளர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் பெற்றோர்களுடன் கலந்துரையாடினர். அவர்கள் எமது நிருபரிடம் பின்வருமாறு குறிப்பிட்டனர்:

**சுப்பு உதய குமாரின் தாய் கூறியதாவது:**

இரவு 12 மணிக்குத் தூங்கிக்கிட்டிருந்தான்.

எழுப்பி ரோட்டு வரையும் கூட்டிட்டுப் போறோம்னு சொல்லி அப்படியே கொண்டு போய்ட்டாங்க. வீட்டிலிருந்து ஏதாவது எடுத்திருந்தாலும் பரவாயில்லை. அநியாயமாகப் பிள்ளையை

இரண்டு தடவை கொண்டு போய்ட்டாங்க. புகையிரத தண்டவாளத்தில் குண்டு வெடிச்சதில் இருந்து எல்லா இளைஞர்களையும் கொண்டு போய்ட்டாங்க. இப்ப எங்க குண்டு வெடிச்சாலும் அதுக்கு சித்திரவத்தை தோட்டந்தான் காரணம்.

போன முறை இரண்டு வருசம் வச்சிருந்தாங்க. இந்த முறை எத்தனை வருசமோ தெரியவில்லை. சித்திரவதை செய்து கொல்வதற்கா புள்ளைங்கள பெத்து வச்சிருக்கோம் எனவும் அவர் கேட்டார்.

## சித்திரவதை

ஒருமுறை சந்திரனை வீடடைப் பரிசோதிக்க என்று கூட்டி வந்தாங்க. காலில் சங்கிலி போட்ட நிலையில் அவரால் நடக்க முடியவில்லை.வீட்டுக்கு கிட்ட வந்ததும் ஏன்டா நடிக்கனும் எனக் கூறி கீழே போட்டு சப்பாத்துக் காலினால் உதைந்தாங்க. இதைப் பாத்துக்கிட்டிருந்த ஊரே நடிங்கிச்சுது. ஒரு ஆள் உழைத்து எட்டுப் பேர் சாப்பிடுகிறோம். அவனை நினைத்து நினைத்து தங்கச்சி சாகப் பொளைக்க கிடக்கிறா. கடிதம் போட்டா குடுக்கமாட்டாங்க. சாப்பாடு கொண்டு போனா நாசம் பண்ணித்தான் குடுப்பாங்க. எப்ப வருகின்றானோ அப்ப வரட்டும். இந்த நிலையில அவனைப் பார்க்க விரும்ப வில்லை எனவும் அவர் கூறினார்.

**உதய குமாரின் தந்தை சுப்பு:**

எந்த ஆதாரமும் இல்லாம பொடியங்களைக் கொண்டு போறாங்க. சோசலிச சமத்துவக் கட்சி சிறிய அமைப்பாக இருந்தாலும், பத்திரிகையில எழுதி, கூட்டங்கள் நடத்தி போராடிக்கிட்டிருக்காங்க. ஆனால் தொண்டமான் தேர்தல் நேரத்தில் மாத்திரம் வந்து, இப்ப எனக்கு போடுங்க நாக்காலி கிடைத்த பிறகு உங்கத் தலையில கொச்சிக்கா அரைக்கிறேன் என்கிறாரு.

**சந்திரனின் தந்தை பிச்சமுத்து:**

"போண ஜூன் ஐந்தாம் திகதி விசாரனைக்கு வரச்சொல்லி, அப்படியே கண்டிக்கு கொண்டு போய்ட்டாங்க .

வீட்டுக்கு கூட்டிட்டு வந்தபோது மகன் மெலிந்து அடையாளம் தெரியாமல் இருந்தான். அவனால் எங்களைக் கூட அடையாளம் காண முடியவில்லை. மகனைக் கூட்டி வந்து வீட்டில் இருந்த கோட்டையும், குறடையும் சந்தேகத்தில் எடுத்திட்டு போய்ட்டாங்க. சந்திரன் பாவித்த வாகனமும் குடுக்காமல் ஏழு மாதமாகக் கரேஜில் கிடக்குது.

சோசலிச சமத்துவக் கட்சி மட்டும்தான், எங்களைச் சந்தித்து உத்சாகமும் ஊக்கமும் கொடுக்கிறங்க .நீங்கள் போராடுவீர்கள் என எங்களுக்கு நம்பிக்கை இருக்கு.

**பெனடிக்கின் தாய் சாந்த மேரி:**

போனமுறை பிடிபட்டிருந்த சமயத்தில் நிறைய காசு செலவு போய்விட்டது. இந்த முறை பொருளாதாரப் பிரச்சனை காரணமாக ஒரு தடவை கூட என்னால் போய் பிள்ளையைப் பார்க்க முடியல. இது வரைக்கும் ஒரே ஒரு கடிதம் தான் வந்துள்ளது. என் மனநிலை ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கு.

## ஆசிரியர்கள் கைது

கடந்த அக்டோபர் பதின்மூன்றாம் திகதி கைது செய்யப்பட்டுள்ள ஆசிரியர் சிவனு சிவானந்தராஜா, அட்டன் ஹைலன்ஸ் மத்திய மகாவித்தியாலயத்தின் விஞ்ஞான ஆசிரியர்.

அத்தோடு அவர் சோசலிச சமத்துவக் கட்சியின், இலவசக் கல்வியைப் பாதுகாக்கும் நடவடிக்கைக் குழுவின் அங்கத்தவருமாவார்.

சோ .ச .க .வின் இலவசக் கல்வியைப் பாதுகாக்கும் நடவடிக்கைக் குழு, கடந்த டிசம்பர் ஆறாம் திகதி, அவரின் குடும்ப அங்கத்தவர்களை சந்திக்க சென்ற போது, அவரின் தந்தை பின்வருமாறு தெரிவித்தார்:

"எனது மகன் 1987ல் யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் பயிற்சி பெற்றிருந்த போதும் தீவிரவாத இயக்கங்களோடு தொடர்பு வைத்திருக்கக் கூடியவர் அல்ல. அவரது வாழ்க்கை கல்வியோடு மாத்திரமே சம்பந்தப்பட்டதாகும். சிவானந்தராஜா தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவரான போதிலும் இதுவரையும் யாரும் அவரைச் சென்று பார்க்கவில்லை.

சோ.ச .க .வின் மத்திய குழு உறுப்பினர் பானினி விஜேசிரிவர்தன குறிப்பிடுகையில்! "இது சகல தொழிலாளர், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான தாக்குதல் மாத்திரமல்லாது, இனவாத யுத்தத்துடனும் அவசரகாலச் சட்டத்துடனும் தொடர்புபட்டதாகும். அத்துடன் இலவசக் கல்வியை பாதுகாக்க முன்னிற்பவர்களை இவ்வாறான ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்குவது பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் வேலையாக உள்ளது" என குறிப்பிட்டார்.

சம்பந்தன் திருவருட்செல்வன், இதே தினத்தில் கைது செய்யப்பட்டு, போகம்பரைச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார். இவர் பொகவந்தலாவை ஹோலி ரோஸரி பாடசாலையின் கணித ஆசிரியராவார். இவரின் சகோதரியான ரஞ்ஜிதமலரும் கைதுசெய்யப்பட்டு, அக்டோபர் 16 தொடக்கம் மார்ச் 02ம் திகதி வரை, மினிக்கிந்த பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டு, தற்போது ரஜவீதிய பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளார். இவர் திருகோணமலை, ஆலங்கேணி வினாயகா தமிழ் வித்தியாலய பட்டதாரி ஆசிரியராவார்.

திருவருட் செல்வனின் நண்பர்கள் மலையகத்தின் பிரபல தொழிற் சங்கங்களோடு தொடர்பு கொண்டு முயற்சித்தபோதும் பலனளிக்கவில்லை எனவும், அவர் அங்கத்துவம் வகிக்கும் மலையக ஆசிரியர்கள் ஒன்றியமும், தீவிர முயற்சிகள் எடுத்துள்ளதாக தெரியவில்லை.

இக்கைது நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கும் சோசலிச சமத்துவக் கட்சி, இந்த இளைஞர்களையும் ஆசிரியர்களையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யுமாறு கோருவதுடன், இதை தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுள்ள, ஜனநாயக விரோத அரச ஒடுக்குமுறையாகவும் கணிக்கின்றது.

ஆகவே சோ .ச .க .வின் தொழிலாளர் நடவடிக்கை குழுவுடன் இணையுமாறும், அதன் பிரச்சார நடவடிக்கைக்கு ஆதரவளிக்குமாறும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை சோ.ச.க வேண்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடப்பு பிரச்சாரக் கூட்டம்:

# மக்களின் வாழ்க்கை அவலங்களை காட்டுகிறது

வை.ஏ. தர்மசேன


சோசலிச சமத்துவக் கட்சி கடந்த பெப்ரவரி 5ம் திகதி உடப்பு சந்தை முன்றலில் நடாத்திய பகிரங்கக் கூட்டம் அப்பிரதேச மக்களின் கவனத்தை ஈர்ப்பதாக விளங்கியது. விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட சோ ச க அங்கத்தவர்கள் நால்வரில் ஒருவரான திருஞானசம்பந்தன், யாழ் பிரதேசத்திலிருந்து வருகை தந்திருந்த எஸ் சந்திரசேகரன் ஆகியோரது பேச்சுக்கள் அப்பிரதேச மக்களுக்கு புதிய அனுபவமாகவும் விளங்கியது. கூட்டமும் அதற்காக இடம்பெற்ற பிரச்சாரமும் இனவாத யுத்தத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒடுக்குமுறைகளுக்கும் வறுமை நிலைமைகளுக்கும் மத்தியில், வடக்கிலும் தெற்கிலும் உள்ள தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை ஒன்றிணைக்கும் வேலைத்திட்டத்தை வெற்றிக்கு இட்டுச் செல்லும் தன்மையைக் கொண்டிருந்தது.

உடப்பு பிரதேசம் வருடக் கணக்கில், சோ.ச.க.வும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் போராடி வந்த பிரதேசமாகும். கிளிநொச்சிப் பகுதியில் சோ.ச.க.வின் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொழுது, விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு, இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் பிரமாண்டமான முறையில் முன்னெடுக்கப்பட்ட அரசியல் பிரச்சாரத்தின் பின் விடுதலை செய்யப்பட்ட சோ.ச.க. அங்கத்தவர் நால்வரில் இருவரான சம்பந்தனும், இராஜேந்திரன் சுதர்சனும் இக் கூட்டத்தை கட்டியெழுப்பும் பிரச்சார நடவடிக்கைகளில் கலந்து கொண்டனர்.

## தரித்திர வாழ்க்கை

மீனவர்கள், குடும்பப் பெண்கள், நகரசபைத் தொழிலாளர்கள், யுத்தத்தால் அகதிகளாக உடப்புவில் தஞ்சம் புகுந்தவர்கள் அனைவரையும் சந்திக்கும் வாய்ப்பு அவர்களுக்கு கிட்டியது.

வடமேல் மாகாண சபைத் தேர்தல் காலத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்தில், சோ.ச.க. அங்கத்தவர்களுடன் உரையாடிய மக்கள், ஐ.தே.க., பொதுஜன முன்னணியினரால் தம்மீது திணிக்கப்பட்டுள்ள நாசங்களுக்கு எதிரான கொதிப்பையும், கசப்பையும் வெளிக்காட்டினர்.



சோ.ச.க.வின் உடப்பு பிரச்சாரக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் சிறைக் கைதியாக இருந்து விடுதலை செய்யப்பட்ட சம்பந்தன் உரைநிகழ்த்துகின்றார்

"எமது விருப்பையோ அல்லது வெறுப்பையோ காட்டுவதற்கு இருந்த நாளும் உடைந்து விழுகிறது. வாக்குகளை, நாங்கள் வாக்குச் சாவடிகளுக்கு செல்லும் முன்னரே பொதுஜன முன்னணியினர் போட்டுக் கொண்டனர். நாங்கள் என் அப்படிச் செய்தீர்கள் என்று கேட்டோம்? நாங்கள் எல்லா வாக்குகளையும் காலையிலேயே எங்களுக்குப் போட்டுவிட்டோம். இனி நீங்கள் வீட்டுக்குப் போகலாம் என்றனர்." இது எமது வாக்குரிமைக்கு எதிரான கொடூரத் தாக்குதலாகும். வருடக் கணக்காக ஐ.தே.க.வுக்கு வாக்களித்து கடந்த முறைதான் ஐ.தே.க. வேண்டாமென பொதுஜன முன்னணிக்கு வாக்களித்தோம். இப்போது முன்னணி அதற்கும் அப்பால் சென்றுள்ளது. தேர்தலைப் பகிஷ்கரிப்பதற்கு எல்லோரும் ஒன்றிணைந்தால் நல்ல பாடம் ஒன்று கற்பிக்கலாம்." எனத் தெரிவித்தனர்.

குடும்பத் தலைவி ஒருவர் பேசும் போது, உடப்புவுக்கு விஜயம் செய்யும் எவருக்கும் நாம் படும்பாடு புரியும். தண்ணீர் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. தண்ணீர்க் குழாய்கள் சில பொருத்தப்பட்டிருந்தாலும் அவை குடிப்பதற்கு உகந்தவையல்ல. காசு கொடுத்து குடி தண்ணீர் வாங்க வேண்டியுள்ளது. நாம் குளிப்பதும் மழைக்காலத்தில் குழிகளில் தேங்கிக் கிடக்கும் கலங்கிய நீரில்தான். மலசல கூடம் இல்லை. தொற்று நோய்கள் வந்தால் பெரும் நாசமேற்படும்.

வாழ்க்கைக்கே உதவாத இடங்களில் குடிசைகளை அமைக்க நேர்ந்துள்ளது. அவற்றால் வெயிலுக்கோ மழைக்கோ பாதுகாப்பு இல்லை. யுத்த அகதிகளாக வந்தவர்கள் படும் சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல. சம்பத்தில் அவர்களுக்கு வழங்கிவந்த சிறிய சலுகைகளையும் வெட்டிவிட்டனர்.

உடப்பு, சிலாபம், புத்தளம் வீதியில், மதுறு ஓயா சந்தியில் இடது பக்கம் திரும்பி, சுமார் ஐந்து மைல்கள் கடந்ததும் மீனவர் கொட்டில்களைக் கொண்ட ஒரு கிராமத்தை காணலாம். மூவாயிரம் மீனவர் குடும்பங்கள் இங்கு வாழ்கின்றன. ஒரு நாளைக்கு கொழும்புக்கு சுமார் 50 லொறி மீன்கள் ஏற்றப்படுகிறது. "தொழிலாளர் பாதை" யில் முன்னர் அம்பலமான( 1995 ஏப்பிரல் 21) "பரிதாபமாகக் கைவிடப்பட்ட உடப்பு மீனவர்கள் கிராமத்தின்" தரித்திர வாழ்க்கை தற்போது மிகவும் அபாயகரமான கட்டத்தை அடைந்துள்ளது.

இந்நிலைமையில் இருந்து அவர்கள் கூறியது, முதலாளித்துவத்தின் மீது ஏற்பட்டிருக்கும் கசப்பினதும் வெறுப்பினதும் அடிப்படையிலாகும்.

நகர சபைத் தொழிலாளி கூறியதாவது, "எங்கள் வீடு ஒவ்வொரு நாளும் உடைந்து விழுகிறது. எதாவது ஒரு பக்கம் உடையாத வீடு ஒன்றைக் காணமுடியுமா? இவைகள் அரசாங்கத்தால் அறியாதவைகள் அல்ல. இன்னமும் கக்கூசு வாளியை தோழில் சுமந்து செல்ல வேண்டியுள்ளது. சுகாதாரத் தொழில் புரியும் எமது நிலை இதுதான்."

கால வைரன் எனும் மீனவ நடுத்தர இளைஞர் முதலாளித்துவ ஆட்சியாள்ர்கள் மீதான கொதிப்பை காட்டும் வகையில் கூறியதாவது: "நான் 40 வருடங்களாக ஐ.தே.க. வுக்கே வேலை செய்தேன். இனிமேல் யாருக்கும் வாக்குப் போடமாட்டேன். இம்முறை தேர்தல் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், வாக்குச் சாவடிகளுக்கு வந்த குண்டர்களுக்கு இடம் கொடுத்து விட்டு பாய்ந்து ஓடி விட்டனர். விடுதலைப் புலிகளுக்கு எம்மிடம் எந்த ஆதரவும் கிடையாது. அன்று எமது முஸ்லிம், சிங்களத், தமிழ் மக்கள் ஒன்றாக வாழ்ந்தனர். இப்போது அந் நிலை இல்லை. வேறு ஒரு அரசாங்கம் அமைத்தாலும் இந்நிலை மேலும் விரிவடையும். ஆகவே விடுதலைப் புலிகளின் தனி அரசுக்கு என் ஆதரவு வழங்க வேண்டும்? "என அவர் கேட்டார். வைரப்பன் பெரிய வெள்ளை எனும் மீனவர் தனது துரதிஷ்டமான நிலையை இவ்வாறு விளக்கினார்.

எனக்கு இரண்டு படித்த பிள்ளைகள் இருந்தனர் இப்பிரதேசத்தில் தொழில் இல்லாததால் அவர்கள் வேறு இடங்களுக்கு சென்றுள்ளார்கள். இன்று நான் தனிமையிலிருக்கும் ஒரு தந்தை. நல்ல சுமுகமான காலம் வருமானால் எவ்வளவு

# ட்றை ஸ்டார் கம்பனி 16 தொழிற்சாலைகளை விற்றுத்தள்ளுகிறது

இலங்கையின் முக்கிய ஆடை உற்பத்தி ஏற்றுமதி கம்பனியான ட்றை ஸ்டார் கம்பனி, அதன் முப்பது தொழிற்சாலைகளில் 16 தொழிற்சாலைகளை விற்றுத்தள்ளிவிட நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஆடைக் கைத்தொழிற்சாலைகள் முகம் கொடுக்கும் சவால்களை எதிர் கொள்ளவும், ஏற்றுமதித் துறையில் முகம் கொடுக்கும் வர்த்தக சவால்களை எதிர்கொள்ளவும், இந்நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளதாக கம்பனியின் பேச்சாளர் பத்திரிகைகளுக்கு அறிவித்துள்ளார்.

கம்பனிப் பேச்சாளரின் கருத்துப்படி இந்த திட்டத்தின் இலக்குகள் இரண்டு:

1. மார்க் அன்ட் ஸ்பென்ஸர் போன்ற நீண்டகால வாடிக்கையாளர்களோடு இலாபகரமான கோட்டா இல்லாத சந்தையைத் தேடுதல்.

2. கம்பனியின் கீழ் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் நிர்வகிக்கக் கூடிய குறைந்த மட்டத்திற்கு கம்பனியின் பளுவைக் குறைத்தல்.

இதன்படி கம்பனி விற்றுத்தள்ள முடிவு செய்துள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எண்ணிக்கை 16 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நிக்கவரெட்டிய, பொல்பித்தகம, யப்பஹுவ, கல்கமுவை, கம்புறுபிட்டிய, அம்பலந்தொட்ட, பண்டாரவலை, பதுளை, அப்புத்தளை, வெலிமடை, ஹஸலக, கிரந்துர, கோட்டே, நில்வள, கேகிந்தூர, மல்வத்த, மாவத்தகம போன்ற முக்கிய இடங்களில் உள்ள தொழிற்சாலைகளே விற்றுத்தள்ளப்பட உள்ளன.

திறமையும், அனுபவமும் கொண்ட ஊழியர் படையையும், நவீன இயந்திர சாதனங்களையும் கொண்ட பக்டரிககள் எனக் குறிப்பிடப்படும் இந்த ட்றை ஸ்டார் பக்டரிகளைக் கொள்வனவு செய்ய புதிய முதலாளிகளை அக்கறை காட்டச் செய்வதில் முதலீட்டுச் சபை ஈடுபட்டுள்ளது. அத்தோடு புதிய முதலாளிகளுக்கு இந்தத் தொழிற்சாலைகளின் உற்பத்திகளுக்கு கோட்டா பெற்றுக்கொடுக்கவும், இந்த முதலீட்டுச் சபை மூலம் திட்டம் தீட்டப் பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த ட்றைஸ்டார் கம்பனிகள் கோடிக்கணக்கான ரூபா வங்கிக் கடன்களுடன் யூ.என்.பி. காலத்திலும், பின்னர் பொதுஜன முன்னணி [illegible] காலத்திலும் ஆரம்பிக்கப்பட்டவை. இவை கிராமப்புற வேலையின்மை பிரச்சனைக்கு தீர்வு காண எடுக்கப்பட்ட நடவடிக்கையாக ஆட்சியாளர்கள் கூறிக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

உண்மையில் இந்த பக்டரிகள் கிராமப்புற வறிய இளைஞர்களதும் யுவதிகளதும், உழைப்பை இரண்டு துட்டுச் சல்லிக்கு சுரண்டிக் கொள்ள செய்யப்பட்ட சதியின் ஒரு பாகமாகும். இலாபத்தை மூட்டைகட்டி இந்த ட்றைஸ்டார் முதலாளிகள் இப்போது "மறு சீரமைப்பு" என்ற பெயரில் தமது இலாப யுத்தத்தில் தலைகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். கோட்டா வெட்டு, உலக ஆடை உற்பத்தி சந்தையின் போட்டி காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடியில் இருந்து தலையெடுக்க வழிகாணும் வகையில், இந்த தொழிற்சாலை விற்பனையில் ஈடுபட்டுள்ளது.

கம்பனியின் பத்திரிகை அறிக்கையின்படி இந்த மறு சீரமைப்பிற்கு, பல காரணங்கள் உண்டு. அதற்கான ஒரு காரணம், கோட்டா இல்லாது போயுள்ளமை. ஜனவரி 31ம் திகதி டைம்ஸ் பத்திரிகையின்படி, இருந்து வந்த கோட்டாவினை பெற்றுக்கொள்ளவும், சலுகைகளைப் பெற்றுக்கொள்ளவும், கடந்த சில மாதங்களாக கம்பனி முயற்சி செய்த போதிலும் அது முடியாது போயுள்ளது.

அத்தோடு ட்றைஸ்டார் கம்பனி ஏழு மில்லியன் டாலர் கடன்களைக் கொண்டிருந்தது. இப்போது இதனை கம்பனி 5.5 மில்லியன் டாலர்களுக்கு குறைந்துள்ளது. இந்த நிலைமையில் பாக்கிக் கடன்களை கட்டித் தீர்க்கும்படி வங்கிகள் நெருக்குகின்றன. கம்பனி முதலாளிகள் பாக்கி வங்கி கடன்களை இந்த பக்டரிகளை விற்றுத் தள்ளுவதன் மூலமே செலுத்த உத்தரவாதம் வழங்கியுள்ளனர்.

ட்றை ஸ்டார் கம்பனியின் முதலாளியான குமார தேவபுர விற்றுத்தள்ளும் தொழிற்சாலைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் தொழில்களுக்கு உத்தரவாதம் அளிப்பதாக குறிப்பிட்டிருந்த போதிலும், அதன் பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன? இதைப்பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ட்றைஸ்டார் கம்பனியில் 60000 க்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இந்த மறுசீரமைப்புத்திட்டத்தின் கீழும் வேலை இழப்பு, வேலைப்பளு அதிகரிப்புக்கு பலியாகும் ஆபத்து அதிகரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதீய ஜனதா கட்சி அரசாங்கத்தின் பின்னணியில்

5ம் பக்கத் தொடர்ச்சி

## பொருளாதார, சமூக பதட்ட நிலையின் உக்கிரம்

இந்திய மத்திய அரசாங்கம் பெருகிவரும் அரச செலவினத்தை வெட்டி, 50 பில்லியன் ரூபாய்களைச் சேமிக்கும் ஒரு நடவடிக்கையாக உணவுப்பொருட்கள், உரம், சமையல் காஸ் விலையை 30 80வீதம் வரை அதிகரித்தது. இதன் காரணமாக ஏற்படும் விவசாய உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிப்பானது பொதுமக்களை சொல்லொணா கஷ்டத்துக்கு இட்டுச்செல்லும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

உணவுத் தானிய உற்பத்தி முன்னைய ஆண்டுகளில் 199.3மில்லியன் தொன்களாக இருந்தது. இது 1998ல் 194.1 மில்லியன் தொன்களாக 2.6வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது.1996 97 காலகட்டத்தில் 7.5வீதமாக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி 1997 98ல் 5.1வீதமாகக் குறைந்துள்ளது. இந்திய ரிசேர்வ் பாங்கின் ஆண்டறிக்கை இந்த விதத்தில் குறிப்பிடும் ஒரு நிலையிலேயே இந்த விலைவாசி உயர்வு அமுல்செய்யப்படுவதைக் காணலாம். அரசாங்கப் புள்ளிவிபரங்களின்படி 32 கோடி மக்கள் இந்தியாவில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டிருப்பது தெரிகின்றது. இத்தகைய தட்டினரின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரிக்கும் வகையில் தொழிலாளர், விவசாயிகள், வறிய இந்திய மக்கள் மீது இச்சுமை திணிக்கப்படுகின்றது. நிவாரண வெட்டுக் குறித்து பா.ஜ.க. அரசாங்கத்தினுள்ளேயே எதிர்ப்பு உருவாகும் நிலையில் பெப்பிரவரி 2ம் திகதி கூட்டணிக் கட்சியினருடன் பேச்சுவார்த்தை நடாத்தி, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு அரிசியை பழைய விலைக்கே வழங்க அரசாங்கம் தீர்மானித்தது.

அரசாங்கம் இவ்வாறு கூறிக் கொண்டாலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் யார் எனத் தீர்மானிப்பதும் அரசாங்கமே. ஆதலால் இந்த நிவாரணம் கிட்டும் என்ற நம்பிக்கை மக்களுக்கு கிஞ்சித்தும் கிடையாது.

நிதித் துறையை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குத் திறந்துவிடும் ஒரு நடவடிக்கையாக இந்தியக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை தனியார்துறைக்கு கையளிக்கும் சட்டம் ஒன்றை பா.ஜ.க. அரசாங்கம் காங்கிரஸ் முதலாளிகளின் அங்கீகாரத்துடன் சமீபத்தில் இயற்றியது. இவை எல்லாம் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் வர்த்தக, நிதிச் சந்தையில் அதிகாரம் பெறவும், உழைப்பை மலிவாகச் சுரண்டிக் கொள்ளவுமேயாகும்.

## சமூகக் குமுறல்

தொழில், வாழ்க்கைத் தர உரிமைகளுக்கு எதிராகத் தொடர்ந்துவரும் தாக்குதல்கள் காரணமாக இந்தியாவில் சமூகக் குமுறல்கள பல்வேறு மட்டத்திலும் எதிர்ப்புக்களாக வெடித்தெழுந்துள்ளன. இரண்டு இந்திய ஸ்டாலினிசக் கட்சிகளும் பல தொழிற்சங்கங்களும் கடந்த டிசம்பர் 10ம் திகதி ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம், மறியல் போராட்டங்களை நடாத்தத் தள்ளப்பட்டன. இரண்டு காப்புறுதிக் கூட்டுத்தாபனங்களையும் சேர்ந்த 190000 ஊழியர்கள் டிசம்பர் 15ம் திகதி பரந்த வேலை நிறுத்தம் ஒன்றில் இறங்கியதன் மூலம் தமது எதிர்ப்பைக் காட்டிக் கொண்டனர். தனியார்மயமாக்கத்துக்கு சுமார் 10000 உயர் அதிகாரிகளே ஆதரவு காட்டிக் கொண்டனர்.

ஜனவரி 12ம் திகதி 10 இலட்சத்துக்கும் அதிகமான வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதால் பங்குச் சந்தை தவிர்ந்த வர்த்தகச் சந்தைத் தொடர்புகள் ஸ்தம்பித்துப் போயின.20 வீத சம்பள உயர்வு கோரிப் போராடிய தொழிலாளர்களுக்கு 8வீதத்துக்கு அதிகமாக சம்பள உயர்வு வழங்க முடியாதென நிர்வாகம் மறுத்ததே அவர்களை வேலைநிறுத்தத்தில் இறங்கச் செய்தது.

உத்தரப் பிரதேசத்தில் 90000 மின்சாரசபை ஊழியர் கடந்த பெப்பிரவரி 8ம் திகதி தொடக்கம் பிரமாண்டமான ஒரு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். தனியார்மயமாக்கல் தயாரிப்புக்களுக்கு இணங்க மாநில அரசாங்கம் மாநில மின்சார சபையை இரண்டு கூட்டுத்தாபனங்களாக்க எடுத்த முயற்சிக்கு எதிராகவே இந்த வேலைநிறுத்தம் வெடித்தது.

அன்றைய தினம் விவசாயிகளும் வர்த்தகர்களும் நடாத்திய வேலைநிறுத்தத்தினால் இந்தியாவின் பெரும் வெண்காய சந்தை ஸ்தம்பிதம் கண்டுபோயிற்று. உர விலை உயர்வு உட்பட்ட உற்பத்திச் செலவுகள் அதிகரித்த நிலையினால் வெண்காய விலை வீழ்ச்சிக்கு எதிராக இந்த எதிர்ப்பு வெடித்தது. நார்ஷிக்கிலுள்ள வெண்காய சந்தை, ஏற்றுமதித் தடைக்கு எதிராக பெப்பிரவரி 11ம் திகதியும் இரண்டாவது நாளாக மூடப்பட்டுக் கிடந்ததாக அறிக்கைகள் கூறுகின்றன.

இந்திய ஆடை ஏற்றுமதிகளில் ரூபா.300 மில்லியன் மதிப்புள்ள கோட்டா காலவதியாகி பல்வேறு ஐரோப்பிய துறைமுகங்களில் தேங்கிக் கிடப்பதாக பெப்பிரவரி 5ம் திகதி கிடைத்த தகவல்கள் கூறுகின்றன.

## பேரினவாதத் தூண்டுதல்கள்

பா.ஜ.க..அரசாங்கம் மக்களின் கவனத்தை சமூகக் குமுறல்களில் இருந்து திசை திருப்பும் பொருட்டு பொதுமக்களின் உரிமைகளுக்கு எதிரான தாக்குதல்களை வேண்டும் என்றே இன, மத ரீதியில் பேரினவாத அடிப்படையில் தூண்டிவிட்டுக் கொண்டுள்ளது. சிறப்பாக சிவசேனா, ஆர்.எஸ்.எஸ். போன்ற பா.ஜ.க.சகாக்கள் இவற்றில் முக்கிய பாத்திரம் வகிக்கின்றனர்.

நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள பாகிஸ்தான் அரசாங்கத்துடன் காஷ்மீர் பிரச்சினை தொடர்பான பேரினவாதத்தைத் தூண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ள பா.ஜ.க. அரசாங்கத் தலைவர்கள், எல்லைப் போர்களில் பொதுமக்களைக் கொன்றுதள்ளும் போர்வெறி கொண்ட பேச்சுவார்த்தை களையும் இராணுவப் பயிற்சிகளையும் ஆரம்பித்துள்ளனர். அண்மையில் லாகூர் பஸ் பயணத்தில் ஈடுபட்ட வாஜ்பாய், நவாப் ஷெரீபுடன் பேச்சுவார்த்தை நடாத்திய இரண்டு நாட்களுள் ஜம்மு காஷ்மீர் வன்முறைகளும் கொலைகளும் இந்தியப் பாதுகாப்புப் படையினருக்கும் முஸ்லீம் போராளிகளுக்கும் இடையில் ஏற்பட்டது. செய்திகளின்படி இது 22ல் இருந்து 31 ஆக அதிகரித்தது.


பா.ஜ.க.கூட்டாளிகளான வலதுசாரி பாசிசக் கன்னைகளால் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைத் தாக்குதல்கள் கடந்த சில மாதங்களாகக் கட்டவிழ்த்து விடப்பட்டது. இவற்றுக்கு எதிராக ஊர்வலம் நடாத்தி தமது எதிர்ப்பைத் தெரிவிக்க இந்தியத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் அணிதிரண்டுள்ளனர். முதலாளித்துவ அரசுக்கு எதிரான பொதுஜன எதிர்ப்பு இந்த விதத்தில் வெளிப்பட்டுள்ளது.

குஜராத்தில் கிறிஸ்தவ எதிர்ப்புத் தாக்குதலை முன்னெடுத்த பஜ்ரால்தால் என்பன "முதலில் முஸ்லீம் பின்னர் கிறிஸ்தவர்கள்" என்ற சுலோகத்துடன் வீதிகளில் இறங்கிய போது பா.ஜ.க.வை பெரும்பான்மையினராகக் கொண்ட குஜராத் மாநில அரசாங்கம் இந்த மதக் குழுக்களது ஆத்திரமூட்டல் கூட்டங்களுக்கும் ஊர்வலங்களுக்கும் அனுமதி வழங்கியிருந்தது.1964 96 வரை 38 கிறிஸ்தவர்களை துன்புறுத்தியதுடன், 1997ல் 15 பேரையும் 1998ல் 38 பேரையும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கியதாகத் தெரிகின்றது. கடந்த ஆண்டில் 20 மதகுருமார், கன்னியாஸ்திரிகள் கொலையுண்டனர். ஆலயங்கள், கிறிஸ்தவர்களின் வீடுகள், தீக்கிரையாகின.குஜராத்தில் விஸ்வ ஹிந்து பரிஷாத் இதனை நடாத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனவரி 29ம் திகதி ஒரிசாவில் பஜ்ரால்தால் அவுஸ்திரேலிய கிறிஸ்தவ மிஷனரியைச் சேர்ந்த போதகரையும் அவரது இரண்டு மகள்களையும் உயிரோடு வாகனத்தில் வைத்து தீயிட்டுக் கொழுத்தியது. இது பற்றிய எதிர்ப்பு வெடித்து எழுந்த போது கொலையாளிகளைப் பாதுகாக்க முன்வந்த பா.ஜ.க.தலைவர் அத்வானி கூறியதாவது: "நான் அந்த அமைப்பைப் பற்றி நன்கு அறிவேன். குற்றச் செயல்களில் ஈடுபட்ட வரலாறு அதற்குக் கிடையாது" எனக் கூறியுள்ளார்.

முஸ்லீம்களுக்கு எதிரான மதவாதத் தாக்குதல் இந்த அரசாங்கத்தின் கீழ் தொடர்ந்து இடம்பெறும் என்பது இரகசியம் அல்ல. பாகிஸ்தான் கிரிக்கெட் குழுவின் விஜயத்தைத் தடுக்க சிவசேனை ஆத்திரமூட்டல்களில் இறங்கியது. மும்பாயிலுள்ள கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை தலைமை அலுவலகத்தை தாக்கியதோடு கிரிக்கட் மைதானத்தையும் தோண்டியுள்ளனர். மகாராஷ்டிர சிவசேனை அமைப்பாளரான மாநில அரச தலைவர் லால் தக்காரே இதில் முக்கிய பங்கெடுத்ததாகத் தெரிகின்றது.

பயர் (Fire) என்ற திரைப் படத்தைத் திரையிட்டதற்கு எதிராக இந்த மதவாதிகள் ஆத்திரமூட்டல்களில் இறங்கினர். தியேட்டர்களுக்குத் தீமூட்டினர்.1998 நவம்பர் 17ம் திகதி உத்தர பிரதேச மாநிலக் கல்வி அமைச்சர் ரவீந்திர சுக்ளா "வந்தே மாதரம்" என்ற தேசிய கீதத்தினை பாடசாலைகளில் இசைப்பது கட்டாயமாக்கப்பட வேண்டும் எனக் கட்டளையிட்டுள்ளார்.



இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் சீபீ(எம்) தலைவர் ஜோதி பாசுவும்

தேசிய, இனவாதக் கூச்சலுடன் சிவசேனை, பா.ஜ.க.அமைப்பு மகாராஷ்டிரத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் தனது அதிகாரத்தைப் பிரயோகித்த மாநில முதல் அமைச்சரான மனோகர் ஜோதி இராஜினாமாச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டார். இந்திய மத்திய அரசாங்க சுற்றுலாத் துறை அமைச்சர் மதன்லால் புரானா "கிறிஸ்தவருக்கு எதிரான தாக்குதலுக்கு எதிராக எதிர்ப்புத் தெரிவிக்க கட்சி ஜனநாயக ரீதியில் அனுமதிக்கவில்லை" எனக் கூறி இராஜினாமாச் செய்துள்ளார். கட்சிக்குள் பேரினவாதப் போக்குடன் செயற்படும் பா.ஜ.க.நாட்டில் மக்களுக்கு எதிரான வன்முறைகளிற்கு எந்த அளவு துணைநிற்கின்றது என்பதை இச்சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

பேரினவாதிகளுடன் சேர்ந்து தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு சாவுமணியடிக்கும் முதலாளித்துவ. வலதுசாரி பா.ஜ.க., ஆட்சிக்கு எந்த விதத்திலும் குறையாத வகையில் தனது கரத்தைப் பலப்படுத்தவும் பொதுமக்கள் மீது பாய்ச்சல் நடாத்தவும் ஆயத்தமாகி வரும் இந்திய காங்கிரஸ் கட்சியாளர்களின் போக்கு. சோனியா காந்தியின் நடவடிக்கைகள் மூலம் வெளிப்பாடாகியுள்ளது.

## கீழ்த்தரமான மூன்றாவது கூட்டணி

வெடித்தெழும் சமூகப் பதட்ட நிலைமையை மேலும் உக்கிரமாக்க காங்கிரஸ் கட்சித் தலைமைக்கு அரசாங்கம் அமைக்கும் வகையில் "அந்தந்தக்கால பிரச்சினைகளில் ஆதரவளிக்கத் தாம் தயார்" என சீ.பீ.ஐ.(எம்) கம்யூனிஸ்ட் கட்சி சமிக்கை காட்டிக் கொண்டுள்ளது. கடந்த டிசம்பர் இரண்டாவது வாரத்தில் இடம்பெற்ற கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் மற்றொரு மூன்றாவது கூட்டணியை அமைத்து பொதுமக்களின் நம்பிக்கையை முதலாளித்துவ கட்சிகளின் பக்கம் ஈர்க்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டம் இதன் மூலம் வெளிப்பாடாகியுள்ளது.

இன, மத வன்முறைகளுக்கு மட்டும் அல்லாது சாதி ஒடுக்குமுறைகளுக்கும் இடமளிக்க பா.ஜ.க.ஆட்சி அண்மையில் பீஹாரில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த 12 பேரைப் படுகொலை செய்த நிலச்சுவாந்தர் அமைப்பான "ரண்வின் சேனா" இயக்கம் அமைக்கப்பட முன்னர் அங்கீகாரம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலக வங்கி சமீபத்தில் வெளியிட்ட ஒரு அறிக்கையின் படி இந்தியாவில் வறுமை 1950ல் 45வீதமாக இருந்தது. 1993 94ல் 36வீதமாகக் குறைந்தாலும் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் இது 164 மில்லியன்களில் இருந்து 320 மில்லியன்களாக அதிகரித்துள்ளது. பொதுமக்கள் சேவையைச் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் இவர்களின் உற்பத்திச் சக்தியை அதிகரிக்கச் செய்யலாம் என உலக வங்கி அதிபர் வோல்டர் தெரிவித்துள்ளார். பா.ஜ.க. அரசாங்கம் உட்பட்ட முதலாளித்துவ பேரினவாத சக்திகளின் நெருக்கடி உக்கிரம் கண்டுள்ள ஒரு நிலையில் வெடித்தெழும் சமூகப் பதட்ட நிலையும் இந்த வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்பவர்களுடன் இன்னும் பல கோடிக்கணக்கானோர் இணைந்து கொள்ளும் ஒரு நிலையும் தாக்குதல்கள் மேலும் தொடர உள்ளதை எடுத்துக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் தேர்தல் மோசடியின் கீழ்...

1ம் பக்கத் தொடர்ச்சி

கிராமங்களில் சுமார் ஒரு இலட்சம் இளைஞர்களை அரச படை அணிகளையும் குண்டர்களையும் கொண்டும் படுகொலை செய்த ஒரு நிலைமையிலேயே முன்னெடுக்கப்பட்டது.

## சோ.ச.க. நிலைப்பாடு

இந்திய இலங்கை உடன்படிக்கையையும் அதன் கீழ் அமைக்கப்பட்ட மாகாண சபைகளையும் நிராகரிக்கும்படி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அன்று வேண்டிக் கொண்டது. அதற்குக் காரணம், இதன் ஜனநாயக எதிர்ப்பு பிற்போக்கு உள்ளடக்கத்தை பு.க.க. கவனத்தில் எடுத்ததேயாகும். இந்தப் பிற்போக்கு திட்டத்திற்கு எதிராக சிங்கள, தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை ஜனநாயக ரீதியில் சமத்துவத்தின் அடிப்படையில் ஒன்றிணைக்கும் இலங்கை ஈழம் சோசலிசக் குடியரசு ஒன்றியத்தை அமைப்பதற்குப் போராடுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டியது. அத்தோடு பு.க.க. இந்தப் போராட்டத்தினை அனைத்துலக சோசலிசத்துக்கான போராட்டத்தின் ஒரு பாகமாகவும் இந்தியத் துணைக்கண்டத்தின் பிற்போக்கு ஆட்சியாளர்களைத் தூக்கிவீசி, துணைக்கண்டத்தில் சோசலிசக் குடியரசு ஒன்றியத்தை ஸ்தாபிதம் செய்யும் ஒரு போராட்டமாக முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியது.

கடந்து சென்ற காலப்பகுதியின் தினசரி நிகழ்வுகளும் இந்த வேலைத்திட்டத்துக்குப் போராடவேண்டியதன் பிரமாண்டமான அவசியத்தை நிரூபித்தன. ஆதலால் பு.க.க.வின் கொள்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்கும் அமைப்பான சோசலிச சமத்துவக் கட்சி, மாகாண சபைத் தேர்தல்களை நிராகரிக்கும்படியும் முதலாளித்துவத்தில் இருந்து அரசியல் ரீதியில் சுயாதீனமான தொழிலாளர் வர்க்க வேலைத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு போராடும் சோசலிச வெகுஜன இயக்கத்தைக் கட்டியெழுப்ப எம்முடன் இணையும்படியும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை வேண்டுகின்றது. முதலாளித்துவ அமைப்பின் கீழ் ஜனநாயகத்தை ஸ்தாபிதம் செய்வதும் மாகாண சபைகள் மூலம் ஜனநாயகத்தைக் காப்பதும் முதலாளித்துவக் கட்சிகளதும் அவற்றின் கையாட்கள் சிருஷ்டிக்கும் நப்பாசைகளில் நம்பிக்கை வைப்பதும் ஆபத்தானது.

வன்முறைகளைப் பாவித்து வாக்கு கொள்ளையில் ஈடுபட்டு பொதுஜன முன்னணி வடமேற்கு மாகாணத்தில் மாகாண சபையைக் கைப்பற்றியதன் பின்னர் அதே அரசாங்கத்தினது ஜனாதிபதியின் தலைமையில் எஞ்சியுள்ள மாகாண சபைகளின் தேர்தலை ஜனநாயக ரீதியில் நடாத்துவதை உத்தரவாதம் செய்யும் அனைத்துக் கட்சிகளின் தேர்தல் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது! இது வடமேற்கு மாகாண சபைத் தேர்தல் மோசடிகள் உலகப் பிரசித்தி பெற்றுள்ள ஒரு நிலைமையில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் மற்றும் கட்சிகளின் கைகளில் அரசாங்கம் சார்பாக வெள்ளை துணி கட்டும் நடவடிக்கை மட்டுமல்லாது, அரசாங்கமும் மற்றும் முதலாளித்துவக் கட்சிகளும் ஜனநாயகத்தைக் காக்க சபதம் செய்து கொண்டுள்ளதாக பொதுமக்களின் கண்களில் மண் தூவும் ஒரு நடவடிக்கையாகும்.

பெப்பிரவரி 25ம் திகதி ஜனாதிபதியின் தலைமையில் கூடிய கட்சிகள், தேர்தல் கண்காணிப்புக் குழுவை நிறுவி, மார்ச் 4ம் திகதி அதன் முதல் கூட்டம் அலரிமாளிகையிலும் நடந்தேறியது. இந்தக் கமிட்டி ஒழுங்காகக் கூட வேண்டும் என முடிவெடுக்கப்பட்டதோடு, அதற்கான தலைமை அலுவலகமாக பிரதமரின் அலுவலகம் தெரிந்தெடுக்கப்பட்டது. இந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் இப்போது "ஜனநாயகத்தை இறுக்கமாக்கும்" நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடி வருவதாகச் சொல்லப்படுகின்றது. வன்முறைகளுக்கான ஒரு காரணமாக தேர்தல் வேட்பாளர்களின் சுவரொட்டிகளும் பதாகைகளும் இருந்து கொண்டுள்ளதால், கட்சி பிரதிநிதிகள் அவற்றை 72 மணித்தியாலங்களுள் அப்புறப்படுத்தாது போனால் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டதாக உஜாருடன் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்கான வசதிகள் அவசியம் என ஜே.வீ.பி.பிரதிநிதி விடுத்த கோரிக்கை அத்தருணத்திலேயே நிறைவேற்றி வைக்கப்பட்டது. ஜனாதிபதி அதற்காக ஒரு தொலைபேசியை ஒதுக்கிக் கொடுத்தார்., கட்சிச் சார்பற்ற முறையில் செயற்படுமாறு ஜனாதிபதி பொலிசாருக்கு கட்டளை யிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டதோடு தேர்தல் விதிகளை மீறுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவும் சபதம் செய்துள்ளார்.

## பிற்போக்குக் கூட்டு

பொதுஜன முன்னணி அரசாங்கத்தையும் யூ.என்.பி.காரர்களையும் சேர்த்துக்கொண்டு அவர்களுடன் சுற்றிச் சுழன்றுவரும் இந்த முழு நடவடிக்கையும் ஒரு விதத்தில் "கெடுதிகளை கட்டுப்படுத்தும்" நடவடிக்கையாகும். வடமேற்கு மாகாணத்தின் அப்பட்டமான வாக்கு கொள்ளையடிப்பும், வன்முறைகளும் முதலாளித்துவ தேர்தல், நிர்வாக அமைப்புக்கள் தொடர்பாக மக்களின் நம்பிக்கையைச் சிதறுண்டு போகச் செய்யும் என மேற்கத்தைய நாடுகளின் தூதரகங்களும் இலங்கை முதலாளிகளின் நனவான பகுதியினரும் உடனடியாக எச்சரிக்கை செய்ததோடு, அச்சம் தெரிவிக்கும் அறிக்கைகளையும் வெளியிட்டனர். அவர்கள் அப்படிச் செய்ததற்குக் காரணம் அவர்களுக்கு ஜனநாயகத்தின் பேரில் இருந்துவந்த அக்கறை அல்ல. அவை முதலாளித்துவ நிர்வாக நிறுவனங்களின் பேரிலான பொதுமக்களின் நம்பிக்கையை துடிக்கத் துடிக்கச் சிதறுண்டு போகச் செய்யவும் சமூகக் குமுறல்களை துரிதப்படுத்த அவை இடமளிக்கும் என்பதையிட்டும் அவர்களுக்கு இருந்துவந்த அச்சமே காரணமாகும்.

"தேர்தல் விசாரணைக் கமிட்டி"யின் நடவடிக்கைகள் மற்றொரு விடயத்தையும் அம்பலமாக்கிக் கொண்டுள்ளது. மேற்கத்தைய அரசாங்கங்களும் இலங்கை வர்த்தக சபையும் இந்தச் சகல முதலாளித்துவ, முதலாளித்துவச் சார்பு கட்சிகளும் "சமரசத்துடன் ஆட்சியை முன்னெடுக்க" ஒரு கூட்டினை உருவாக்கிக் கொள்ளும்படி செய்யும் நெருக்குவாரங்கள் கடந்த சில மாதங்களாக உக்கிரம் கண்டுள்ளது. தேர்தல் விசாரணைக் கமிட்டி அத்தகைய கூட்டின் ஒரு வடிவமாகும்.

தேர்தல் சட்டங்களை மீறாதது பற்றிய தீர்ப்புக்கள் எனச் சொல்லப்படுபவை அப்படியே இருந்து கொண்டிருக்கையில் பொதுஜன முன்னணி, யூ.என்.பி. வன்முறை மோதுதல்கள் வளர்ச்சிகண்டு வருகின்றன. மார்ச் முதல் வாரத்திலேயே அத்தகைய 30 மோதுதல்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிசார் அறிவித்தனர். பொதுஜன முன்னணி குண்டர்கள் கம்பளையில் யூ.என்.பி. கூட்டத்துக்குச் சென்று கொண்டிருந்த மக்கள் மீது தாக்குதல் நடாத்தியதால் மோதுதல் உருவானது. அத்தோடு களனி ஜே.வீ.பி.தேர்தல் அலுவலகத்தின் மீது தாக்குதலை ஏற்பாடு செய்தவர் பொதுஜன முன்னணியின் கம்பஹா மாவட்ட எம்.பி.யான ஜினதாச நந்தசேனவும் அவரின் மகனும் எனக் கூறப்படுகின்றது. அத்தோடு ஜே.வீ.பி., யூ.என்.பி. மகளிர்களுக்கு எதிரான தாக்குதலும் இடம்பெற்றுள்ளது. பிரமாண்டமான காடைத்தனங்களையும் வாக்கு கொள்ளைகளையும் "கட்டுப்பாட்டுக்குள் கொணரும்" வழிவகைகள் இருக்கையிலேயே இங்ஙனம் இடம்பெறுவதானது தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக பொதுஜன முன்னணி [illegible] கொண்டுள்ள காடையர் இயக்கம் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் களத்தில் இறங்கும் தயாரிப்பு இருந்து கொண்டுள்ளதைக் காட்டிக் கொண்டுள்ளது.

பொதுஜன முன்னணியின் காடைத்தனங்கள் இடம்பெறுமானால் அவற்றுக்கு எதிராக தமது காடைத்தனங்களைக் கையாளத் தாம் தயாராக இருந்து கொண்டுள்ளதாக யூ.என்.பி.காரர்கள் சமிக்கை செய்துள்ளனர். இதே சமயம் தேர்தல் நடைபெறும் மாகாணங்களில் ஜனநாயகத்தைக் காக்கும் பெயரில் பொதுமக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். பொதுஜன முன்னணியைப் போலவே யூ.என்.பி.காரர்களும் எதிர்வரும் பொதுத் தேர்தல் மூலமும் ஜனாதிபதித் தேர்தல் மூலமும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் ஒரு மேடையாக மாகாண சபைத் தேர்தலைப் பாவித்துக் கொண்டுள்ளனர்; பந்தயம் பிடித்துக் கொண்டுள்ளனர்.

1987 இந்திய இலங்கை உடன்படிக்கைக்கும் அதன் மூலம் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபைகளுக்கும் எதிராக சிங்கள இனவாதக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருந்த ஜே.வீ.பி.காரர்கள் "ஜனநாயக நீரோட்டத்தில் இணையும்" பேரில் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றார்கள். ஏனைய முதலாளித்துவக் கட்சிகளுடன் கைகோர்த்துக் கொள்ள ஜே.வீ.பி.க்கு இருந்துவரும் தயார்நிலையை ஜே.வீ.பி. தலைவர்களில் ஒருவரான விமல் வீரவங்ச கமிட்டியைப் பற்றித் தெரிவித்துள்ள இரட்டை அர்த்தமுள்ள பேச்சு அம்பலமாக்கிக் கொண்டுள்ளது: "நாம் அதில் கலந்து கொள்வது இங்கு ஏதேனும் ஒரு மோசடியான முயற்சி இருக்குமானால் அதை அம்பலப்படுத்தவும் நிஜமான முயற்சியானால் அதற்கு எமது தரப்பில் செய்ய வேண்டிய தலையீட்டை மேற்கொள்ளும் நோக்கத்துடனாகும்." (யுக்திய பெப்பிரவரி 28, 1999)

நவ சமசமாஜக் கட்சியின் தலைவரான விக்கிரமபாகு கருணாரத்ன இன்னும் ஒரு படி முன்னே சென்று பொதுஜன முன்னணி அரசாங்கத்தையும் முதலாளி வர்க்கத்தையும் "வளைத்துக் கொள்ள" சாத்தியம் இருப்பதாகக் காட்ட பின்வருமாறு கூறியிருந்தார்: தாம் ஜனநாயகவாதிகள் எனக் காட்ட அரசாங்கம் எடுக்கும் முயற்சி இதுவாகும். அத்தகைய ஒரு நிலை நாம் நடாத்திய பிரச்சாரத்தினாலேயே உருவாகியுள்ளது. இந்த நிலைமை உருவாகியதும் ஒரு வெற்றியாகும். புதிதாக வன்முறைகளில் ஈடுபடாமல் இந்த நிலைமையைத் தொடர்ந்து கடைப்பிடித்தால் தேர்தலை நடாத்த முடியும்." (யுக்திய பெப்பிரவரி 28, 1999)

நவ சமசமாஜக் கட்சி தலைமையிலான புதிய இடதுசாரி முன்னணியும் ஜே.வீ.பி.யும் ஏகாதிபத்தியவாதிகளதும் இலங்கை முதலாளித்துவ எஜமானர்களதும் ஆலோசனையின் பேரில் "கெடுதியைக் கட்டுப்படுத்தும்" "சமரசத்தின் மூலம் கட்டுப்படுத்தும்" விசாரணைகளில் இறங்கும் நடவடிக்கைகளில் பொதுஜன முன்னணியுடனும் யூ.என்.பி.யுடனும் அணிதிரண்டு கொண்டுள்ளது. அத்தோடு இவர்கள் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு "ஜனநாயகத்தைக் காக்கும்" பேரில் முதலாளிகளுக்கு மேலும் மேலும் நெருக்குவாரம் தருவதில் ஈடுபடுமாறு கூறிக் கொள்கின்றார்கள்.

ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ அரசியலினுள் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக போரில் ஈடுபட்டுள்ளனர். சப்பிரகமுவ மாகாண சபையின் எதிர்கால முதலமைச்சர் பதவிக்கான எதிர்பார்ப்பில் சமசமாஜ தலைவரும் பிரதி அமைச்சருமான அத்தாவுத செனவிரத்ன அக்கட்சியில் இருந்து விலகி, சி.ல.சு.க.வில் சேர்ந்துகொள்ள விண்ணப்பித்துக் கொண்டுள்ளார். அவர் சமசமாஜத் தலைவரான பட்டி வீரக்கோன் கட்சிச் செயலாளர் பதவிக்கும் அமைச்சர் பதவிக்கும் [illegible] அலையும் விதத்தை அம்பலப்படுத்தும் இராஜினாமாக் கடிதத்தை பத்திரிகைகளுக்கு அனுப்பியதைத் தொடர்ந்தே இராஜினாமாச் செய்துள்ளார். இதற்கிடையே கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்தினுள் தமது பங்கினை கூட்டிக் கொள்ளும் வகையில் சமசமாஜக் கட்சியுடன் இணையும் தமது பிரேரணையைப் புதுப்பித்துக் கொண்டுள்ளனர்.

## ஜனநாயக உரிமைகளைப் பிடுங்கிக் கொள்ளும் நிபந்தனைகள்

பொதுஜன முன்னணி அரசாங்கத்துடனும் யூ.என்.பி.யுடனும் இணைந்து கொண்டுள்ள ஏனைய கட்சிகளும் ஜனநாயகத்தைக் காக்க முதலாளி வர்க்கத்துக்கு இருந்துகொண்டுள்ள வல்லமையையிட்டு வாயடித்துக் கொள்கின்றார்கள். இதனை அவர்கள் ஜனநாயக உரிமைகளை படுமோசமான முறையில் பிடுங்கிக் கொள்ள பொதுஜன முன்னணி தள்ளப்பட்டுள்ள ஒரு நிலையிலும், செயற்பட்டுக் கொண்டுள்ள ஒரு நிலையிலுமே செய்கின்றனர்.

உலக முதலாளித்துவத்தில் படுமோசமான வெடிப்புக்கான நிலைமைகள் உருவாகி வருகின்றது. ஜப்பான் உள்ளடங்கலான ஆசியாவினுள் பொருளாதார வீழ்ச்சி ஆழமாகி வருகின்றது. அமெரிக்காவின் பங்குமுதல் சந்தை வெடித்துச் சிதறுண்டு போகும் நிலைமைகள் உருவாகிவருவதாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. அமெரிக்க, ஐரோப்பிய ஏற்றுமதிகளுக்கு சுங்க வரி விதிப்பதன்மூலம் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் இருந்திராத படுமோசமான வர்த்தக யுத்தம் ஆரம்பமாகியுள்ளது. உலகப் பொருளாதார வீழ்ச்சியின் தாக்கம் இலங்கையின் தேயிலை, இறப்பர், தெங்கு ஏற்றுமதி அளவுகளிலும் விலைகளிலும் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு வாய்ப்பான நிலைமைகளைச் சிருஷ்டிக்கும் பொருட்டு சமூக நலன்புரிச் சேவைகளை வெட்டித் தள்ளுவதாலும் தனியார்மயமாக்கத்தினாலும் பொது மக்களின் வாழ்க்கைத் தரத்துக்கும் தொழில்களுக்கும் எதிரான தாக்குதல் உக்கிரம் கண்டு வருகின்றது. இனவாத யுத்தச் செலவினங்களால் நாட்டின் பொருளாதாரம் ஸ்தம்பித்துப் போய்க் கிடக்கின்றது. சம்பளம், சேவை நிலைமைகளைக் காக்கும் பொருட்டு தொழிலாளர்களிடையே வளர்ச்சி கண்டுவரும் கிளர்ச்சி நிலைமையை மார்ச் நடுப்பகுதியில் இடம்பெற்ற இலங்கை மின்சார சபை, டெலிகொம், வங்கிகள், அரசாங்க ஆஸ்பத்திரி தாதிமார் சேவைப் போராட்டங்கள் எடுத்துக் காட்டின. கிராமப்புற மக்களிடையேயும் கிளர்ச்சி நிலைமை வளர்ச்சி கண்டு வருகின்றது. இந்நிலைமையினுள் இலங்கையின் முதலாளி வர்க்கம் ஜனநாயகத்தைக் காப்பதாகக் கூறுவது பொதுமக்களை ஏமாற்றும் ஒரு மோசடி; பொய்யாகும். முதலாளித்துவ, முதலாளித்துவச் சார்பு கட்சிகளின் அணிதிரள்வானது ஜனநாயகத்தைக் காப்பதற்கு அல்ல; ஜனநாயக உரிமைகளை ஒழித்துக்கட்டித் தள்ளச் செய்யும் அணிதிரள்வாகும். இதன் பின்னணியில் சர்வாதிகார ஆட்சிக்கான நிலைமைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

## இனவாதப் பிளவுகளை ஆழமாக்குதல்

இந்த மாகாண சபைகள் ஜனநாயகம் காக்கும் நிறுவனங்கள் அல்ல. அந்த உரிமைகளை தட்டிப்பறிக்கும் அமைப்புக்களாக இவை இயங்குகின்றன. இவை இனவாதக் கோட்டின் ஊடாக இனங்களைப் பிளவுபடுத்துவதும் இனங்களை ஆளுக்காள் எதிரெதிராக நிறுத்துவதும் மேலும் ஆளமாக்கப்பட்டுள்ளது. "தாயகம்" காக்கும் பேரில் சிங்கள, தமிழ் தேசிய இனங்களை மோதவைக்கும் முதலாளி வர்க்கப் பொறிகள் இதன் மூலம் மேலும் மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷமூட்டப்பட்டு வருகின்றன. இவை இனவாத பிளவுகளுக்கு மேலும் வழிவகுத்துள்ளது. இஸ்லாம் மதத்தவரின் பெயரில் தனியான ஒரு குட்டி ஆட்சி அலகைக் கோர முஸ்லீம் முதலாளிகள் மேலும் ஊக்குவிக்கப்பட்டது. இந்த மாகாண சபைகளின் மூலமேயாகும். அவ்வாறே தோட்டத் துறையில் தமிழ் பேசும் தொழிலாளர்களை தனியொரு இனக்குழுவாகக் காட்டி அவர்களுக்கென "மலையகம்" கோரிக்கையை முன்தள்ள சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்ன்ணியும் புதிய ஜனநாயகக் கட்சி போன்ற மாஜி. மா ஓ வாதக் குழுக்களும் முன்னணிக்குப் பாய்ந்து கொண்டுள்ளன. தென்மாகாணத்திலும் இத்தகைய பிராந்தியப் போக்குக்களை வளர்ச்சி காணச் செய்ய முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ பகுதியினர் செயற்பட்டு வருகின்றனர். இவர்களின் நோக்கம், ஏகாதிபத்தியவாதிகளுடன் வெவ்வேறான கொடுக்கல் வாங்கல்களுக்கு செல்வதும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களைப் பிளவுபடுத்தி அவர்களை மூலதனத்தின் சர்வாதிகாரத்திற்கு கீழ்ப்பட்டவர்கள் ஆக்குவதுமேயாகும். இது தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களைப் பிளவுபடுத்த முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவக் குழுக்கள் கட்டவிழ்த்துவிட்டுள்ள படுபயங்கரமான அரசியல் குஷ்டரோகமாகும்.

விடயம் இத்துடன் நின்றுவிடவில்லை. இந்த மாகாணசபைகள் யூ.என்.பி. பொதுஜன முன்னணி முதலாளிகள் தமது கையாட்களுக்குச் சலுகைகள், வசதிவாய்ப்புக்கள் வழங்குவதற்கும் காடையர் ஆட்சிக் கும்பலைக் கட்டியெழுப்புவதற்குமான ஒரு குகையாக மாறியுள்ளது. பிராந்திய அதிகாரப் பரவலாக்கம் எனப்படுவதன் மூலம் பொதுமக்களுக்கு ஜனநாயகத்தை அவர்களின் வீட்டுப்படிகளுக்கே கொணர்வதாகக் காட்டும் யூ.என்.பி. பொதுஜன முன்னணிப் பிரச்சாரம் தம்மையே ஏழனம் செய்யும் ஒன்றாகும் என்பதை மக்கள் அன்றன்றாடைய அனுபவத்தின் மூலம் புரிந்து கொண்டுள்ளனர். உண்மையில் மாகாண சபைகள் என்ற பெயரில் அவர்கள் மேலும் மேலும் சுமைகளை மக்கள் மீது திணிக்கின்றார்கள்.

சிங்கள, தமிழ் தேசிய இனங்கள் இரண்டையும் சேர்ந்த தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் இளைஞர்களும் ஜனநாயக ரீதியில் ஐக்கியப்படுத்தப்படுவதும், தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுவதும், இலாபம் கறக்கும் ஒரு அமைப்பின் கீழ் அல்லாமல் பொதுமக்களின் உரிமைகளைக் காப்பதும் நவீன உற்பத்திச் சாதனங்களின் பூரண பலனைக் கலாச்சார அபிவிருத்திக்காக பெற்றுத் தருகின்றதுமான ஒரு ஆட்சி முறையின் உள்ளேயேயாகும். அதற்காக அவர்களின் அரசாங்கத்தை தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்வது அவசியம். அத்தகைய ஒரு அரசாங்கம் தொழிலாளர், ஏழைகளினை பிரதிநிதித்துவம் செய்யும் சபைகளையும் தொழிலாளர் நடவடிக்கைக் குழுக்கள் அல்லது சோவியத்துக்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

சோசலிச சமத்துவக் கட்சி அந்த வேலைத்திட்டத்தினையே முன்வைக்கின்றது. வர்க்க நனவுபடைத்த, சிந்திக்கும் ஆற்றல் கொண்ட சகலரையும் நாம் அந்த வேலைத்திட்டத்துக்காகப் போராட அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சியில் சேரும்படி வேண்டுகின்றோம்.

# உயர்நீதிமன்றத்தின் மூன்று ,தீர்ப்புகள்....

3ம் பக்கத் தொடர்ச்சி

அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொள்வதற்காக நடாத்தும் சதிகார வேலைத்திட்டத்தைப் பூசிமெழுகுவதற்கு நீதிமன்றம் முன்வந்துள்ள விதம் இங்கு எதுவிதமான சந்தேகத்துக்கும் இடமற்ற முறையில் அம்பலமாகியுள்ளது.

உயர்நீதிமன்றம் நிராகரித்த போதிலும் பொலிசார் தொழிற்படும் விதத்தைப் பொலிஸ் மா அதிபர் எடுத்துக் கூறியுள்ளார். அதாவது, பெயர் குறிப்பிடப்படாத உளவாழிகள் ஆட்சியாளர்களின் எதிர்ப்பாளர்களைப் பலியெடுத்து தொழிற்பட்டு வந்துள்ளார்கள் என்பது தெளிவாகியுள்ளது. அது மட்டுமன்றி இந்த அரசியல் அலுகோசுகள் அன்றும் சரி இன்றும் சரி மாற்றம் காணாததோடு, பொதுஜன முன்னணி அரசாங்கம் அது ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் ஒரு தசாப்த காலத்துக்கும் மேலான காலம் யூ.என்.பி.கையாண்ட ஆட்களையே அந்தப் பணிக்குக் கையாண்டு கொண்டுள்ளது. இதை பொலிஸ் மா அதிபர் சத்தியப்பிரமாணம் செய்து கூறி வைத்துள்ளார். 15 வருடகால "நம்பிக்கைக்குரிய உளவாழி" என்பதன் அர்த்தம் அதுதான். பொலிஸ் மா அதிபர்கள் மாறியுள்ளார்கள். ஆனால் உளவுச் சேவையும் ஒடுக்குமுறை நடவடிக்கைகளும் எந்தவிதமான தடையும் இல்லாமல் நீடித்து வருகின்றது. எம்பிலிப்பிட்டிக் கொலையாளிகள் பலருக்கு 10 வருடகால சிறைத்தண்டனை விதித்ததன் மூலம் பூசி மெழுகப்பட்ட கொலைக் குழிகளின் நிர்வாணக் கோலம் நீண்டுவருகின்றது.

உளவாழிகள் இருக்கவில்லை என்பதை பொதுமக்களுக்கு புரியவைக்க மக்கள் விரோத நீதிமன்றம் முயற்சிப்பது, பொதுஜன முன்னணி சார்பு இடதுசாரி வேஷதாரிகளின் அடிமை மனோபாவத்தை திருப்திப்படுத்தவும் பொதுமக்களைத் தவறான வழியில் இட்டுச் செல்லவுமேயாகும். அனுர பண்டாரநாயக்க ஜனாதிபதியின் சகோதரராகவும் யூ.என்.பி.பிரமுகராகவும் இருப்பதைக் கணக்கில் எடுக்காது, அரச உளவுச் சேவையை கட்டவிழ்த்துவிட்டு, சட்டவிரோத முற்றுகைகளை நடாத்தி, பொதுஜன முன்னணி அரசாங்கம் பொலிஸ் இராணுவ அரசுக்குச் சாமரை வீசும் வேலைத்திட்டத்தின் ஆபத்தையும் பொதுமக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஒரே வயிற்றில் சூல் கொண்டு பிறந்த யூ.என்.பி.யை பொதுஜன முன்னணி இந்த இலட்சணத்தில் கணிக்குமானால் எம்மை எப்படி நடாத்தும்? மக்கள் இன்று எழுப்ப வேண்டிய முக்கிய கேள்வி இதுதான். இதில் இருந்து விடுதலை பெற முதலாளித்துவ நீதிமன்றத்தின் தயவை நாட முடியாது. இதனைத் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் புரட்சிகர முன்நோக்கின் அடிப்படையில் சுயாதீனமான முறையில் அரசியல் கிளர்ச்சியில் இறங்குவதன் மூலம் மட்டுமே வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியும்.

## அனுரவுக்கு 3 1/2 இலட்சம் நஷ்டஈடு

இந்த விடயத்தை ஊர்ஜிதம் செய்யும் இன்னொரு விடயமும் அனுர பண்டாரநாயக்க தொடர்பான வழக்கில் அடங்கிக் கொண்டுள்ளது. அது உயர்நீதிமன்றம் பண்டாரநாயக்கவுக்கு பெற்றுக் கொடுத்துள்ள நஷ்டஈட்டுத் தொகையாகும். இந்த நீதிமன்றத் தீர்ப்பின்படி மூன்று எதிரிகளும் தலா ரூபா.40000த்தை நஷ்டஈடாக அனுர பண்டாரநாயக்கவுக்கு வழங்க வேண்டும். அத்தோடு ஆளுக்கு ரூபா.10000 வீதம் வழக்குச் செலவும் வழங்கியாக வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக அரசாங்கம் அனுர பண்டாரநாயக்கவுக்கு இரண்டு இலட்சம் ரூபாக்களை நஷ்டஈடாக செலுத்த வேண்டும். இந்தத் தீர்ப்பின்படி மொத்தத்தில் மூன்று இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா அனுர பண்டாரநாயக்கவுக்குக் கிடைக்கும். இத்தகைய ஒரு [illegible] நஷ்டஈடாக வழங்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டதை நீங்கள் வேறு எந்த ஒரு அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட வழக்குத் தீர்ப்பிலும் கேள்விப்பட்டதுண்டா?

வேறுபல அடிப்படை உரிமைகள் பற்றிய பெட்டிசங்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வெறுமனே 'வாரந்து' இல்லாமல் பொலிசார் வீட்டினுள் நுழைந்து சோதனையிட்டது, சோதனையின் பின்னர் "நாம் போய் வருகின்றோம் சேர்"எனக் கூறி வெளியேறியவை பற்றி அல்ல. அவை பலவும் வீடுகளுள் பாய்ந்து வீழ்ந்தவை பற்றியவை மட்டும் அல்ல. வீட்டுத் தளபாடங்கள், பொருட்கள் சகலதையும் தவிடுபொடியாக்கியமை, வீட்டுக்காரரை நம்பர் தகடு இல்லாத வாகனங்களில் கடத்திச் சென்றமை, கைதுசெய்து தடுப்புக் காவலில் வைத்தமை, சித்திரவதைகள், காணாமல் போதல் ஆதியவையை உள்ளடக்கிக் கொண்டிருந்தன. ஆனால் இத்தகைய ஒரு பெரும் பணத் தொகை நீதிமன்றத்தினால் அவர்கள் எவருக்கும் வழங்கப்பட்டது கிடையாது. என் அது? முதலாளித்துவ உயர்நீதிமன்றத்தின் பக்கச்சார்பற்ற தன்மை, நீதி பற்றிய மோசடிகளால் ஏமாந்து போய் இருப்பதைத் தவிர, இந்தக் கேள்விகளை எழுப்பக் கூடாதா? இல்லை. கேள்வி எழுப்புவது நியாயமானது. கேள்வி எழுப்பியதும் பதில் அடங்கிக் கொண்டுள்ளது.

அந்தக் கேள்விக்கு முதலாளித்துவ அமைப்பின் கீழ் இருந்து கொண்டுள்ள பதிலை வழக்குத் தீர்ப்பே எடுத்துக் காட்டுகின்றது. அனுர பண்டாரநாயக்க சம்பந்தமான தமது விசேட பங்களிப்புக்குக் காரணம்: "பெட்டி சம்காரர் திட்டவட்டமான மரபுரிமையைக் கொண்டவர். அவரின் காலம்சென்ற தந்தையார் ஒரு காலத்தில் நாட்டின் பிரதமராக விளங்கியவர். அவரின் தாயார் இன்றைய பிரதமராக விளங்குவதோடு இதற்கு முன்னரும் பல தடவைகள் பிரதமராக விளங்கியவர். பெட்டிசம்காரர் ஏக புத்திரன். இலங்கையின் கௌரவ ஜனாதிபதி அவரின் சகோதரி."

இத்தகைய ஒரு காம்பீரமான மூதாதையர்களைக் கொண்ட ஒருவரையிட்டு பரித்தியாகத்துடன் நடந்து கொள்ளாமல் சிறப்பாக அவருக்கு எந்தவிதமான ஒரு இழப்பும் ஏற்படாத நிலையிலும் இருக்கக் காரணம் உண்டா? உயர்நீதிமன்றத் தீர்ப்பு மேலும் கூறுவதாவது:

"பெட்டிசம்காரர் சுமார் இருபது வருடகாலம் பாராளுமன்ற அங்கத்தவராக இருந்து வருகின்றார். ஒரு காலத்தில் அவர் எதிர்க்கட்சித் தலைவராகவும் அரசாங்க அமைச்சராகவும் விளங்கியுள்ளார்."

காட்டில் "கக்கா" செய்துவிட்டு அதை மூடி மறைக்கப் பூனை செய்யும் முயற்சியைப் போன்று இதைத் தொடர்ந்து "இந்தப் பின்னணி (பெட்டிசம்காரர்) குறிப்பிட்டதாவது சட்டத்தின் எதிரில் அவருக்கு சிறப்புரிமைகள் வழங்குவதற்கு அல்ல" எனவும் வழக்குத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கருத்துக்கு ஏதேனும் ஒரு செல்லுபடியான தன்மை இருப்பின் அனுர பண்டாரநாயக்கவின் பரம்பரை வம்சாவழி மரபுரிமையை நீதிமன்றம் எந்தவிதத்திலும் தொடர்புபடுத்திக் கொண்டது ஏன் என்பது ஒரு பிரச்சினையாகத் தலையெடுக்கின்றது. இத்துடன் தொடர்புபட்ட விதத்தில் இதனுடன் பிணைந்து தலையெடுக்கும் மற்றொரு பிரச்சினை முதலாளித்துவ அமைப்பின் கீழ் அங்ஙனம் கருதாத ஒரு நீதிமன்றம் எந்தவிதத்திலும் இருந்து வர முடியுமா என்பதேயாகும். இதற்குப் பதில் ஒரேயடியாக கிடையாது என்பதேயாகும். காரணம், முதலாளித்துவ அமைப்பின் கீழ் நீதிமன்றம் முதலாளி வர்க்கத்தின் நிர்வாகக் கருவியாக இருந்து கொண்டுள்ளதேயாகும். நீதிமன்றத்தின் சின்னமான தராசை ஏந்திக் கொண்டுள்ள பெண், தனது கண்களை மூடிக் கொண்டிருப்பது ஆளும் வர்க்கத்தின் தராசுத் தட்டம் பரம்பரை மரபுரிமைகளாலும் சொத்துச் செல்வங்களாலும் குவிந்து போய் பளுவினால் அதிகரித்து வருவது தவிர்க்க [illegible]டும் என அவள் முன்கூட்டியே தெரிந்து கொண்டுள்ளதாலேயேயாகும். ஆனால் பொதுமக்கள் அந்த நனவைப் பெறுவது முதலாளித்துவ ஜனநாயகத்தின் நீதி, நியாயம் பற்றிய மகிமையைப் போதிப்பவர்களால் இன்னமும் தவிர்க்கப்பட்டுள்ளது.

முதலாளித்துவ நீதியின் எதிரிலும் அவ்வாறே முதலாளித்துவ சமூகத்தின் சகல துறைகளிலும் கௌரவிக்கப்படுவதும் திட்டவட்டமான சிறப்புரிமைகளினால் கொழுத்துப் பருப்பதும் செல்வந்தர்களே. அது எப்போதும் சொத்துக்களற்ற சமூகத்தின் பெரும்பான்மை மக்களின் இழப்புக்களின் மூலமே இடம்பெறுகின்றது. அனுர பண்டாரநாயக்கவுக்கு வழங்கப்பட்டுள்ள பணத் தொகையின் சுமையும் கூட இறுதியில் பொதுமக்களின் தலைகளிலேயே கட்டியடிக்கப்படுகின்றது.

## முக்கிய விடயம்

நாம் முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய இன்னொரு விடயமும் இருந்து கொண்டுள்ளது. பரம்பரை மரபுரிமைகளிலும் முதலாளித்துவ பாராளுமன்ற திருகுதாளங்களிலும் கிட்டிய வெற்றிகள் பற்றி மிகவும் உஜாராகக் குறிப்பிடும் நீதிமன்றத் தீர்ப்பு, அனுர பண்டாரநாயக்கவின் வாழ்க்கையில் அம்பலமான முக்கியமான பெறுமானங்கள் எத்தகையது? இதையிட்டு நீதிமன்றம் ஒரு துட்டுச் சல்லிக்குத் தன்னும் அக்கறை காட்டியுள்ளதா? அப்பாவினதும் அம்மாவினதும் நடவடிக்கைகள் ஒருபுறம் கிடக்கட்டும்! அனுர பண்டாரநாயக்காவினது 20 வருடகால பாராளுமன்ற வாழ்க்கையில் காட்டிக் கொண்டுள்ள சந்தர்ப்பவாத அரசியல் கழுத்தறுப்புக்கள் நிறைந்த நடத்தைகளை நீதிமன்றம் ஏதேனும் ஒரு விதத்தில் தன்னும் கணக்கெடுத்ததா? கிடையவே கிடையாது. அனுர பண்டாரநாயக்க முதன்முதலாக முகம் கொடுத்த கலவானை இடைத் தேர்தலில் மருமகன் பண்டாரநாயக்க, ஜனாதிபதி ஜயவர்தன மாமாவினை சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கி மன்னிப்புப் பெற்று, எம்.பி.பதவிக்கு தயார் செய்து கொண்ட விதத்தை இவ்வளவு அப்பட்டமாக மறந்துபோய்விட ஒரு முதலாளித்துவ நீதிமன்றத்தினால் மட்டுமே முடியும். இதன்பின்னர் யூ.என்.பி.க்குள் பாய்ந்து கொண்டமையும் மீண்டும் பரம்பரை மரபுரிமைகளின் தலைமை ஆசனம் கேட்டு சி.ல.சு.க.வுக்குள் குதித்ததும், மீண்டும் தலைமயிருக்கும் சேதம் இல்லாத விதத்தில் யூ.என்.பி.க்குள் பாய்ந்து கொண்ட விதம் எல்லாம் குறைந்தபட்சம் அரசியல் ரீதியில் விழிப்பாக உள்ளவர்களுக்கு அப்படி ஒன்றும் இரகசியம் அல்ல. நீதிமன்றம் அனுர பண்டாரநாயக்கவின் பரம்பரை பற்றியும் சிறப்புரிமைகள் பற்றியும் குறிப்பிடுவது இந்த நிஜ வரலாற்றுக்கு முரண்பட்ட விதத்திலாகும். அது முதலாளித்துவ நீதிமன்றத்தின் வர்க்கத் தன்மையை அம்பலமாக்கி வைக்கின்றது.

நாம் இந்த விடயங்களை உங்கள் முன் அம்பலமாக்குவது, முதலாளித்துவ அரசியல் கட்சிகள் அரசாங்கம் அதன் நிர்வாகம், நீதிமன்றம் தொடர்பாக நம்பிக்கை வைத்துக் கொண்டு தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களாகிய எமது ஜனநாயக உரிமைகளைக் காப்பதற்கான வழி கிடையவே கிடையாது என்பதைக் கண்கண்ட சாட்சிகளுடன் நிரூபிப்பதற்காகவேயாகும். எமது ஜனநாயக உரிமைகளுக்கும் அவ்வாறே வாழ்க்கைக்கும் அவசியமாகியிருப்பது, முதலாளித்துவ முறையை ஒழித்துக்கட்டி, சோசலிச சமூக முறையை ஸ்தாபிதம் செய்யும் மாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் மக்களை அணிதிரட்டுவதேயாகும். இந்த வேலைத்திட்டத்தை சோசலிச சமத்துவக் கட்சி முன்வைக்கின்றது. சோ.ச.க.வுடன் இணைந்து அது முன்வைக்கும் வேலைத்திட்டத்தினால் ஆயுதபாணி ஆகுங்கள். இது நாம் தங்களுக்கு விடுக்கும் தோழமைகொண்ட அழைப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்சிச இலக்கியங்களை நீங்களும் வாசியுங்கள்!



### லியொன் ட்ரொட்ஸ்கியும் 20ம் நூற்றாண்டில் சோசலிசத்தின் தலைவிதியும்

டேவிட் நோர்த்



### சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோக்கு

பொது மக்கள் முகம் கொடுக்கும் சகல பிரச்சினைகளும் அவர்கள் ஈடுபட்டுள்ள சகல போராட்டங்களும் முன்நோக்கு, தலைமை பற்றிய அரசியல் பிரச்சினையை உக்கிரமான முறையில் தோற்றுவிக்கின்றது. இந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க, அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தினால் மட்டுமே முடியும். அனைத்துலகக் குழுவின் கிளைகளால் புதிய கட்சிகளை ஸ்தாபிதம் செய்வதானது, முதலாளித்துவ முறைக்கு எதிராக தவிர்க்க முடியாத விதத்தில் போராட்டத்துக்குக் கிளம்பும் மக்களுக்கு சமூக சமத்துவத்தையும் நீதியையும் ஜனநாயக சுதந்திரத்தினையும் கொண்ட மாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆட்சி பற்றிய முன்நோக்கில் வழிகாட்டுவதற்கே.

விலை ரூபா 40.00



### முதலாளித்துவத்தின் மரண ஓலமும்

நான்காம் அகிலத்தின் பணிகளும்

இடைமருவு வேலைத்திட்டம்

நான்காம் அகிலத்தின் ஸ்தாபக மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

விலை ரூ. 15.00




இலங்கையில் ட்ரொட்ஸ்கிசமும் திரிபுவாதமும்

### சமசமாஜ வரலாற்று ஏட்டிலிருந்து

கீர்த்தி பாலசூரிய

விலை ரூ. 15.00



### அடிப்படைக் கொள்கைகளுக்கும், மூலோபாயத்துக்குமான 25 ஆண்டுக்கால உறுதியான போராட்டம்

விஜே டயஸ்

விலை ரூ. 10.00




### இலவசக் கல்வியை காப்பது எப்படி?

விஜே டயஸ்

விலை ரூ. 10.00



ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான போராட்டமும்

### பேர்லின் உலக மகாநாட்டின் முன்நோக்கும்

விலை ரூ. 25.00



ஆகஸ்ட் சதியின் பின்னர்:

### சோவியத் யூனியன் எங்கே செல்கிறது?

விலை ரூ. 25.00



சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதன் பின்னர்

### மார்க்சிசத்துக்கான போராட்டமும் நான்காம் அகிலத்தின் பணிகளும்

டேவிட் நோர்த்

விலை ரூ. 5.00



### நிரந்தரப் புரட்சியும் சோசலிச அனைத்துலக வாதத்துக்கான போராட்டமும்

கீர்த்தி பாலசூரிய நினைவுப் பேருரை

டேவிட் நோர்த்

விலை ரூ. 8.00

தொழிலாளர் பாதை வெளியீடு, 90, [illegible] கொழும்பு 10. தொலைபேசி: 682220


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் அடுத்த குண்டுத் தாக்குதல் யாருக்கு?

1ம் பக்கத் தொடர்ச்சி

வாதத்தினை ஒரு நல்நெஞ்சம் படைத்ததாகக் கொண்டால் ஒரு ஆபத்தான கேள்வி தோன்றுகின்றது: தமது எல்லைகளுக்குள்ளே வாழும் இனக்குழு அல்லது தேசிய சிறுபான்மையினரின் உரிமைகளை மீறும் சகல இறைமை கொண்ட அரசுகளுக்கும் எதிராகத் தனது இராணுவ பலத்தைப் பிரயோகிக்கும் உரிமையை அது வலியுறுத்துகின்றதா?

## இலங்கை

விடயம் அப்படி இருக்குமானால் வாஷிங்டன் ஒரு தொகை நாடுகள் தொடர்பான தனது மனப்பாங்கினை தீவிரமானமுறையில் மாற்றிக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளது. உதாரணமாக இது இலங்கையில் தமிழ் தேசியவாதத்தின் நலன்களைத் தழுவிக் கொண்டு , தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறும் இரத்தம் தோய்ந்த யுத்தத்தைத் தொடர்ந்து நடாத்திவரும் கொழும்பு ஆட்சியாளர் களுக்கான தனது ஆதரவை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

கொசோவியர்களுக்கு எதிராக மிலோசேவிக் கடைப்பிடிப்பதைக் காட்டிலும் படுகொடூரமான பொலிஸ் இராணுவ அடக்குமுறைக் கொள்கையை துருக்கியின் கணிசமான குர்திஷ் சிறுபான்மையினருக்கு எதிராகக் கடைப்பிடிக்கும் இன்றைய நேட்டோவின் கூட்டாளியான துருக்கிக்கு எதிராக இராணுவ நடவடிக்கைக்குத் தயார் செய்ய வேண்டும்.

பாஸ்குவில்( ) பல தசாப்தங்களாக ஸ்பெயின் நடாத்திவரும் அடக்குமுறைகளின் நிலைமை என்ன? ரூஷ்யாவில் செசினியா, ஒசெட்டியா நிலைமை என்ன? அசர்பைசானின் நாகொர்னொ கரபாக்? நாம் இன்னும் சற்று கிழக்கே திரும்பினால் இந்தியாவின் காஷ்மீர் முஸ்லீம் மக்களுக்கு எதிராக கொதிக்கும் போராட்டத்தைக் கண்டு கொள்ளலாம். ஆபிரிக்கக் கண்டத்தின் மேலாதிக்கம் படைத்த குழுக்கள் சிறுபான்மை ஆதிவாசிகளுக்கு எதிராக நடாத்தும் அளவுகணக்கற்ற மோதுதல்களால் நிறைந்து போயுள்ளது.

பாலஸ்தீனியர்களின் உரிமைகளுக்கு எதிரான பல தசாப்தகால இஸ்ரேலின் அடக்குமுறைகளுக்கு இடையேயும் அமெரிக்கா இஸ்ரேலுக்கு வழங்கும் ஆதரவை நாம் மறந்துவிடக் கூடாது.

அமெரிக்க எல்லைகளுக்கு நெருக்கமாக சிறுபான்மையினர்கள் கனடாவின் குவிபெக்கிலும் மெக்சிக்கோவில் மாயான் இந்தியர்கள் சியாபாசிலும் நடாத்தும் தேசியப் பிரச்சாரங்களின் நிலைமை என்ன? பென்டகன்(அமெரிக்க பாதுகாப்பு அமைப்பு) ஒட்டாவாவிலும் மெக்ஷிக்கோ நகரிலும் தனது தளத்தில் பயிற்சியளிக்கக் கூடாதா?

தனது குண்டுகளையும் ஏவுகணைகளையும் தேசிய அடக்குமுறைக்கு எதிரான எந்த நியாயமான போராட்டத்துக்கு எதிராக ஏவ வேண்டும் என்பதற்கும் எந்த நாட்டைத் தாக்க வேண்டும் என்பதை நிர்ணயம் செய்வதற்குமான கொள்கையை நிர்ணயம் செய்யும் வாஷிங்டனின் அளவுகோல் என்ன? உண்மையில் அத்தகைய அளவுகோல்கள் ஒரு போதும் முன்வைக்கப்பட்டது கிடையாது. அதனிடம் அத்தகைய ஒன்று கிடையாததே அதற்கான காரணமாகும்.

உலகம் பூராவும் இடம்பெறும் ஒரு தொகை இனக்குழு, தேசிய இனப்பிரச்சினைகள் தொடர்பான அரைகுறை விபரங்கள் அமெரிக்காவின் கொள்கை, சில உலகளாவிய தார்மீக கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவை அல்ல என்பதை அம்பலமாக்குகின்றது. இதற்கு மாறாக வாஷிங்டன் தேசிய சிறுபான்மையினர்களை திட்டமிட்டு நசுக்கும் ஒரு தொகை நாடுகளை முழுமூச்சுடன் ஆதரிக்கின்றது.

உண்மையில் எந்த ஒரு குறிப்பிட்ட விடயத்திலும் அமெரிக்காவின் மனப்பாங்கானது அமெரிக்க முதலாளித்துவ ஆளும் கும்பலின் பொருளாதார, புவியியல் நலன்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். மிகவும் ஆரம்ப நிலையிலான ஒரு புறநிலை ஆய்வும் கூட: அமெரிக்காவின் கொள்கை முற்றிலும் சந்தர்ப்பவாதமும் சூழ்ச்சியும் நிறைந்தது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இந்த உண்மைகளை அமெரிக்க மக்களின் கண்களில் இருந்து மறைப்பதற்கு வாஷிங்டன் அரசாங்கம் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் தன்னும் கிளின்டன், மடிலெயின், அல்பிரைட் அன்ட் கம்பனியின் பொய்களையும் தகிடுதத்தங்களையும் சவால் செய்ய முன்வரவில்லை.

கிளின்டன் நிர்வாகம் யூகோசலாவியா மீதான குண்டு வீச்சுக்கான ஒரு அடிப்படைக் காரணத்தை உலகின் எந்த ஒரு பாகத்திலும் அமெரிக்கத் தலையீட்டை நியாயப்படுத்துவதற்கான வாதமாக முன்வைத்துள்ளது. சூழ்நிலைகள் மாற்றம் காணும் நிலையில் இன்றைய "முதிர்ச்சி கண்ட ஜனநாயகம்" ஒரு இரவில் நாளைய "கடைகெட்ட அரசாக" மாறுகின்றது. மேலும் இது சமாதானத்துத்துக்கும் ஜனநாயகத்துக்கும் மனித உரிமைகளுக்குமான பாதைகளை முன்வைப்பதற்கு மாறாக அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகை மேலும் தன்னாதிக்கத்திற்குள் கொணரும் முயற்சியாக பல்வேறுபட்ட தேசிய, இனக்குழுக்களின் பிரச்சினைகளை சூறையாடவும் சாதுரியமாகக் கொள்ளையிடவும் ஒரு அரசியல் திட்டவரைவை வழங்குகின்றது.

நீண்டகாலமாக பால்கனில் இதுவே மேற்கத்தைய ஏகாதிபத்திய செயல்பாட்டின் விதிமுறையாக விளங்கி வந்தது. கடந்த நூற்றாண்டு வரையும் பெரும் வல்லரசுகள் ஜேர்மனி, ரூஷ்யா, பிரித்தானியா, பிரான்ஸ் இந்தப் பிராந்தியத்தில் பல்வேறு தேசிய இனக்குழுக்களின் வீரர்களாகத் தம்மைக் காட்டிக் கொண்டு மத்திய ஐரோப்பாவில் தமது போட்டிக் கோரிக்கைகளையும் நலன்களையும் முன்வைப்பதற்காக அடிக்கடி தம்மிடையே மோதுதல்களை தூண்டிவிட்டு வந்தனர். இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்கா இந்தக் கொள்கைகளின் நயவஞ்சகமும், ஈவிரக்கமற்றதுமான பிரதிநிதியாகத் தலைநீட்டியது. இதனால் இப்பிராந்திய மக்களுக்கு பேரழிவுமிக்க பெறுபேறுகளைக் கொணர்ந்தது.

## வோல் ஸ்ரீட் ஜேர்னல்

மார்ச் 26ம் திகதிய வோல் ஸ்ரீட் ஜேர்னல் இந்தக் கொள்கை அமுலின் முழு அறியாமை[illegible] ரண்டின்( ) முலோபாய ஆய்வுகளின் பணிப்பாளரான சல்மே காலில்சாட் எழுதுகையில் இது அமெரிக்காவை கொசோவா விடுதலை இராணுவத்தை ஆயுதபாணியாக்கும்படியும் அதனைப் பெல்கிரேட் ஆட்சியாளர்களுக்கு எதிரான எதிர்ச் சக்தியாகப் பயன்படுத்தும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார். இதைப்பற்றிக் குறிப்பிடுகையில் இவர் மேலும் கூறுவதாவது: "சமபலநிலைகள் மாற்றம் காணும் நிலையில் பெல்கிரேட் மேற்கத்தைய நாடுகளின் கோரிக்கைகளை விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ளும் சாத்தியம் இருந்து கொண்டுள்ளதாக" இவர் எழுதுகின்றார்.

அமெரிக்கக் கொள்கைத் திட்டமிடலாளர்களின் உதாசீனத்தைச் சுட்டிக்காட்டும் விதத்தில் வோல் ஸ்ரீட் ஜேர்னல் பத்திரிகையாளர் பிரகடனம் செய்வதாவது: "கொசோவா விடுதலை இராணுவத்துக்கும்( ) அத்தோடு மசிடோனியா விடுதலை இராணுவத்துக்கும் பெரும் அளவு புகலிடம் தர அமெரிக்காவும் நேட்டோவும் தயாராக இருந்தால் மட்டுமே அக்கொள்கை பயனளிக்கும்" என அவர் பிரகடனம் செய்கின்றார். கள்ளங்கபடமற்ற சிடுமுஞ்சித்தனத்தோடு காலில் சாட் கூறுவதாவது: "ஒரு ஆயுதக் கிளர்ச்சியை ஆதரிப்பதானது வாஷிங்டனின் கரங்களைக் கட்டிப்போட்டுவிடாது. அமெரிக்கா நிலைமை எப்படிக் கொசோவாவிலும் பெல்கிரேட்டிலும் அபிவிருத்தி காண்கின்றது என்பதைப் பொறுத்து அதனது உதவியைச் சீரமைத்துக் கொள்ள முடியும்."

வாஷிங்டன் தனது இராணுவத் தலையீட்டை அடுத்து எங்கு பிரயோகிக்கப் போகின்றது? அமெரிக்க இராணுவவாதம் அடுத்து வெடிக்கப் போகும் இடங்களில் முக்கியமான சிலவற்றின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

உலகம் பூராவும் உள்ள மக்கள் எதிர்வரும் மாதங்களில் அமெரிக்க வெகுஜனத் தொடர்புச் சாதனங்களை நெருக்கமாகக் கணிக்கும்படி ஆலோசனை கூறப்பட்டுள்ளனர். உதாரணமாக நியூயோர்க் டைம்ஸ் அல்லது நெட்வேக் செய்திகள் திடீரென தீபெத்தின் நிலைமையையிட்டு பெரும் அக்கறை காட்டி வருகின்றனர்.

இதனைச் சன எதிர்ப்பு இராணுவவாதம் அமெரிக்காவினுள் வளர்ச்சிகண்டு வருவதற்கான ஒரு சாட்சியாக எடுப்பது புத்திசாலித்தனமானது.

எந்த ஒரு நாடும் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் அமெரிக்காவின் மிகவும் நெருக்கமான "கூட்டாளிகள்" உட்பட மிகவும் பலம்வாய்ந்த போட்டியாளர்கள் இறுதியில் பாதுகாப்பாக விளங்க முடியாது. சமாதானம், ஜனநாயகம், பற்றிய மட்டரகமான பேச்சுக்களின் பின்னணியில் அமெரிக்க ஏகாதிபத்தியம் பேரழிவுகளைக் கொண்ட ஒரு பூகோளரீதியான மேலாதிக்கத்துக்கான கப்பலில் எறிக் கொள்ள முயற்சிக்கின்றது.



19.கொசோவாவில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் நடாத்திவரும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களில் மக்களின் அவலங்களைக் காட்டும் படம்

# மக்களின் வாழ்க்கை அவலங்களை காட்டுகிறது

14ம் பக்கத் தொடர்ச்சி

பெறுமதியாய் இருக்கும்.? என அவர் கேட்டார்.

இனவாத யுத்தம் எற்படுத்தியுள்ள நாசங்கள் பற்றி முல்லைத் தீவிலிருந்து வந்துள்ள சிறு வர்த்தகர் கூறியதாவது: இப்பிரதேசத்தில் 6 மாதத்திற்கு மாத்திரமே மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட முடியும். அக்காலத்திலும் கடலுக்குச் செல்லத் தடை விதிக்கப்படும். மீனவர் சங்கமும் இதைக் கட்டிப்பிடித்துக் கொண்டுள்ளது. விடுதலைப் புலிகளுக்கு நாம் உதவி விடுவோம் எனக் கூறியே இவ்வாறான தடைகள் விதிக்கப்படுகிறது. லட்சக் கணக்கில் வள்ளங்களுக்கும், வலைகளுக்கும் பணம் செலவழித்து வாங்கி வைத்துள்ள நிலைமையிலேயே இவ்வாறுள்ளது.

"முன்னைய காலங்களில் திருகோணமலைப் பக்கம் செல்வோம். இப்போது யுத்தம் காரணமாக அதுவும் முடியாது. இந்த கடைசி ஆறு மாதங்களும் மிகவும் துரதிஷ்டமானதாகும்."

பொலிஸ் ஒடுக்குமுறைகளுக்கு உடப்பு "குட்டி யாழ்ப்பாணம்"ாக" பேர் சூட்டப்பட்டுள்ளது. உடப்பு பகுதியில் பொலிஸாரால் கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்கள் இனவாத பத்திரிகைகளாலும் மற்றும் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்பு சாதனங்களாலும் விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்களாக பேர் சூட்டப்படுகின்றனர்.

உடப்பு மக்கள் முகம் கொடுக்கும் போக்குவரத்து கஷ்டங்கள் பற்றி பேசுகையில் அவர்கள் கூறியதாவது" இன்னமும் உடப்பு சந்தி வரை மாத்திரம் தான் வாகனங்கள் வருகின்றன. அதற்கு அப்பால் 3.4 கிலோ மீட்டர்கள் நடந்தே செல்ல வேண்டும். இந்த தூரத்துக்கு போய் திரும்பி வருவது சாதாரணமானதல்ல. பொருட்கள் வாங்குவோர், நோயாளிகள், பாடசாலை போய் வருவோர் சகலரதும் நிலைமை இதுவே.

இத்தகைய ஒரு கஷ்டமான நிலைமையின் கீழும், சோ .ச .க. கூட்டத்திற்கான பிரச்சாரம் வெற்றியளித்தது. மற்றைய சகல அரசியல் கட்சிகளையும் வெறுத்துள்ள மக்கள், சோ ச.க. நடவடிக்கைகள் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். சோ.ச.க.வின் அரசியல் முன்னோக்கை கலந்துரையாட பலர் முகவரிகளைத் தந்தனர். 150க்கும் அதிகமான தொழிலாளர் பாதை பத்திரிகைகள் விற்பனையாகின. கட்சி நிதிக்கு ரூபா 4000 த்துக்கும் அதிகமான நிதி திரண்டது. கூட்டத்திற்கு 50க்கும் அதிகமானோர் வருகை தந்திருந்ததோடு. வடக்கிலிருந்து வந்த சோ.ச.க. பேச்சாளர்களின் மக்கள் கரகோசம் செய்து வரவேற்றனர்.

விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யக் கோரி இடம் பெற்ற சோ.ச. க அரசியல் தலையீடுகளும், அதன் தாக்கம் காரணமாக அத்தோழர்கள் விடுதலையானதும், சோ ச க.வுக்கும், தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கும் இடையிலான நெருக்கம் அபிவிருத்தி கண்டு வருவதைக் காட்டுகின்றது. உடப்பு பகுதியிலிருந்து இந்த பிரச்சார இயக்கத்தின் ஒரு பாகமாக, கொழும்பில் இடம்பெற்ற பகிரங்கக் கூட்டம், மறியல், விரிவுரைகளுக்கு மக்கள் வருகை தந்திருந்தமை இதை சுட்டிக்காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகம் பூராவும் வெடிக்கும் தொழிலாளர் போராட்டங்கள்

## அவுஸ்திரேலியா

### சுரங்கத் தொழிலாளர் 146 பேர் கைது

வேலை நீக்கங்களுக்கு எதிராக மறியல் நடாத்திய, அவுஸ்திரேலிய மத்திய குயீன்ஸ்லாந்து எமரல்ட் பிரதேசத்தின் கோடஸ்டோன் நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்கள் பெருமளவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பெப்ரவரி 23ம் திகதி வரை மட்டும் இரு வாரங்களுள் 146பேர் கைது செய்யப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

சுரங்கத் தொழிலாளரின் மறியல் போராட்டத்திற்கு எதிராக 250 கருங்காலிகளை பஸ்களில் ஏற்றிச் செல்ல முயன்ற பொலிஸாருக்கும் தொழிலாளருக்கும் இடையில் மூன்று மணி நேரமாக நடந்த மோதலை பயன்டுத்தி இக்கைதுகள் இடம்பெற்றுள்ளன. முதலில் 22 தொழிலாளரைக் கைது செய்த செய்தி பரவியதும் சுரங்கத் தொழிலாளர்கள் தேசிய ரீதியில் வேலை நிறுத்தத்தில் இறங்கப்போகும் செய்தி பரவியதைத் தொடர்ந்து, வன வள, சுரங்க மின்சக்தி சேமிப்பு தொழிற்சங்கத் தேசியத் தலைமைகள் உடனடியாகத் தலையீடு செய்து அதனை நிறுத்திவிட்டன.

கோடஸ்டொன் தொழிலாளர் பிரச்சனையானது, அதன் முன்னைய உரிமையாளரான வினால் சுரங்கம் மூடப்பட்டு தொழிலாளரை விலக்கி சேவை நிலைமைகளை வெட்டி, தொழிற்சங்கத்தில் சேராத புதிய தொழிலாளரை பயன்படுத்தி மீண்டும் சுரங்கத் தொழிலை ஆரம்பிக்க முயற்சி எடுக்கப்பட்ட சமயத்தில் வெடித்தது.

## ஜப்பான்

### வங்கி ஊழியர் 290 பேர் வேலை நீக்கம்

ஜப்பானிய அரசுக்கு சொந்தமான நிபொன் ஸ்டேட்ஸ் கிரடிட் வங்கி மறுசீரமைப்புத் தயாரிப்பில ஈடுபட்டுள்ளது. அதன் ஒரு பாகமாக வங்கி ஊழியர்கள் 2090 பேரில் 290 பேரை வேலை நீக்கம் செய்ய, தீர்மானித்துள்ளது. இது தவிர ஓய்வு பெற்ற நிர்வாக அதிகாரிகள் பதினாறு பேருக்கு, இதுவரை வழங்கப்பட்ட ஓய்வூதிய கொடுப்பனவின் ஒரு பங்கினை, திரும்பச் செலுத்திவிடுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. வங்கி அதிகாரி ஒருவரின் கூற்றுப்படி, தனிப்பட்ட ரீதியிலான இந் நடவடிக்கையானது, அதாவது செலவீன வெட்டு நடவடிக்கையானது, கடந்த ஆண்டு செலவழிந்த 30 கோடி யென்களை அரைவாசியாக குறைக்கும் முகமாகவே எடுக்கப்பட்டுள்ளதாம்.

அண்மைக்கால புள்ளி விபரங்களின்படி ஜப்பானில் வேலையில்லாதவர் தொகை முன்னொரு போதும் இல்லாத மட்டத்தில் 4.4 வீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தெரிகிறது. தற்போதய புள்ளி விபரப்படி ஜப்பானில் 298 மில்லியன் மக்களுக்கு வேலையில்லை.

## இந்தியா:

### வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம்

பத்து இலட்சத்துக்கும் அதிகமான இந்திய வங்கி ஊழியர்கள் பெப்ரவரி 25 26 ம் திகதிகளில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். 18 சத வீத சம்பள அதிகரிப்பை வேண்டி அகில இந்திய வங்கி ஊழியர் சங்கமும், ஐக்கிய வங்கி ஊழியர் தொழிற் சங்கமும் (யூ என் எப் பீ யு) இந்த வேலை நிறுத்தத்தில் குதித்தன. ஆயினும் இந்திய வங்கியாளர் சங்கம் தற்போது அதிகரித்துள்ள 10 சதவீத உயர்வுக்கு மேலாக வழங்க முடியாதென மறுத்துள்ளது.

வேலை நிறுத்தத்தால் வங்கி நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வேலை நிறுத்தத்திற்கு ஆதரவளிக்கும் முகமாக, லிகிதர்கள் வேலையை இடை நிறுத்தியுள்ளதால், ரிசேவ் வங்கி வர்த்தக நடவடிக்கைகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. நாட்டின் வர்த்தக தலை நகரான மும்பாயில் தனியார் வர்த்தக வங்கிக் கிளைகளில் 1500க்கும் அதிகமான ஊழியர்கள் வங்கிக் கிளைகளை மூடிவிட்டு நகரில் ஊர்வலமாக சென்றுள்ளனர்.

மார்ச் 8ம் திகதிக்குள் தமது கோரிக்கை நிறைவேற்றப்படாத பட்சத்தில் பாந்தளவில் வேலை நிறுத்தம் செய்யவுள்ளதாக ஊழியர்கள் கூறுகின்றனர். எனினும் தலைமைகள் தற்போதே பிரதான கோரிக்கைகளிலிருந்து குழிபறிந்து போக விருப்பம் தெரிவித்துள்ளன.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்க பிரதம செயலாளர் நரகேஸ்வர் சந்திரபோதி "18சதவீத அதிகரிப்பு கோரிக்கையிலிருந்தும் கீழிறங்க நாம் தயாராயிருப்போம்" என பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

## இந்தோனேஷிய தொழிற்சாலை ஊழியர் பொலிஸாருடன் மோதல்

கிழக்கு ஜாவா சிதேர் ஜோகியிலுள்ள சியன்னார் டொப் தொழிற்சாலையில் 600 தொழிலாளர் கடந்த பெப்ரவரி 23ம் திகதி பொலிஸாருடன் மோதுதலில் ஈடுபட்டனர். அவர்களது சமூக நலன்புரி சேவை பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு ஊர்வலம் செல்ல முயன்ற தொழிலாளரை தடுக்க பொலிஸார் தலையிட்டனர். இச்சமயத்தில் தொழிலாளர்கள் பொலிஸாருக்கு கல்லெறிய பொலிஸார் தொழிலாளரை கட்டியடித்தனர். விசாரணைக்காக பொலிஸார் மூன்று தொழிலாளரை கைது செய்து தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

பெப்பிரவரி 4ம் திகதி சிதேர்ஜாவில் உள்ள ராஜபக்ஜி அத்யா பெர்காஸ் தொழிற்சாலையில் தொழிலாளர் 250பேர் நிறுவனத்தின் வேலை வெட்டு தயாரிப்புக்கு எதிராக சிதேர்கா டி பி ஆர் டி ( பிரதேச நீதிமன்ற சம்மேளனம்) அலுவலகத்திற்கு ஊர்வலம் சென்றுள்ளனர்.

அதே தினத்தில் கைத்தொழிற் பகுதியான சுரபயாவிலுள்ள லக்கி டொபி, பொசேட் , சிடி சினார், இந்து மொகத்தாரா, பழுநேஷியா ஆகியத் பக்டரிகளில் வேலை செய்யும் 1300 தொழிலாளர்கள் பேர் சிறந்த உணவு, போக்குவரத்து நிவாரணம் கோரி ஊர்வலம் நடத்தியுள்ளனர். அவர்களது உணவை டொலர் 0.07 லிருந்து 0.15 ஆகவும் 0.01 லிருந்து 0.06 ஆகவும் கூட்டுமாறு கோரியுள்ளனர்.

இதே சமயம் சிடி மாஸ்பியன் பக்டரியில் இலக் ரோனிக் 1ம் பிரிவில் 4 றக் வாகனங்களில் வந்த தொழிலாளர் சுரபயாவின் சட்ட உதவி சேவையிலுள்ள அலுவலகம் முன் பெருமளவிலுள்ள நெரிசலுக்கு எதிராக எதிர்ப்புத் தெரிவித்தனர். பெப்ரவரி 25ம் திகதி ஊர்வலமாக சென்ற 1110 தொழிலாளர் நிறுவனத்தினால் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

## சீனாவில் சுரங்கத் தொழிலாளர் இறப்பு அதிகரிப்பு

சீனாவின் வடகிழக்குப் பிரதேசத்தில் ஹெயிலோன் பியானில் நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிப்பினால் பெப்பிரவரி இருதி வாரத்தினுள் 48 தொழிலாளர்கள் இறந்துள்ளனர். குய் காயினே என்ற இச் சுரங்கத்தில் அதிகாலைஇடம்பெற்ற நத பாரிய வெடிப்பினால் மிதேன் வாயு பரவியமை இம் மரணத்திற்கு காரணமாகும். சீனாவில் நிலக்கரி சுரங்கங்களில் கடந்த ஆண்டு ஏற்பட்ட அழிவுகளால் 7500 க்கும் மேற்பட்ட உயிர்ச் சேதம் நிகழ்ந்துள்ளது. சீனாவில் சுரங்கத் தொழில்களில் ஒன்று அனுமதிப்பத்திரமின்றி நடத்தப்படுபவையாகும். எனினும் குறித்த பாதுகாப்பு நிலைமை தொடர்பாக, பிரதேச அரச அதிகாரிகள் கண்களை மூடிக் கொண்டுள்ளனர்.

---


**மே தினக் கூட்டமும் ஊர்வலமும்**

**21 வது நூற்றாண்டுக்கு அனைத்துலக சோசலிசத்தின் அடிப்படையில் தயாராகுவோம்!**

ஊர்வலம் : நியூஹாம் சதுக்கம், கொச்சிக்கடை.
மே 1 பி.ப.1மணி

கூட்டம் : இரத்தினம் மைதானம்,
மாலை 4 மணி, கொட்டாஞ்சேனை

சோசலிச சமத்துவக் கட்சி,
இளம் சோசலிஸ்டுகள்.




சந்தா (தபால் கட்டணம் உட்பட) .

| | |
|---|---|
| இதழ் 3 | ரூ.27 |
| இதழ் 6 | ரூ.54 |
| இதழ் 12 | ரூ.108 |
| இதழ் 24 | ரூ.216 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு 10 .
தொ.பே. 682220

**சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்**

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . . திகதி . . . . . . . .

இக் கூப்பன்னை அனுப்ப வேண்டிய முகவரி
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு 10 .
தொ.பே. 682220



90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தபால் ஜயசேகர ஆகிய என்னால் 749, அவிசாவளை வீதி, வெல்லம்பிட்டியில் உள்ள லங்சன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org